கோகுலம்


GOKULAM

ஜூலை '94 ரூ. 3.00





என் மனம் கவர்ந்த நண்பர்கள் இவர்களே.
என்றென்றும் நான் பாதுகாப்பேன் இவர்களை.
கோரஸ் வழங்கும் பளிச்சென்ற அழகிய வண்ணங்
களைக் கொண்டு கண்ணைக் கவரும் படம் ஒன்றை
பெயின்ட் செய்யுங்கள். பொக்கிஷம் போன்று என்றென்றும் அதை
பாதுகாத்திடுங்கள். போஸ்ட்டர் கலர்கள், வாட்டர் கலர்கள், வேக்ஸ்,
ஃப்ளோரஸண்ட், ப்ளாஸ்டிக் க்ரேயன்கள் என களஞ்சியமாகக் குவிந்துள்ள ஆர்ட்
மெட்டீரியல்களிலிருந்து வேண்டியவற்றை தேர்ந்தெடுங்கள். போஸ்ட்டர்கள்,
பர்த்டே கார்டுகள், க்ரீட்டிங் கார்டுகள் மற்றும் ஸ்கூல் ப்ராஜக்டுகளை தயாரியுங்கள்.
kores FLUORESCENT CRAYONS
kores Cobalt Blue POSTER COLOUR
kores Poster Red POSTER COLOUR
kores WATER COLOURS
கோரஸ்
kores STUDENTS' CAKES
இலவசம்!
வண்ணம் தீட்டுவதற்கென கண்கவர் வரை படம்.
உங்கள் பெயர் மற்றும் முகவரி தெளிவாக
எழுதப்பட்ட (ஆங்கிலத்தில் எழுதினால் உசிதம்)
1 ரூபாய் தபால் உறையை இம் முகவரிக்கு
அனுப்பவும்: கோரஸ் (இந்தியா)லிட்.,
தபால் பெட்டி 6558, பம்பாய் 400 018.
கோரஸ் ஸ்டூடன்ட்ஸ் ஆர்ட் மெட்டீரியல் கொண்டு வண்ண மயமான உலகைப் படைத்திடுங்கள்
AKA-593-TM



கோகுலம்

1994
ஜூலை
மாத இதழ்
மலர் : 12
இதழ் : 6

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்



அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

அப்பாடி! ஒரு வழியாகக் கோடை விடுமுறை முடிந்தது. கோகுலம் அலுவலகம் கடிதக் கடலாகவே மாறி விட்டிருந்தது! அப்பா! எத்தனை விதமான படைப்புகள்! போட்டி என்றாலே, தூங்கிக் கொண்டிருந்தால் கூட எழுந்து 'விசுக்' கென்று உட்கார்ந்து கொள்ளக் கூடிய அளவுக்கு ஆயிரக்கணக் கானவர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆர்வத்தைக் காட்டியிருக்கிறீர்கள்.

ஓர் ஆண்டு காலமாக நம்மையெல்லாம் மகிழ்வித்து வந்த அபிராமி, இந்த இதழில் நம்மிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறாள். நாடகம் எழுதுவதில் வல்லவரான கூத்தபிரான், ஆவலைத் தூண்டும் வண்ணம் தன்னால் தொடர் கதையையும் படைக்க முடியும் என்பதை நிரூபித்து விட்டார். அபிராமிக்கு அன்பு விடை தருவோம்.

ஒரு கதையில் குழந்தைகள் கதாபாத்திரங்களாக வந்து விட்டாலே அது குழந்தைகளுக்கான கதை என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது பற்றிப் பலர் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். கதையின் கருத்து, சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். சிறுவர் சிறுமியர் பாத்திர்ங்களாக வந்து விட்டாலே அது சிறுவர் கதையாகி விடாது. அதன் அணுகுமுறையும் சிறுவர் கண்ணோட்டத்தில் இருக்க வேண்டும். சிறுவர்க்காக எழுத விரும்புவோர், கோகுலம் பழைய இதழ்களைத் திரும்பத் திரும்பப் படித்தால், அவை குறித்துச் சிந்தித்தால் எப்படி, எந்தக் கோணத்தில் கதையை அமைக்க வேண்டும் என்பது புலனாகும். இடமின்மையால் பிருந்தாவனக் கவியரங்கம் வெளியாகவில்லை.

'கலைப் பொருள்களைச் செய்யுங்கள்' பகுதி இந்த இதழில் தொடங்குகிறது. புதிய தொடர்கதைக்கான அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

விடுமுறையைக் கழித்ததைப் பற்றி எழுதலாமே?

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.


அன்புடன்,

ரேவதி


(கௌரவ ஆசிரியர்)

கோகுலம்

ஜூலை '94 இந்த இதழில்



* கலைப் பொருள் செய்யுங்கள் – பக்கம் 88



* நாய்–சில தகவல்கள் – பக்கம் 81



* அவசர தேவதை – பக்கம்- 20

பெற்றோருக்கு உதவினேன்!

சிறுவர்கள் பெற்றோர்களுக்கு உதவியாக இருப்பது என்பது மெது வாகக் குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுவது சிறுவர்மேல் திணிக்கப்படும் கல்விச்சுமையும், அவர் களைக் கவர்ந்து இழுக்கும் பொழுதுபோக்கு (வானொலி, டி.வி, விடியோ, திரைக்காட்சி, கம்ப்யூட்டர் கேம்ஸ் உட்பட) அம்சங்களுமே என்ற எண்ணம் கிராமத்துப் பெற்றோர்களுக்கு உண்டு. ஆனால், கல்விச் சுமை எவ்வளவுதான் இருந்தாலும், பொழுது போக்கு அம்சங் கள் எத்தனைதான் இருந்தாலும் இவைகளை ஒதுக்கிவிட்டுப் பெற் றோருக்கு உதவ ஓடிவரும் சிறுவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதற்கு அடிப்படையாக இருப்பது பெற்றோர்களிடம் அவர்களுக்கு இருக்கும் அன்பும், அவர்களுடைய பொறுப்பில் நாமும் இயன்றவரை பங்கு கொள்ள வேண்டும் என்ற துடிப்பும். தாங்கள் பெற்றோருக்கு உதவி வருவதை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சில சிறுவர், சிறு மியர் பெருமையோடு உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். உங்கள் அனுபவத்தையும் எழுதி அனுப்பலாமே?

நாங்க விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவங்க. மழையை நம்பித்தான் பிழைப்பை நடத்துனும். நிலத்தை உழுது விதை விதைச்சிட்டு எப்படா மழை வரும்னு வானத்தைப் பார்த்திட்டிருப் போம். நான் கடவுள்கிட்ட மழை நல்லா கொட்டணும்னு வேண்டிப் பேன். நான் வேண்டிகிட்ட கொஞ்ச நாளைக்கெல்லாம் மழை வந்திடும். நாம வேண்டிகிட்டதால தான் மழை வந்திருக்குன்னு மனசுல மகிழ்ச் சியா இருக்கும். நான் தினமும் எங்கப்பா, அம்மாவுக்கு என்ன உதவி செய்யரேன்னு கேக்கறீங்களா? தினமும் எங்க மாட்டைக் குளிப்பாட்டி, கொட்டகையில் இருக் கும் சாணிக்குவியலை அப்புறப்படுத்து வேன். குடிசையை சுத்தி இருக்கும் களைச் செடி களை அப்புறப்படுத்து வேன். ஸ்கூல் லீவு நாட்களில் வயல்ல வேலை செய்யும் எங்கப் பாவுக்கு சாப்பாடு கொண்டு போவேன். தோப்பில் போய் அடுப்பெரிக்க சுள்ளி பொறுக்கி வருவேன். சுள்ளி பொறுக்கும் போது சில சமயம் பாம்பெல்லாம் பார்த் திருக்கேன். திடீர்னு அப்பா கூப் பிட்டு, ஏதோ உரம் பேர் சொல்லி டவுனுக்குப் போய் வாங்கியாரச் சொல் வாரு. அதையும் முகம் கோணாமச் செய் வேன். நாம எப்பப் பணம் கேட்டாலும், எந்தப் புத்தகம் கேட்டாலும் வாங்கித் தரும் அப்பாவுக்கு இதுக் கூடச் செய்லேன்னா எப்படி?

நான் படிப்பில் கொஞ்சம் வீக்தான். இருந்தாலும் எப்பவும் ஃபெயில் ஆன தில்லை...! ஆகவும் மாட்டேன்.!

- எஸ்.ராஜசேகர்

எனக்கு அப்பா இல்லே! எங்களுக்கு சொந்தமா கொஞ்சம் நிலம் இருக்கு. இந்த சீஸன் தக்காளி பயிரிட ஏற்றதுன்னு எங் கம்மா தக்காளிச் செடி போட்டிருக்காங்க. நிலத் தை ஆடு மாடு மேஞ் சிடக் கூடாதுன்னு நான், எங்கம்மாவோட சேர்ந்து முள்வேலி அமைச்சேன். கடவுள் அருளால எல்

லாச் செடிகளும் செழிப்பா வளர்ந்திடுச்சி!

தினமும் ஒரு கூடை தக்காளிப்பழம் காய்க்கும். சாயந்திரம் ஆறுமணிக்கெல்லாம் அறுத்திடணும். இல்லேன்னா அழுகிப்போயிடும். நான் படிக்கிற பள்ளி அருகில் இல்லே. தினமும் ஆறுகிலோ மீட்டர் பஸ் ஏறிப்போய் படிச்சிட்டு வரணும். ஸ்கூல் விட்டதும் வீணாப் பொழுதை ஓட்டாம பஸ் பிடிச்சி ஊருக்கு வந்திடுவேன். நிலத்தைப் பார்க்கப் போயிடுவேன். நல்ல பழுத்த பழங்களைப் பார்த்து அறுப்பேன். கூடை நிரம்பியதும் அதை கோணிப்பைல கட்டிவிடுவேன். மறுநாள் அதிகாலை நாலு மணிக்கே போய் அதை விக்கணுமே! அதை வித்துத்தானே குடும்பம் நடத்தணும்? காவேரிப்பட்டணத்தில்தான் விக்கணும். நாலு மணிக்கு ஒரே இருட்டா இருக்கும். தலையில கூடையை வெச்சி பஸ் நிலையத்துக்கு எடுத்து வந்திடுவேன். என்னோட நண்பர்களெல்லாம் பஸ் நிலையம் கிட்ட பேய் இருக்குன்னு சொல்லுவாங்க. ஆனா நான் இதுநாள் வரைக்கும் எதையுமே பார்த்ததில்லே! பயம்தான் மனுஷனைக் கொல்லும்னு பாடத்தில் படிச்சிருக்கேன். ஒரு கூடை தக்காளியோட விலை 30 ரூபாயிலிருந்து திடீர்னு ஏறும். திடீர்னு விலை இறங்கிடும். ஏமாந்து இருந்தோம்னா கம்மி விலைக்கு கேட்பாங்க.' நான் நல்லா பேரம் பேசி வித்திடுவேன். பணத்தைக் கொண்டுவந்து அம்மாகிட்ட கொடுத்திட்டு கொஞ்ச நேரம் பாடம் படிப்பேன். எட்டு மணிக்கெல்லாம்



அப்பாவுக்கு இதுகூடச்
செய்ய வேண்டாமா எப்படி?
- ராஜசேகர்



பேரம் பேசி வித்திடுவேன்!
- எஸ். தம்பிதுரை




நான் அடைந்த மகிழ்ச்சிக்கு
அளவே இல்லை!'
- சின்னி



அப்பா அம்மாவுக்கு உதவறது
நம்ம கடமையல்லவா?
- சண்முகம்.



காய்களைப் பார்த்ததும்
எச்சில் ஊறும்! ஆனா,
சாப்பிட மனசு வராது!
- உசேன்.



''ஏங்க இந்த ஊர்ல பலா பழம் 'சீப்பா' கிடைக்குமா?''

''எந்த ஊர்லயும் பலா பழம் 'சீப்பா' கிடைக்காது. வாழைப் பழம் மட்டுந்தான் 'சீப்பா' கிடைக்கும்!''

- என். செல்வ லட்சுமி

ஸ்கூல் போக மறுபடியும் பஸ் பிடிக்க வேணுமே!

என்னோட எதிர்கால இலட்சியம் நல்லா படிக்க விவசாயத்திலேயே நிறைய ஆராய்ச்சி பண்ணி பெரிய பேர் வாங்கணும். நிறைய நல்ல இரக தக்காளி சாகுபடி பண்றது எப்படின்னு கண்டுபிடிக்கணும். இப்ப ஏழாம் கிளாஸ் படிச்சிட்டு இருக்கேன். அம்மாவுக்கு உதவிபண்ணிகிட்டே படிக்கிறேன்றதில் ரொம்பப் பெருமைப்படறேன்.

- எஸ்.தம்பிதுரை

நெருப்பெட்டியை உங்களுக்குத் தெரியும். அதைச் செய்வது எவ்வளவு கஷ்டம் தெரியுமா! அந்த நெருப்பெட்டி தான் தினமும் எங்க குடும்பத்துக்கே சோறு போடுது. தினமும் எங்கம்மா காலையில எழுந்து மேச் பேக்டரிக்குப் போவாங்க. அவங்க பசையும், காகிதமும் கொடுத்திடு வாங்க. அதைப் பெட்டியா செஞ்சி மறு நாள் கொண்டு போய்க் கொடுத்தால், எவ்வளவு பெட்டி செஞ்சோமோ அவ்வளவு பணம் கிடைக்கும். இது இல்லாம ஃபிரேம்ன்னு ஒன்னு இருக்கும். அதில் ஸ்கேல் மாதிரி நீளமா நிறைய கட்டைகள் இருக்கும். அதில் குச்சியை லைனா ஒவ்வொன்னா அடுக்கணும். ஒரு ஃபிரேமுக்கு 40 கட்டை இருக்கும். ஒரு ஃபிரேம் அடுக்கினா 20 பைசா கிடைக்கும். ஆரம்பத்தில் பயங்கரமா முதுகு வலி எடுக்கும். அம்மாவுக்கு உதவுகிறோம்கற நினைப்பில் வலி பஞ்சாப் பறந்து போயிடும்! அதே போல் பசையை விரலால் வழிச்சி எடுத்து ஒட்டி காகித அட்டையில் பெட்டி செய்யணும். அடிக்கடி பசையைத் தொடுவதாலே நகச்சுத்தி வந்திடும்.

எனக்கும் அடிக்கடி வந்து கஷ்டப் பட்டிருக்கேன். தினமும் நாலு மணிக்கு ஸ்கூல் விட்டதும் எட்டு மணி வரைக்கும் அம்மாவுக்கு உதவியாய் பெட்டி போட்டு ஃபிரேம் அடுக்குவேன். ஒரு மணி நேரம் ஓய்வு. அப்புறம் பதினோரு மணி வரைக்கும் படிப்பேன். ஒரு தடவை எங்கம்மாவுக்கு, கடுமையா காய்ச்சல். பெட்டி போட்டாத்தான் சோறு. நானும் எங்க பாட்டியும் சேர்ந்து செஞ்சோம். நான் தான் நிறைய செஞ்சேன். உடம்பு ரொம்ப வலிச்சது. கிடைச்ச பணத்தில் அம்மாவை டாக்டரிடம் கூட்டிப்போய்க் காட்டி மருந்து வாங்கிக் கொடுத்தோம். அம்மாவோட காய்ச்சல் சரியாகி அவங்க எழுந்து நடந்ததும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

- சின்னி

எங்கப்பா சின்னதா 'சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ்' - கடை வெச்சிருக்கார். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வியாபாரத்தை முழுசும் நான்தான் கவனிச்சிப்பேன். கடைக்கு வரும் ஆளுங்க கேட்கும் நெட்டு, போல்டு, சீட் கவர், ஸ்பிரிங் எல்லாத்தையும் நான் தான் எடுத்துத் தருவேன். எங்கப்பா, 'என் தொழில் என்னோட போகட்டும்டா... நீயாவது நல்லாப் படிச்சி பெரிய்ய ஆளா வரணும்'-ம்பாரு..! அவர் அப்படிச் சொன்னாலும் அப்பா, அம்மாவுக்கு உதவுவது என் கடமையல்லவா...! என்னால முடிஞ்ச அளவு உதவியைச் செஞ்சிடுவேன். கடையில் வியாபாரம் பண்ணும் போது ரொம்ப கவனமா இருக்கணும். சில சமயம் நிறையக் கூட்டம் வந்திடும். ஒவ்வொருத்தர் ஒவ்வொரு சாமானைக் கேட்பாங்க...! உடனடியா எடுத்துக் கொடுக்கணும். கொஞ்சம் லேட் செஞ்சா வேற கடைக்குப் போயிடுவாங்க...! யார் யார் கிட்டே எதை, எதைக் கொடுத்தோம்னு கவனமா இருக்கணும். நைஸா பணம் கொடுக்காமலேயே தூக்கிட்டுப் போயிடுவாங்க! இது மாதிரி ஏமாத்திட்டுப் போனவங்க நிறையப்பேரு!

நான் காவேரிப்பட்டணம் ஸ்கூல்ல படிக்கிறேன். முதல் ரேங்க் எடுக்குற அளவுக்குக் படிக்கலேன்னாலும், பத்து ரேங்க்குக்குள் வரும் அளவுக்குப் படிக்கிறேன். நிறையப் படிச்சி ஒரு பெரிய சைக்கிள் தொழிற்சாலை கட்டப் போறேன். எனக்குத் தான் ஸ்பேர்-பார்ட்ஸ் பத்திக் கொஞ்சம் தெரியுமே! அதனாலத்தான் சைக்கிள் தயாரிக்க ஆசைப்படறேன். கோகுலம் வாசகர்களுக்கும் தங்களால் ஆனா உதவியை தங்க பெற்றோர்க்குச் செய்யணும்னு கேட்டுக்கறேன். அவங்கதானே நாம வளர்ந்து நல்ல படியா வாழணும்னு உண்மையா பாடுபட

DIAMOND COMICS

PRESENTS

AN UNENDING SERIES OF THE MOST RENOWNED COMICS IN THE WORLD, LIKE...



PHANTOM

A typical character of the comic surviving in his own life for hundred of years like one soul in a series of bodies. He has taken a pledge to efface all evil from the world. Although he dwells in the dense jungle, his field of action covers the whole world. He is the most helping friend for the needy distressed persons for his adversaries but a vemitable death.




MANDRAKE

The most widely read comic character in the world, who can hypotise anyone merely by looking at him. His enemies are determied to end his existence but every time not he but they who lose before his mighty magic.



SPIDER MAN

An unbelievable existence who in reality is a very jovial handsome youth, hating all that is criminal and evil in the world. When he comes in his deadly Spider-Form his enemies cannot stand before his illimitable power No place is inaceesible for him. even that too which is beyond the imagination.



JAMES BOND

An ace British detective known for his daredevilry and love for all good things of life including the young beauties! An expert masqurader who newer fails in his mission how so-ever danger-ous.

NEW DIAMOND COMICS (MAY 94)

Pran's—Chacha Chaudhary & Arrogant Kazaan	8.00
Pran's—Raman & Doctor	8.00
Pran's—Shrimatiji & Rat	8.00
Agniputra Abhay & Chumb Chumba	8.00
Fauladi Singh & The Dangerous Bride	7.00
Rasana Genie-2	7.00
Phantom-31 (Digest)	15.00
James Bond-21	7.00

NEW DIAMOND COMICS (JUNE 94)

Pran's—Chacha Chaudhary & Bing Ben	8.00
Pran's—Pinki's New Frock	8.00
Agniputra Abhay & Khardulla	8.00
Mahabali Shaka & Ghosts in Uniform	7.00
Tauji & The Tiny Magician	7.00
Sprider Man-4	8.00
Phantom-33 (Digest)	15.00
Rasana Genie & Tarvil	7.00
James Bond-23	7.00
Mandrake-20	8.00

DIAMOND COMICS PVT. LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore). **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. • A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut • Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut

றாங்க...!உங்க அப்பா அம்மாவுக்கு உதவி செஞ்சிபாருங்க. எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகும்னு நீங்களே உணருவீங்க!

- எம்.சண்முகம்

நான் காவேரிப்பட்டணம் ஹை ஸ்கூல்ல ஏழாம் வகுப்புப் படிக்கிறேன். எங்கப்பாவோட வேலை மாங்காய் வியாபாரம். மாங்காய் சீஸனில் ஒரு சிறிய தோப்பை குத்தகை எடுப்பாரு! குத்தகை எடுத்திட்டால் மட்டும் வேலை முடிஞ் சிடாது. மரங்களுக்கு மருந்து அடிக்கணும். நல்லா நீர்ப் பாய்ச்சணும். தோட்டத்துக்குக் காவல் போடணும். மாமரம் பூ வைக்கும் போது பலமா காத்து அடிக்கக் கூடாது. அடிச்சா பூவெல்லாம் உதிர்ந்து பயங்கர நஷ்டம் உண்டாயிரும். அதேப்போல் மாம் பிஞ்சு வைக்கும்போது ஆலங்கட்டி மழை பெய்தாலும் கஷ்டம்தான். 'சாமி... இதெல் லாம் வரக் கூடாதுன்னு'- கடவுளை வேண்டிப்பேன். காய் அறுக்கும் நாளில் ஒரே குஷிதான். எங்கப்பாவோடு தோப்புக் குப் போயிடுவேன். அறுத்த காய்களை யெல்லாம் பொறுக்கி ஒரிடத்தில் குவிச்சி வைப்பேன். அந்த காய்களைப் பார்த்ததும் வாயில் எச்சில் ஊறும். ஆனால் சாப்பிட மனசு வராது. அதை விற்றால் ஒரு ரூபாய் கிடைக்குமே என்று நினைப்பேன். அவற்றை விற்று பணம் கொண்டு வந்தால் தானே வருஷம் பூரா குடும்பம் நடத்த முடி யும்.? போன வருஷம் கொஞ்சம் நஷ்டம் வந்திருச்சி..! என்னால் முடிஞ்ச அளவு சிக்கனமா இருந்தேன். வீண் செலவு செய்ய மாட்டேன். சினிமாவுக்குப் போக மாட் டேன்.

இந்த வருஷம் கொஞ்சம் லாபமும் வந்துவிட்டது. இருந்தாலும் போன வருஷம் எப்படிச் சிக்கனமா இருந்தேனோ அதே மாதிரி இந்த வருஷமும், இனிஎப் போதும் இருக்க முடிவு பண்ணிட்டேன். வருஷத்துக்கு ஒரு முறை எங்கப்பாவுக்கு நான் உதவி பண்ணினாலும், அவர்களைத் தொந்திரவு செய்யாம, வீண் செலவு செய்ய வைக்காது இருப்பதே பெரிய உதவிதானே! ஒருநாள் திடீர்னு கணக்கு நோட் வாங்க வேண்டிய நிலைமை. வாங்க பணமில்லை. நோட்டு இல்லாமலேயே பள்ளிக் கூடம் போய் உதை வாங்கினேன். அன்னிலேந்து சிக்கனம் மட்டும் போதாது! அப்பா, அப் பப்போ தரும் பணத்தை வாங்கிக் கிட்டு பத்திரமா சேர்த்து வைக்கணும் படிப்புக்கு உதவும்னு முடிவும் செஞ்சேன்!

- எஸ்.உசேன்.

பேட்டி, புகைப்படம்:
கே.சோமசேகர்.





பாதிக் கூலி

சுப்பையன் ஒன்னாம் நெம்பர் கருமி. மனைவியிடம் அரிசியை எண்ணிக் கொடுத்துத்தான் சாதம் வடிக்கச் சொல்லுவார். அத்தனை கருமித்தனம்.

இவ்வளவுக்கும் சுப்பையனிடம் நிறைய நிலம் இருந்தது. விளைச்சலில் நிறையப் பணம் வந்தது. சொந்த வீடு. இத்தனை இருந்தும் கருமித்தனத்திற்கு அவர் அடிமையாகிக் கிடந்தார். வயிறு நிறைய சாப்பிடக்கூட மாட்டார். மனைவிக்கும் சாதம் போட மாட்டார்.

சுப்பையன் வசித்த ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அதன் கொட்டகைக் கூரை இலமாகிப் போய் விட்டதால், புதுப்பிக்க பஞ்சாயத்தில் முடிவு பண்ணினார்கள். வீட்டுக்கு இவ்வளவு பணம் தர வேண்டும் என்று தீர்மானம் போட்டு வசூலித்தார்கள். சுப்பையன் பணம் தர மறுத்தார். ''என் வீட்டில் யாரும் அந்தப் பள்ளியில் படிக்கவில்லை. நான் எதற்காகப் பணம் தருவது?'' என்று சண்டை போட்டார். அவரிடம் அந்தப் பணத்தை வாங்குவதற்குள் பஞ்சாத்தார்கள் படாத பாடு பட்டார்கள். அப்படியும் அவர் முழுப் பணத்தையும் தரவில்லை. இத்தனைக்கும் அவர் படித்தது அந்தப் பள்ளியில்தான். அவருக்கு நிலத்தில் இருந்தும் தென்னந் தோப்புகளில் இருந்தும் வரும் வருமானம் வருஷத்திற்கு வருஷம் கூடிக் கொண்டே இருந்தது.

சுப்பையனை எப்படியாவது மாற்றி விட வேண்டும் என்று சில புத்திசாலிகள் முடிவு செய்து திட்டம் போட்டார்கள்.

ஒரு நாள் வழக்கப்படி சுப்பையன் தென்னந்தோப்புகளைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார். எதிரே மரமேறி மாணிக்கம் வந்தான். தென்னை மரங்களில் ஏறி மட்டை கழிப்பது, தேங் காய் பறிப்பதுதான் மாணிக்கத்தின் தொழில்.

சுப்பையனைப் பார்த்ததும் மாணிக்கம் வணங்கினான். ''ஐயா, மரத்துல காயெல்லாம் நல்லாத் தேறிப் போச்சுங்க. பறிச்சுடலாம்னு தோணுது'' என்று கேட்டான்.

''நீயா வந்து கேட்டால் பாதிக் கூலிதான். நானாகக் கூப்பிட்டால் முழுக் கூலி. என்ன சொல்றே?'' என்று கருமித்தனம் மாறாது கேட்டார் சுப்பையன்.

''இந்த முறை நீங்க என்ன கூலி தந்தாலும் சந்தோஷமா வாங்கிக்கறேங்க'' என்று மாணிக்கம் குழைந்தான். சுப்பையன் சம்மதித்தார்.

மாணிக்கம் மரமேறினான். சுப்பையன் அவன் என்ன பண்ணுகிறான் என்பதைக் கண்குத்திப் பாம்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு மரமாக மாணிக்கம் ஏறி இறங்கினான்.

யாருக்கு எது? போட்டி முடிவு

அப்பாடி! முடிவு தேதி எப்போ வரும் என்று ஆசிரியரை ஏங்க வைக்கும் அளவுக்கு மூட்டை மூட்டையாக இந்தப் போட்டிக்கான விடைகளை வாசகர்கள் அனுப்பி வைத்து விட்டார்கள். எண்ணூறு பேர்களுக்கு மேல் இதில் கலந்து கொண்டு தங்கள் ஆர்வத்தைக் காட்டியிருக்கிறார்கள். அத்தனையும் சரியான விடைகளே! குலுக்கல் முறையே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்து எடுக்கக் கைகொடுத்தது!

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. சேவியர் ஒளி இளவல், நெய்வேலி.
2. வி. சித்திரலேகா, சென்னை - 44.
3. எஸ். சுப்ரியா, பெங்களூர்- 16.
4. ஏ. அறிவரசன், பெரம்பலூர்.
5. அ. அருணா ஜேன், சென்னை - 18.
6. எம். சையத் இப்ராஹீம், தாராபுரம்.
7. எஸ். வைஷ்ணவி, சென்னை - 82.
8. டி. மரியதாஸ், மாக்கனூர் அஞ்சல், தருமபுரி மாவட்டம்.
9. ஜே. அகமது வசிஃப், மதுரை - 16.
10. W.ஹெமில்டன், கோரம்பள்ளம் போஸ்ட்.
11. எஸ். வடிவேலன், காவேரிப்பாக்கம்.
12. பி. பாகுபலி, சேலம்.
13. ஜி. ஸ்ரீவித்யா, திருச்சி - 16.
14. டி. அனுராதா, ஈரோடு.
15. எஸ். விவேகானந்த், சிதம்பரம்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

சரியான விடை:

வண்டி - குதிரை
ரிங் மாஸ்டர் - புலி
பண்டாரம் - கழுகுகள்
மீன் பிடிப்பவர் - மீன்
பாம்பாட்டி - பாம்பு
உழவன் - மாடு
ஆடு மேய்ப்பவர் - ஆட்டு மந்தை
போலீஸ்காரர் - நாய்
குரங்காட்டி - குரங்கு
பூம்பூம் மாட்டுக்காரர் - பூம்பூம் மாடு

எந்த மரமேறியும் பாதிக் கூலிக்கு ஒப்புக் கொள்ள மாட்டார்கள். மிகவும் தகராறு செய்வார்கள். மாணிக்கம் அப்படி எதுவும் பிரச்சனை பண்ணாது ஒப்புக் கொண்டது சுப்பையனுக்கே அதிசயமாக இருந்தது. அதோடு மாணிக்கம் மிகவும் சுறுசுறுப்பாக ஏறி இறங்கி வேலை செய்து அவருடைய சந்தேகத்தை அதிகரிக்க வைத்தது. இவன் வேறு ஏதோ நோக்கத்துடன் வேலை பண்ண வந்திருக்கிறான் என்பதை அவர் தெரிந்து கொண்டார். அதனால் அவன் என்ன பண்ணுகிறான் என்பதைக் கூர்ந்து கவனித்து வந்தார்.

மாணிக்கம் எட்டாவது மரத்தில் ஏறித் தேங்காக் குலைகளை வெட்டித் தள்ளிய போது அவன் முகம் மிகழ்ச்சியில் மலர்ந்ததை சுப்பையன் கவனித்து விட்டார். அவன் எதையோ எடுத்துத் தன் தலைப் பாகைக்குள் மறைத்து வைத்துக் கொண்டதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை.

இறங்கியதும் அவனைப் பிடித்துக் கொண்டார். மாணிக்கம் முதலில் மறுத்தாலும் பிறகு ஒப்புக் கொண்டு தலைப் பாகையில் இருந்த ஒரு சிறு குச்சியை எடுத்துக் காட்டினான்.

''இது தேவலோகக் குச்சி. இதைக் கையில் பிடித்துக் கொண்டால் நம் உருவம் மறைந்து விடும். கிழக்குப் பார்த்த குலையில் எட்டுத் தேங்காய் உள்ள குலையில் ஐம்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை இது தோன்றுமாம். ஒரு சாமியார் சொன்னார். கிழக்குப் பக்கம், எட்டுத் தேங்காய் உள்ள குலை. இந்த ஊரிலேயே உங்க தோப்பில் தான் இருக்கிறது. அதனால்தான் குறைந்த கூலியில் வேலை பண்ண ஒப்புக் கொண்டேன்'' என்று தயங்கித் தயங்கி உண்மையை ஒப்புக் கொண்டார் மாணிக்கம்.

''இதை நீ வெச்சிருக்கே ஆனா நீ மறையலையே? எனக்கு நன்றாகத் தெரிகிறாயே?''

''இதை ஒரு நாள் பூஜையில் வைக்கணும். பிறகு தான் இதன் மகிமை வெளிப்பட ஆரம்பிக்கும்.''

''என் தோப்பில் இருந்து எடுத்தது தானே? இது எனக்கே உரிமையானது'' என்றார் சுப்பையன்.

மாணிக்கம் மறுத்தான். சண்டை போட்டான். கடைசியில் எரிச்சலோடு அதை அவரிடம் கொடுத்துவிட்டுத் திட்டிக் கொண்டே போனான்.

பேராசைக்கார கப்பையன் அந்தக் குச்சியை வீட்டில் வைத்துப் பூஜை செய்தார். அடுத்த நாள் அதை எடுத்துக் கொண்டு கடைவீதிக்குப் போனார். பழக்கடைக்குள் நுழைந்து ஒரு பழத்தை எடுத்துக் கொண்டார். நடந்தார்.

''ஐயையோ, திடீர்னு பழம் குறையுதே!'' என்று பழக்காரி புலம்பினாள்.

கப்பையனுக்கு, குச்சியின் மகிமை விளங்கி விட்டது. துணிக்கடையில் நுழைந்து கல்லாப் பெட்டியில் இருந்து பணத்தை அள்ளிக் கொண்டார். நடந்தார்.

''ஐயோ, கல்லாப் பெட்டி பணத்தைக் காணவில்லையே!'' என்று முதலாளி கூவினார்.

கப்பையனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி. பேராசைக்காரர் அல்லவா? உடனே பெரிய திட்டம் போட்டார். அடுத்த நாள் பிரபல நகைக் கடைக்குள் நடந்தார். யாரும் கண்டு கொள்ளவில்லை. அலங்கார அலமாரிகளில் இருந்து, வைர நெக்லஸ், மாலை, கம்மல், மோதிரங்களை அள்ளிக் கொண்டு பையில் போட்டுக் கொண்டார். நடந்தார்.

என்ன காரணமோ தெரியவில்லை வாசலில் நிறையப் போலிஸ்காரர்கள் நின்றிருந்தார்கள். அவர்கள் கப்பென்று கப்பையனைப் பிடித்துக் கொண்டனர். அவர் திமிறிப் பார்த்தார். அவர்கள் விடவில்லை. இதற்குள் துணிக் கடைக்காரரும், பழக் கடைக்காரியும் வந்து அவர் முந்திய தினம் தங்கள் கடையில் திருடியதைக் கூறி முறையிட்டனர்.

''அப்படியானால் குச்சியின் மந்திரம் வேலை செய்யவில்லையா? பின் எப்படி என்னை நீங்கள் யாரும் நேற்று ஒன்றும் செய்யவில்லை?'' என்று திகைப்புடன் கேட்டார் கப்பையன்.

''உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு, பெரிய திருட்டைச் செய்ய வர வேண்டாமா? அதற்காகத்தான்'' என்றார் அங்கே வந்த பஞ்சாயத்துத் தலைவர்.

''இந்த கப்பையன் திருடியதற்கு ங்கள் இத்தனை பேரும் சாட்சி.



உடனே கைது பண்ணி கேஸ் போடுங்கள்'' என்றார் ஒருவர்.

''கையும் களவுமாக போலீஸ்காரர்களிடமே சிக்கியிருக்கிறார். பத்து வருஷமாவது சிறைத் தண்டனை கிடைக்கும்'' என்று வாழ்த்தினார் இன்னொருவர்.

''சிறை தண்டனை மட்டும் போதாது. இரண்டு இலட்சம் ரூபாய் அபராதமும் போடணும். கருமிப்பய. பள்ளிக் கூரையை மாத்த பைசா தரமாட்டேனுட்டானே? இவனுக்கு என்ன தண்டைன கொடுத்தாலும் தகும்''என்றனர் இன்னும் சிலர்.

ஊர்க் கூட்டம் கூடி விட்டது. ஒருவராவது கப்பையனுக்குப் பரிந்தோ அல்லது அனுதாபப்பட்டோ பேசவில்லை

''எனக்குப் புத்தி வந்தது. பள்ளிக் கொட்டகையை முழுக்க என் செலவிலேயே மாற்றித் தரேன். என்னை இந்த சோதனையில் இருந்து காப்பாற்றுங்கள். நான் மாறி விட்டேன்'' என்றார் கப்பையன் கண்ணீரோடு.

- ஆர்.ரமேஷ் ரங்கநாதன்.



National-960



வேட்டையா? வேண்டாம்!

பள்ளி நாட்களில் ஏழு மணிக்குக் கூட எழுந்திருக்காத ராமு, அன்று அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து விட்டான். அவன் மட்டுமா? அந்த ஊரில் உள்ள அனைவருமே அவனைப் போல் அந்த அதிகாலை நேரத்திலேயே எழுந்து விட்டனர். குளித்து விட்டு பயபக்தியுடன் ஊர்ப் பொது மந்தையில் கூடினர்.

ஒவ்வொரு ஆண்டும் அடுகபட்டி கிராமத்தில் நடக்கும் விசேஷம்தான் அது. எல்லோரும் ஊர்ப் பொது மந்தையில் கூடுவார்கள். ஐயனார் விழா நடக்கும். இரண்டு பேர் உடுக்கடிப்பார்கள். பூசாரி ஐயா மேல் ஐயனார் சாமி வந்து விடும்.

அன்றும் அப்படித்தான். பூசாரி ஐயா மேல் ஐயனார் சாமி வந்து விட்டது. ஊருக்குப் பெரியவர் வந்து சாமியை வணங்கினார்.

''சாமி, உத்தரவு என்ன?'' என்று பெரியவர் பயபக்தியுடன் கேட்டார்.

''வேட்டைக்குப் போகனும்'' என்றார் பூசாரி.

''எந்தப் பக்கம் போகனும் சாமி?''

பூசாரி மேல் வந்திருந்த ஐயனார் சாமி சிறிது நேரம் ஆடியது. ''தெக்கால போகலாம்'' என்று உத்தர விட்டது.

உடனே ஏற்பாடுகள் கிடுகிடுவென்று நடந்தன. ஒவ்வொரு வீட்டில் இருந்தும் பெரியவர்களும் சிறுவர்களுமாக ஆண் மக்கள் கிளம்பினர். பெரும்பாலும் பத்து வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களே. எல்லோரும் கட்டு சாதம் கட்டிக் கொண்டு, கம்பு, வாள், அம்பலக்கு (ஈட்டி)யோடு கிளம்பினர். வீட்டுப் பெண்கள் ஆரத்தி எடுத்து ''பத்திரமாகப் போயிட்டு வாங்க'' என்று வழியனுப்பினர்.

ராமுவும் பிடிவாதம் பிடித்து தந்தை, அண்ணன்களுடன் கிளம்பி விட்டான். இத்தனைக்கும் அவனுக்கு இன்னும் எட்டு வயது கூட நிரம்பவில்லை. அம்மாவுக்கு ராமுவை அனுப்ப மனமே இல்லை. ''ஏம்மா பயப்படறீங்க? அப்பா வராரு. நாங்க ரெண்டு பேர்

தேவி நாச்சியப்பன்

போறோம். எங்களை மாதிரி இன்னும் அறுபது வீட்டுப் பிள்ளைங்க வராங்க. ராமுவை கவனமா பாத்துக்குவோம். பயப்படாதீங்க'' என்று தம்பிக்காக வாதாடினான் ராஜா. அரை மனதோடு தான் அம்மா இணங்கினாள்.

ஐயனார் உத்தரவிட்டபடி தெற்கு திசையை நோக்கிக் கிளம்பியது வேட்டைக் கூட்டம். பெரியவர்களும் சிறுவர்களுமாக சுமார் எண்பது பேர் இருப்பார்கள். தாரை, தப்பட்டை, கொம்பு வாத்தியங்கள் முழங்க ஐயனார் சாமியின் காட்டு வேட்டை தொடங்கியது. வில், அம்பு, கவண், குத்தீட்டி, குண்டாந்தடி போன்று பலவகையான ஆயுதங்களைப் பயன்படுத்தி வழியில் தென்பட்ட எல்லா ஜீவராசிகளையும் கூட்டம் வேட்டையாடியது. மான், முயல், காட்டுக் கோழி, புறா, கொக்கு, அணில் என்று எதையும் விடாமல் வேட்டையாடி எடுத்துக் கொண்டார்கள். துப்பாக்கியை மட்டும் பயன்படுத்தவில்லை.

''ஐயனார் வேட்டை'' என்றதும் ஏதோ எண்ணியிருந்த ராமுவுக்கு, வேட்டைக் கூட்டம்,தான் அன்போடு நேசிக்கும் அணில்களையும் முயல்களையும் கூட விடாமல் வேட்டையாடியது அதிர்ச்சியாக இருந்தது. துயரத்தால் அவன் மனம் கனத்தது.



நடுப்பகலானதும் எல்லோருடனும் உட்கார்ந்து , ராமு கட்டுச் சோற்றைச் சாப்பிட்டான். ஒரு காட்டுக் கோழியைத் துரத்தி வேட்டையாட ஈடுபட்ட போது கூட்டம் இரண்டாகப் பிரிந்தது. ராமுவின் அப்பா ஒரு கூட்டத்திலும், அண்ணன்மார்கள் ஒரு கூட்டத்திலுமாகப் பிரிந்து விரைந்தது. சாப்பாட்டை உண்ட களைப்பில் ராமு தூங்கிக் கொண்டிருப்பதை யாருமே கவனிக்கவில்லை. அவனை அப்படியே விட்டு விட்டு இரண்டு கூட்டத்தினரும், காட்டுக் கோழியைத் துரத்திக் கொண்டு ஓடி விட்டனர்.

இருட்டுகின்ற நேரத்தில் முதலில் ஊருக்குத் திரும்பிய கூட்டம், அப்பா இருந்த கூட்டம்தான். வேட்டைக்குப் போனவர்களை வரவேற்கக் கோவில் வாசலில் பெண்கள் கூடியிருந்தனர். பதைபதைப்போடு காத்திருந்த அம்மா ஓடோடி வந்தாள்.

''ராமு எங்கேங்க?''

ராமு இல்லாததை அப்பா அப்பொழுதுதான் கவனித்தார்.

''எல்லோரும் ஒன்னாத்தான் கிளம்பினோம். கட்டு சாதம் சாப்பிடும் வரை எல்லோரும் ஒன்னாத்தான் இருந்தோம். அதுக்கப்புறம், காட்டுக் கோழி வேட்டையிலே இரண்டு குழுவாப் பிரிஞ்சோம். ஒருவேளை அண்ணன்களோட வரானோ என்னவோ. பார்ப்போம்'' என்றார் அப்பா.

''வேண்டாம் வேண்டாம்னு எத்தனையோ தடுத்தேன். இப்படி செஞ்சிட்டீங்களே?'' என்று கலங்கினாள் அம்மா.



காத்திருந்தவர்கள் சமாதானப்படுத்தினர். ஆனாலும், அம்மாளை சமாதானப்படுத்த யாராலும் முடியவில்லை.

ஒருவழியாக, நெடு நேரம் கழித்து இரண்டாவது கூட்டம் வந்து சேர்ந்தது. ராமு, அவர்களோடும் இல்லை என்ற உண்மை எல்லோரையும் கலங்க வைத்தது. யாருக்கும் எதுவும் ஓடவில்லை, வேட்டையாடிக் கொண்டு வரப்பட்ட எல்லாம் பிரித்துக் கூடப் பார்க்காது அப்படியே கிடந்தன. அம்மாவின் அழுகையை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

காட்டில் தூங்கிக் கொண்டிருந்த ராமு, கண் விழித்துப் பார்த்தபோது பொழுது சாய்ந்து விட்டது. தன்னோடு இருந்தவர்கள் யாரையும் காணவில்லை என்றதும் அவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. அழுதபடி, ஒற்றையடிப் பாதையில் ஓடினான். ஒரு இடத்தில் இரண்டு மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. 'காட்டில் மாடுகள் தனியாக வராது. அவைகளை மேய்ச்சலுக்காக யாரோ கூட்டி வந்திருக்க வேண்டும். அவர்கள் அருகில்தான் எங்கேயோ இருக்க வேண்டும்'' என்பதை புத்திசாலியான அவனால் ஊகித்துக் கொள்ள முடிந்தது. யாரோ மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உதவியுடன் தப்பி விடலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. சற்றுத் தைரியம் வந்தது.

''மாடு யாருதுங்க?'' என்று பலமாகக் குரல் கொடுத்துக் கேட்டான்.

''ஏன் தம்பி? மாடு என்னுதுதான்.

எதுக்குக் கேட்கறே?'' என்று கேட்டபடி முண்டாசு கட்டிய ஒரு கிராமவாசி வந்தார்.

''நான் இருப்பது அருகப்பட்டிங்க. ஐயனார் வேட்டைக் கூட்டத்தோடு வந்தேனுங்க. தூங்கிட்டேன். எல்லோரும் என்னை விட்டுட்டுப் போயிட்டாங்க'' என்று அழுதான் ராமு.

''அடுக்கப்பட்டி தானே? என்னோட வா. பஸ் ஏத்தி விடறேன். உங்க ஊர்ல போய் இறங்கிக்க'' என்று அவனை அழைத்துக் கொண்டு கிளம்பினார் கிராமவாசி.


ஊரே கலங்கித் தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் ஜம்மென்று பஸ்ஸில் வந்து இறங்கிய ராமுவைப் பார்த்ததும் எல்லோரும் மகிழ்ச்சியால் திகைத்தனர்.

இனிமே இந்த வேட்டைக்குப் போறவங்களோட போகவே மாட்டேன்'' என்றான் ராமு தெளிவாக.

''ஆமாம் ஆமாம். ராமு சொல்றது சரிதான். எங்கமனசுல இருந்ததை நாங்க வெளியே சொல்லப் பயந்தோம். ராமு சொல்லிட்டான். சாமி வேட்டைப் பங்குன்னு நீங்க இந்த அணிலையும் முயலையும் கொடுத்தா நாங்க திங்கா மாட்டோம்'' என்றனர் சிறுவர்கள்.

எல்லோரும் ஊர்ப் பெரியவரைப் பார்த்தனர்.

''பிள்ளைங்க சொல்றது சரிதான். அணிலே அணிலேன்னு வீட்டுல அணிலை நேசிக்கப் பாட்டைக் கத்துக் கொடுத்துட்டு, வேட்டைப் பிரசாதம்னு அதே அணிலைக் கொன்று கொண்டு



''கீரியும் பூனையும் ஒன்னா எங்கே போகுது?''

''கீரி cat விளையாட!''

- செஞ்சி தா. ஷேக் உசேன்

''என்னடா ராமு! எல்லாரையும் இத்தனை நேரம் இப்படித் தவிக்க வைச்சுட்டியே?'' என்றாள் அம்மா.

''என்ன தவி தவிக்கப் போயிட்டோம் தெரியுமா?'' என்று கேட்டார் அப்பா.

''நல்லா தவிங்க. அணில் குஞ்சு, புறாக்குஞ்சு, முயல்குஞ்சு எல்லாத்தையும் வேட்டையாடிக் கொண்டு வந்திருக்காங்களே... இதுகளோட அம்மா அப்பாவெல்லாம், இதுங்களைக் காணாம எப்படித் தவிச்சுக்கிட்டு இருப்பாங்க? மனிதர்களுக்குத் தொல்லை தரும் துஷ்ட மிருகங்களை அழிப்பதுதான் வேட்டை. இப்படி எளிய மிருகங்களான புறாவையும், காட்டுக் கோழியையும், முயல்களையும், கொக்குகளையும் விரட்டி அழிப்பதா வேட்டை? நான் வந்து கொடுத்தால், எந்தக் குழந்தைதான் சாப்பிடும்? கட்டாயப்படுத்தினால் பிள்ளைங்க ஐயனாரையே வெறுக்க ஆரம்பிச்சுடுவாங்களோன்னு பயப்பட வேண்டியிருக்கு. துஷ்ட மிருகங்களைக் கொல்றதுதான் வேட்டையே தவிர, நாமும் பிள்ளைகளும் நேசிக்கும் கொக்கையும், அணிலையும், கோழியையும், முயலையும் துரத்திக் கொல்வது வேட்டையே இல்லை. இனிமே நம்ம ஊரிலே ஐயனார் வேட்டை வேண்டாம். நீங்களெல்லாம் என்ன சொல்றீங்க?'' என்று கேட்டார் ஊர்ப் பெரியவர்.

''அப்படியே முடிவு பண்ணுங்க. எங்களுக்கு இது முழுச்சம்மதமே'' என்றனர் கூடியிருந்தவர்கள் அனைவரும்.

ராமுவைப் பாராட்டாதவர்களே கிடையாது.



சுக்கா, மிளகா சுதந்திரம்?

"அக்கா! அக்கா!"

"மீனா! மீனா!"

"வாங்க! வாங்க!"

இப்படிப் பட்ட கிச்சுக் குரல் பேச்சுகளை, மீனா வீட்டில் நுழைந்தால் நீங்கள் கேட்கலாம்.

இது யார் குரல்?

இப்படிப் பேசுவது யார்?

வேறு யார்?

நானேதான்!

நான் யார் என்று உங்களுக்குச் சொல்ல வில்லை அல்லவா? சொல்கி றேன்.

நான் ஒரு கிளி. இந்த வீட்டில் இருக் கும் மீனா என்னும் சிறுமியின் இச்சைக் குரிய பச்சைக்கிளி!

ஊரிலே ஏராளமான பச்சைக் கிளிகள் உள்ளன. அவர்களில் நான் அதிர்ஷ்ட சாலி.

அந்தக் கிளிகள் மரங்களில் புதர் களில் கூடு கட்டி, மழை வெய்யிலில நனைந்து காயும்.

நான் இருப்பது ஒரு தச்சன் அழகாக உறுதியாக தேக்கு மரத்தில் செய்த கூண்டு. கூண்டுக்குள்ளே நான் நிற்க குறுக்கே ஒரு சட்டம். நான் உல்லாசமாக ஊஞ்சலாட ஒரு சிறு ஊஞ்சல். உணவு வைக்க ஒரு சிறு தொட்டி. தண்ணீர் ஊற்றி வைக்க ஒரு சிறு தொட்டி.

பசித்த போது உணவு கிடைக்கும். பாலும் பழமும் கிடைக்கும். பாதாம் பருப்புக்கூடக் கிடைக்கும். இவை எல் லாம் கேட்காமலேயே கிடைக்கும். வீட்டிலிருக்கும் மீனாவும் அவள் பெற் றோரும் என்னை "கண்ணே பொன்னே" என்றும் "மணியே மரக தமே" என்றும் கொஞ்சுவார்கள்.

என்னைத் தெருவில் திரியும் போக்கிரிச் சிறுவர்கள் கல்லால் அடிக்க முடியாது; கழுகும் பருந்தும் தூக்கிச் செல்ல முடியாது. பூனை என்னைப் பார்த்துப் பெரு மூச்சு விடுமே தவிர அருகிலும் வரமுடியாது.

பாதுகாப்பான வாழ்வு!

பரவசமான வாழ்வு!

பசி அறியாத வாழ்வு!

அதனால்தான் நான் அதிர்ஷ்ட சாலி என்றேன். கூண்டில் இருந்தே என்னால் எதிர்த்த வீட்டுக் கூரையைப் பார்க்க முடியும். அடுத்த வீட்டு மொட்டை மாடியைப் பார்க்க முடியும். நீல வானத்தை யும் ஓரளவு பார்க்க முடியும்.

சில சமயங்களில் அந்தக் கூரையி லும் மொட்டை மாடியிலும் வந்து உட் காரும் கிளிகளைப் பார்ப்பேன். வானிலே பறக்கும் கிளிகளைப் பார்ப் பேன். அவையும் ஆனந்தமாக இருப்பது போலத் தோன்றுவதைக் கண்டு ஆச்

டாக்டர் பூவண்ணன்

சர்யப் படுவேன். உம்...தங்க உறுதியான கூண்டு இல்லை. வேளா வேளைக்கு உணவும் நீரும் நிச்சயம் கிடைக்கும் என்ற உறுதி இல்லை. உணவுக்காகவும் நீருக்காகவும் தெருத் தெருவாய் மரம் மரமாய்ச் சுற்றியலைய வேண்டிய துர்பாக்கிய நிலை. 'கண்ணே பொன்னே' என்று கொஞ்ச ஆளில்லாத அனாதை நிலை. இந்த நிலையில் இவைகளால் மட்டும் எப்படி ஆனந்தமாய் இருக்க முடிகிறது? எனக்குப் புரியவில்லை. கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்து, ''அக்கா! அக்கா!'' என்று அந்தக் கிளிகளை அவ்வப்போது அழைப்பேன். அவை என்னைத் திரும்பியும் பார்க்காமல் பறந்து போய்விடும்.

ஒருநாள் அடுத்த வீட்டு மொட்டை மாடியில் ஒரு பையன் உட்கார்ந்து ஏதோ



ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.

அப்போது அங்கே ஒரு பெரியவர் வந்தார்.

''முத்து, என்னப்பா படிக்கறே? பாடப் புத்தகமா?''ன்னு கேட்டார்.

''இல்லை தாத்தா. இது பாவேந்தர் பாட்டுப் புத்தகம்'' என்றான் அந்தப் பையன்; அவர் பேரன்.

''பாவேந்தர் புத்தகமா? சரி, அதிலே என்ன பாட்டுப் படிக்ககிட்டிருக்கறே?''

''சுதந்தரம்னு ஒரு பாட்டு. அதுவும் ஒரு கிளியைப் பற்றிய பாட்டு''

பேரன் முத்து சொன்னதைக் கேட்டதும், நான் ஆர்வத்தோடு அவர்கள் பேசுவதைத் தொடர்ந்து கேட்டேன்.

''எங்கே அந்தப் பாட்டைப் படி. கேக்கறேன்?''

தாத்தா சொல்ல, பேரன் படித்தான்.

பேரனுக்கு நல்ல வெண்கலக் குரல். கம்பீரமாகப் படித்தான்.

அவன் படித்தது தெளிவாக என் செவியில் கேட்டது.

தித்திக்கும் பழம் தின்னக் கொடுப்
பார்.
மதுரப் பருப்பு வழங்குவார் உனக்கு
பொன்னே மணியே என்றுனைப்
புகழ்வார்''


பாட்டு என்னைப் பற்றித்தான். பழம் பருப்பு முதலிய உணவும்,

பொன்னே மணியே என்னும் புகழ்ச்சியும் கூண்டுக் கிளியான எனக் குத்தானே கிடைக்கின்றன. பாவேந்தர் பாட்டை அவன் தொடர்ந்து படிக்க, நானும் மிகுந்த மகிழ்ச்சியோடு கேட்டேன்.

ஆயினும் பச்சைக் கிளியே, அதோ பார்!

உன்னுடன் பிறந்த சின்ன அக்கா
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங் கீற்றுப் பொன்னூசல் ஆடிச்
சோலை பயின்று சாலையில் மேய்ந்து
வானும் மண்ணும்தன் வசத்திற் கொண்டாள்!
நச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?

பையன் படித்ததைக் கேட்டு நான் சோர்ந்து விட்டேன். கூண்டுக்குள்ளே



இரும்புக் கம்பியால் செய்த சின்ன ஊஞ்சலில் நான் உடனே வானிலே பறந்து, தென்னங் கீற்றுப் பொன்னூஞ்சல் ஆடத் துடித்தேன். ஆனால், நச்சன் கூடு தடை விதிக்கறதே! சிறையாகத் திகழ்கிறதே!

பையன் தொடர்ந்து படித்தான்.

''அக்கா அக்கா' என்று நீ அழைத் தாய்.

அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்தரம் கிளியே''

பையன் பாட்டை முடித்தான்.

''பலே! பலே! அருமையான பாட்டு, முத்து. சுதந்தரம் நமக்கு உயிர். அதை நாம்தான் பெறணம். பிறர் தருவார்கள் என்று காத்திருக்கக் கூடாது என்பதை பாவேந்தர் அற்புதமாக விளக்கியிருக்கிறார்'' என்று பாராட்டினார், தாத்தா.

சுதந்தரம் உயிர். இனிப்பான பழம், சத்தான பருப்பு, சொகுசான கூண்டு, சுய நலத்துக்காகக் கொஞ்சுகிற கொஞ்சல் - இவை தேவையில்லை. எனக்குச் சுதந்தரம் வேண்டும்! வானிலும் மண்ணிலும் பறந்து வலம்வர வேண்டும்! தென்னங் கீற்றில் பொன்னூசல் ஆட வேண்டும்! ஆம், சுதந்தரம் வேண்டும்! பிறர் சுதந்தரம் தருவார்கள் என்று காத்திருப்பது மடமை! நமது சுந்தரத்தை நாமே தேடிக் கொள்வதே கடமை!

நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். கூண்டுச் சிறையிலிருந்து தப்பி விடுதலை பெற ஒரு திட்டம் தீட்டினேன்.

மறுநாள் காலை,


ஒரு சின்ன தம்ளரில் பால் எடுத்துக் கொண்டு மீனா வந்தாள். கூண்டைத் திறந்தாள். கிண்ணத்தை எடுத்து பாலை ஊற்றலானாள்.

ஆனால் கூண்டின் நான் வழக்கத்திற்கு மாறாக திறந்த கதவருகே வந்தேன்.

''போ உள்ளே'' என்று மீனா செல்ல மாகச் சொன்னாள். அதற்குள்ளாகவே நான் கூண்டுக்கு வெளியே குதித்து, சிறகை விரித்து மேலே பறந்தேன்.

''அப்பா....அப்பா! கிளி தப்பி, வெளியே போகுது!'' என்று மீனாவின் கூக்குரல் கேட்ட போது, அடுத்த வீட்டு மொட்டை மாடியின் மேலே பறந் தேன்.

''சுக்கா, மிளகா சுதந்தரம்! அது உயிர்! அதை நாமே பெற வேண்டும்! பெற்ற சுதந்தரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்'' என்று நினைத்த படி மேலே உயர்ந்து வான வீதியில் பறந் தேன். ''சுக்கா, மிளகா சுதந்தரம் கிளியே'' என்று பாடிக் கொண்டே பறந் தேன். ■



அவசர தேவதை!

சிவபுரிக்குப் பக்கத்தில் மிகவும் அடர்ந்த ஒரு காடு இருந்தது. காட்டில் ஒரு மலை வாசிக் குடும்பம் வசித்து வந்தது. அவர்களிடம் ஓர் ஆட்டுக்குட்டி இருந்தது. ஒரு நாள், துள்ளித் துள்ளி ஆடியபடியே அது காட்டுக்குள் வெகு தூரம் சென்று விட்டது. வழிதப்பி விட்டது.

காட்டில் அழகான ஒரு குளம் இருந்தது. வழி தப்பிய ஆட்டுக்குட்டி அந்தக் குளத்தின் கரையில் வந்து படுத்துக் கொண்டது. இருட்டினதும் நிலவு எழுந்தது. அந்த நிலவெளியில் வானத்தில் இருந்து அழகான ஒரு தேவதை இறங்கி வந்தது. குளத்தில் அது குளித்தது. விறகுச் சுள்ளிகளைச் சேகரித்து அடுப்பு மூட்டியது. 'கமகம'வென்று மணக்க மணக்க சர்க்கரைப் பொங்கல் செய்தது.

குளத்தின் கரையில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அந்த சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து, காட்டு மலர்களால் பூஜை செய்து வணங்கியது தேவதை.

சாமிக்குப் படைக்கத்தான் சர்க்கரைப் பொங்கலைச் செய்திருக்கிறது தேவதை என்பதை ஆட்டுக்குட்டி நன்கு தெரிந்து கொண்டது. பொறுமையாகக் காத்திருந்து, நைவேத்தியம் செய்து முடிந்ததும் கேட்டுப் பார்க்கலாம் என்று ஆவலுடன் காத்திருந்தது அது.

அந்த நேரத்தில் மரத்தில் இருந்து ஒரு பழுத்த இலைச் சருகு கீழே சர்க் கரைப் பொங்கலுக்குள் விழுந்தது. பதறிப் போன ஆட்டுக்குட்டி, அந்தக் காய்ந்த இலையை எடுத்தது.

பொங்கலைத் தின்பதற்காகத்தான் ஆட்டுக் குட்டி முயற்சிக்கிறது என்று அதைத் தவறாக எண்ணியது தேவதை. உடனே அதற்குக் கோபம் வந்து விட்டது.

''சாமிக்காக வைத்திருக்கும் பொங்கலைத் திருடித் தின்ன முயலும் உனக்கு எட்டுக் கால்கள் முளைக்கட்டும்'' என்று சாபம் கொடுத்துவிட்டது!

''நீங்கள் இவ்வளவு அக்கறையுடன் சாமிக்காக பக்தி சிரத்தையாகச் செய்துள்ள பொங்கலை, அந்தப் பழுத்த சருகு இலை கெடுத்துவிடக் கூடாது என்பதற்காக நான் அதை எடுத்துவிட முயன்றேன். அவசரத்தில் தவறாகப் புரிந்து கொண்டு சாபம் கொடுத்து விட்டீர்களே!'' என்று அழுதது ஆட்டுக் குட்டி.

''அப்படியா!'' என்று தன் தவறுக்கு வருந்திய அவசர தேவதை, ''கவலைப் படாதே. சாபம் கொடுத்தது கொடுத்தது நான். இனி மாற்ற முடியாது. தன்னுடைய அழகான தலை முடியைக் கொண்டு உனக்கு யாராவது பனிக் குல்லா செய்து போட்டால், அதிகப்படியான நான்கு கால்களும் மறைந்து விடும்'' என்று கூறி மறைந்தது.

உடனேயே ஆட்டுக் குட்டிக்கு அதிகப்படியாக நான்கு கால்கள் முளைத்தன. மறு நாள் காலை எட்டுக் கால்களுடன் ஓடி வந்த ஆட்டுக் குட்டியைக் கண்டு அந்த மலைவாசிக் குடும்பம் அதிசயித்தது.

அதை நகருக்கு எடுத்துக் கொண்டு போய் விற்றால் நல்ல விலை கிடைக்கும் என்று எண்ணிய குடும்பத் தலை

சின்னபாபு

வர், ஆட்டுக் குட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பினார்.

''எட்டுக்கால் அதிசய ஆட்டுக் குட்டி. சூப்வைத்து சாப்பிட்டால் எல்லா நோய்களும் நீங்கும்'' என்று அவர் சந்தையில் கூவிக் கூவி விற்றார். எல்லோரும் வந்து ஆவலுடன் பார்த்தனர். கூட்டமான கூட்டம்.

''தேவதையே, சாப விமோசனம் கிடைக்காமலேயே எனக்கு முடிவு ஏற்பட்டு விடும்போல் இருக்கிறதே!'' என்று அழுதது ஆட்டுக்குட்டி.

''என்ன விலை இந்த எட்டுக்கால் குட்டிக்கு?'' என்று கேட்டான் ஒரு குரங்காட்டி. அவனிடம் இருந்த குரங்கு எப்



படியோ விடுவித்துக் கொண்டு காட்டுக்கு ஓடிப்போய் விட்டிருந்தது. அதனால் அவன் இன்னொரு குரங்குக்காக அலைந்துக் கொண்டிருந்தான். 'இந்த அதிசய ஆட்டுக்குட்டி கண்ணில் பட்டதும், இதை வாங்கி ஆட்டபாட்டம் எல்லாம் சொல்லிக் கொடுத்து வித்தை காட்டினால் நிறையக் காசு கிடைக்கும் என்று எண்ணியே அவன் விலையைக் கேட்டான்.

'நூறு பொன்''

பேரம் பேசாது பணத்தைக் கொடுத்து ஆட்டுக் குட்டியை வாங்கி இழுத்துக் கொண்டு போனான் குரங்காட்டி. அதற்கு, பாட்டுக்கு ஏற்ப நன்றாக ஆடச் சொல்லித் தந்தான். கும்மியடிக்கக் கற்றுக் கொடுத்தான். அதுவும் ஆர்வமாகக் கற்றுக் கொண்டது. பிறகு அதன் எட்டுக் கால்களுக்கும் சின்னக் கொலுசு பண்ணிப் போட்டான். காதுகளுக்கு கம்மல் ஜிமிக்கி, கழுத்துக்கு காசுமாலை. முதுகுக்கு அழகான பட்டுத் துணி என்று எல்லாம் போட்டு அழகு படுத்தினான். தலைக்கு அழகான ஒரு கிரீடம் கூடப் பண்ணி வைத்தான். ஒரு நல்ல நாளில் ஆட்டுக்குட்டியை ஒரு திருவிழாக் கூட்டத்தில் அரங்கேற்றினான்.



எட்டுக்கால்களோடு, நன்றாக உடை நகை அணிந்து ஒரு ஆட்டுக்குட்டி ஆடுகிறது என்றால் கூட்டம் சேராமலா இருக்கும்! ஏகப் பணம் குவிந்தது. ஆட்டுக் குட்டி ஆட்டத்தின் பெருமை எங்கும் பரவியது. வெளியூர்களில் எல்லாம் இருந்து தங்கள் ஊருக்கு வரும்படி அழைத்தார்கள். குரங்காட்டி வெகு விரைவில் பெரிய பணக்காரன் ஆனான்.

ஆட்டம் முடிந்த பிறகு கூட சில குழந்தைகள் போய்விட மாட்டார்கள். அதன் பின்னாலேயே வருவார்கள்.

''உன் தலை முடியைக் கொண்டு எனக்கு ஒரு சின்னப் பனிக்குல்லா பண்ணிப் போடுகிறாயா?'' என்று ஏக்கத்தோடு ஆட்டுக் குட்டி கேட்கும். உடனே பிள்ளைகள் பறந்து ஓடிவிடுவார்கள். தலைமுடியை இழக்க யார் தான் முன்வருவார்கள்? தேவதை தன்னை ஏமாற்றி விட்டது என்று ஆட்டுக்குட்டி வருத்தத்துடன் நாட்களைக் கடத்தியது. குரங்காட்டி அதை ஊர் ஊராகக் கூட்டிக் கொண்டு போய், பணம் சேர்த்தபடி இருந்தான்.

அந்த ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரே ஓர் பெண். ராஜா அவளிடம் உயிரையே வைத்திருந்தார். ஒரு நாள் அரச குமாரி விளையாடும் போது கொட்டாவி விட்டாள். கொட்டாவி விட்டதும், திறந்த வாய் மூட வேண்டுமல்லவா? ராஜகுமாரிக்கு வாய் மூடவில்லை! திறந்தபடியே நின்று விட்டது!

அரசகுமாரி ஆயிற்றே? சும்மா இருப்பாரா ராஜா? பெரிய பெரிய வைத்தியர் களெல்லாம் வந்து பார்த்தார்கள். யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. அரசகுமாரியின் திறந்த வாயை மூடவைப்பவர்க்குப் பாதி இராஜ்ஜியம் தருவதாக அரசர் அறிவித்தார். என்ன பயன்? யாராலும் முடியவில்லை. நடக்கும் போதும், தூங்கும் போதும் அரசகுமாரியின் வாய் திறந்தபடியே இருந்தது! அவளுடன்

யாரும் விளையாடக் கூட விரும்ப வில்லை. 'கொட்டாவி ராஜகுமாரி என்று மறைவில் கேலி செய்தார்கள்.

ராஜகுமாரி ஒரு நாள் கோவிலுக்குப் போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள். கடை வீதியில் ஒரே கூட்டமாக இருக்கவே, பல்லக்கில் இருந்து இறங்கிப் பார்த்தாள். எட்டுக் கால்களோடு, கால்களில் கலகலக்கும் கொலுசு, கழுத்தில் காசுமாலை, தலையில் கிரீடம்,துப்பட்டா அணிந்து ஒரு ஆட்டுக்குட்டி ஆடினால் யாருக்குத்தான் சிரிப்பு வராது? எல்லோரும் சிரித்தார்கள். ராஜகுமாரியும் தன்னை மறந்து வாய்விட்டுச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில், அரசகுமாரியின் திறந்த வாய் மூடிக் கொண்டு விட்டது! எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அரசருக்கும் செய்தி போனது. குரங்காட்டி ஆட்டுக்குட்டியோடு அரசரைக் காண விரைந்தான்.

அரசகுமாரியின் திறந்த வாய் மூடிக் கொண்டது பற்றி அரசருக்கு அளவில்லாத மகிழ்ச்சி. ஆனாலும், குரங்காட்டிக்குப் பாதி இராஜ்ஜியத்தைக் கொடுப்பதா என்று அவருக்குத் தயக்கம் ஏற்பட்டது.

''வாக்கு சுத்தம் வேண்டும். கொடுத்த வாக்கை மீறக் கூடாது. சொன்னபடி பாதி இராஜ்ஜியத்தைக் கொடுத்துவிடுங்கள்'' என்று வற்புறுத்தினாள் ராஜகுமாரி. குரங்காட்டி மகிழ்ச்சியோடு திரும்பினான். அரசகுமாரி வேண்டிக் கொண்டபடி ஆட்டுக் குட்டியை அவளிடமே விட்டுவிட்டுப் போனான்.

''எனக்கு சிரிப்புக்காட்டி, மூடமுடியாத என் வாயை மூட வைத்த ஆட்டுக் குட்டியே, உனக்கு என்ன வேண்டும் கேள்?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

''நான் கேட்பதைக் கொடுப்பீர்களா? என்று கேட்டது ஆட்டுக் குட்டி.



''கண்டிப்பாக. அரசர் தயங்கினா லும் சொன்னபடி பாதி இராஜ்ஜியத்தை உன் எஜமானருக்குக் கொடுக்கச் சொன் னேனே? நீ பார்க்க வில்லை? என்ன கேட்டாலும் தருகிறேன்'' என்றாள் அரச குமாரி.

''உங்கள் அழகான நீண்ட தலை முடியைக் கொண்டு என் தலைக்கு ஓர் சின்ன பனிக் குல்லா தைத்துப் போட வேண்டும். செய்வீர்களா?'' என்று கேட்டது ஆட்டுக் குட்டி.

''இது பொல்லாத ஆட்டுக் குட்டி. இதை இப்பவே வெட்டி சூப் வைத்துக் குடித்து விடலாம்'' என்று கோபத்துடன் குதித்தார் அரசர்.

''கோபப் படாதீர்கள் அப்பா. என் னுடைய திறந்த வாய் மூட வேண்டும் என்று எத்தனை வைத்தியம் செய்தீர் கள்? இதன் ஆட்டத்தைப் பார்த்ததும் ஏற்பட்ட சிரிப்பில்தானே என் வாய் தானாக மூடிக் கொண்டது?''

''அதற்காகத்தான் குரங்காட்டிக்குப் பாதி இராஜ்ஜியம் தந்து விட்டேனே?''

''சிரிப்புக் காட்டிய இந்த ஆட்டுக் குட்டிக்கு என்ன கொடுத்தீர்கள்?''

அரசர் பதில் கூற முடியாது திகைத் தார்.

''என் முடியை இழக்க நானும் விரும்பவில்லை. ஆனால், இது எனக் குச் செய்திருக்கும் நன்மையை எண்ணிப் பார்க்கும் போது, இது பெரியகாரியமே அல்ல. இன்னும் மூன்றே மாதங்களில் முடி மீண்டும் வளர்ந்து விடுமே? நீங்கள் வாக்களித்தபடி பாதி இராஜ்ஜியத்தைக் கொடுத்தீர்கள். நான் வாக்களித்தபடி என் முடியைக் கொடுக்கிறேன்'' என்று செயலில் இறங்கினாள் ராஜகுமாரி.

மொட்டைத் தலையுடன் ராஜ குமாரியைப் பார்த்தபோது ஆட்டுக் குட்டிக்குக்கூடத் துக்கம் பொங்கியது. தன் அழகான நீண்ட தலை முடியைக் கொண்டு ஆட்டுக்குட்டியின் தலைக்கு ஏற்றபடி ஓர் அழகான பனிக்குல்லா வைச் செய்து போட்டாள்.

அடுத்த கணம் வானம் இடித்தது. மின்னல் ஒன்று அந்த அறைக்குள் வந் தது. வன தேவதை சிரித்தபடி நின்றது. ஆட்டின் அதிகப்படியான நான்கு கால் களும் மறைந்தன.

''நான் அவசரப்பட்டு இட்ட சாபத் தால், நீ இத்தனை கஷ்டங்களையும் அனுபவிக்கும்படி ஆகிவிட்டது. என்னை மன்னித்துக் கொள். உனக்கு ஒரு வரம் தருகிறேன். என்ன வேண்டும் கேள்?'' என்று ஆட்டுக் குட்டியைக் கேட்டது தேவதை.

''நற்குணங்கள் எல்லாம் பொருந் திய இந்த ராஜகுமாரி, எத்தனை தியாக மனப்பான்மை கொண்டவளாக இருக் கிறாள்! பாதி இராஜ்ஜியத்தைக் கொடுக்க அரசரை நிர்பந்தித்தாள்! தன் அழகிய தலைமுடியை எனக்காக இழக் கத் தயாரானாள். இந்த குணவதிக்கு ஏற்ற ஒரு நல்ல இராஜகுமாரன் இவ ளுக்குக் கணவனாகக் கிடைக்க அருள் செய்யுங்கள் அது போதும்'' என்றது ஆட்டுக் குட்டி.

தேவதை சிரித்தது.

''கொடுத்த வரத்தைக் கொண்டு தான் பயனடையாமல், மற்றவர்கள் நலம் பெற வேண்டும் என்று கேட்கும் உன்னைவிடவா ஓர் உயர்ந்த மனம் கொண்ட கணவன் இந்த குணவதிக்குக் கிடைப்பான்!'' என்று சிரித்த தேவதை கையை அசைத்தது.

ஆட்டுக்குட்டி இருந்த இடத்தில் ஓர் அழகிய அரசகுமாரன் நின்றான். இரு வருக்கும் மணம் செய்து வைத்து வாழ்த்தி மகிழ்ச்சியோடு விடை பெற் றது தேவதை.

''அப்பா... ஒரு 'essay# ஒப்பிக் கிறேன். கேட்கிறீங்களா?''

"Yes.... say!"

''!!!!!''

- சரோஜ் விஸ்வம்



என் கதையா?

சு.ப. சிவராஜ்



"எங்கே கோபி இந்தப் பக்கம்?"

"தபாலாபீசுக்குத்தான்"

"கதை அனுப்பத்தானே போறே? பாவம் நீயும் அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப் படும்னு எத்தனை கதை திரும்பி வந்தாலும் விடாப் பிடியா வேற கதை எழுதி அனுப்பிக் கொண்டே இருக்கே! ஒன்னாவது இதுவரை பத்திரிகைகளிலே வெளிவந்ததாவே தெரியலே!"-கிண்டலும் கேலியுமாக பாலு கூறியபோது கோபி தலை குனிந்தான். ஆனாலும் அவன் துவண்டு விடவில்லை.

"பாலு, இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் என்னுடைய கதைகள் கண்டிப்பாக எல்லாப் பத்திரிகைகளிலும் வரும். இப்போ என் கதைகளைத் திருப்பி அனுப்புற எல்லாப் பத்திரிக்கை ஆசிரியர்களும் எனக்குக் கடிதம் எழுதி. கதைகளை வாங்கி வெளியிடப் போறாங்க. அதை நீயும் பார்த்து வியக்கத்தான் போறே" என்று நடந்தான் கோபி.

"நீ கதை எழுதி அனுப்ப ஆரம்பிச்சு ரெண்டு வருஷமாகப் போகுது இல்லையா? பேசாம இரண்டாவது ஆண்டு விழா கொண்டாடு. நாங்களும் கலந்துக்கறோம்" என்று கேலியாகக் கூறினான் பாலு.

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஏதாவது ஓர் இலட்சியம் இருக்கும் அல்லவா? அதே போன்ற ஓர் இலட்சியம் கோபிக்கும் இருந்தது. ஒரு சிறந்த சிறுவர் எழுத்தாளனாக வேண்டும் என்பதே அது. அதற்காக அவன் வாரத்திற்கு ஒரு கதையாக எழுதித் தள்ளி சிறுவர் பத்திரிகைகள் எல்லாவற்றிற்கும் அனுப்பிக் கொண்டேயிருந்தான். அவை போன சுருக்கில் திரும்பி வந்து கொண்டே இருந்தன! அதற்காக அவன் சோர்ந்துவிட வில்லை. இன்றில்லா

விட்டாலும் என்றாவது ஒரு நாள் தன்னுடைய படைப்புகளுக்கு பத்திரிகைகளில் பெருமையான ஓர் இடம் கிடைக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு தொடர்ந்து எழுதி வந்தான் அவன். நண்பர்களின் கிண்டலையும் ஏச்சுக்களையும் அவன் பொருட்படுத்தவே இல்லை.

அன்று, கட்டுரை வகுப்பு நடந்து கொண்டிருந்தது. தமிழாசிரியர் புதிதாக மாற்றலாகி வந்திருந்தார்.

ஏதோ எண்ணியவர்போல் தமிழாசிரியர், ''கோபி'' என்று அவனை அழைத்து, ''என்னுடைய அறையில் மேலாக ஒரு திருக்குறள் குறிப்பேடு வைத்திருக்கிறேன். அதை எடுத்துக் கொண்டு வா'' என்றார்.

கோபி, ஆசிரியரின் ஓய்வறைக்கு விரைந்து தமிழாசிரியரின் மேசைமேல் இருந்த திருக்குறள் குறிப்பேட்டை எடுத்தான். அதில் இருந்து மடிக்கப்பட்ட ஓர் காகிதம் விழுந்தது. அடக்க முடியாத ஆவலுடன் கோபி அதை எடுத்துப் பார்த்தான். அது அழகான ஓர் சிறுவர் கதை! ஆர்வத்தில் ஒரே மூச்சில் படித்து முடித்தான். கதை அவன் எழுதிய எத்தனையோ கதைகளில் ஒரு கதை மாதிரியே இருந்தது. ஆனால், நல்ல விறுவிறுப்போடு இருந்தது. எழுதியவர் பெயரோ முகவரியோ அதில் இல்லை! தமிழாசிரியரும் ஓர் சிறுவர் எழுத்தாளரோ என்று எண்ணினான். எதுவாக இருந்தால் என்ன? முகவரி, பெயர் இடப்படாத, அழகான ஓர் கதை அது. அதை ஏன் தானே ஒரு பத்திரிகைக்கு அனுப்பக் கூடாது? தன்னுடைய பெயரில் ஒரு கதையாவது வரவேண்டும் என்ற ஏக்கம், இத்தனை காலமாக ஏமாறியதால் மனதில் ஏற்பட்டிருந்த காயத்தின் வலி, எல்லாமாகச் சேர்ந்து அவனுள் ஒரு வெறியை ஏற்படுத்தியது. விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை எண்ணிக் கூடப் பார்க்காது அந்தக் கதையைத் தன் பேரில், தான் எழுதி அனுப்பும் ''கோமாளி'' சிறுவர் இதழுக்கு



அனுப்பிவிட எடுத்து வைத்துக் கொண்டான்.

''திருக்குறள் குறிப்பேட்டில் எதுவுமே இல்லையா?'' என்று ஆசிரியர் கேட்ட போது ''இல்லையே சார்!'' என்று துணிந்து பொய் கூறினான் கோபி.

ஒருமாதம் ஓடியது. அன்று வெளி வந்த கோமாளி இதழில், கோபி தன் பெயரில் அனுப்பியிருந்த அதே கதை அழகிய வண்ணப்படங்களுடன் அட்டைப் படக்கதையாக வெளியாகியிருந்தது.

வீடுதேடி வந்து நண்பர்களும் தெரிந்தவர்களும் பாராட்டியபோது, கோபிக்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தமிழாசிரியரை எண்ணியபோது அவன் மனம் கலங்கியது. என்ன ஆகப்


போகிறதோ என்ற கலக்கத்தோடுதான் அவன் பள்ளிக்குப் போனான்.

இறைவணக்கத்திற்காக எல்லோரும் திரண்டபோது தலைமை ஆசிரியர், கோபியின் கதை கோமாளியில் வெளியாகியிருப்பதைக் குறிப்பிட்டு அவனை மேடைக்கு அழைத்துப் பாராட்டி, எல்லோரையும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யச் சொல்லி பெருமைப் படுத்தினார்.

தமிழ் வகுப்பு. நடுங்கிக் கொண்டே இருந்தான் கோபி. ஆசிரியர் வந்தார். அவனுடைய கதையைப் புகழ்ந்து பாராட்டி விட்டுப் பாடம் நடத்தினார். போகும்போது அவனைத் தனியே அழைத்து ''கோபி, பள்ளி முடிந்ததும் என்னை வந்து பார்'' என்று கூறினார்.

பள்ளி முடிந்தது. சோர்ந்து கலங்கிய முகத்துடன் கோபி, ஆசிரியர் அறைக்குச் சென்றான். முன்பே முடிவு செய்து வைத்திருந்தபடி ''சார், என்னை மன்னிச்சிடுங்க சார்'' என்று கண்ணீர் விட்டான். அதற்குமேல் பேச முடியவில்லை.

''கோபி, என் மாமாதான் கோமாளி பத்திரிகையின் பதிப்பாளர். கதையைத் தேர்வு செய்வதெல்லாம் நான் தான். இந்த ஊருக்கு வருவதற்கு முன்னாலேயே உன் பெயர் எனக்கு நன்கு அறிமுகம். நானே உன்னை அழைத்துக் கூற வேண்டும் என்று எண்ணினேன். இருந்தாலும் திடீரென்று கூறி உன்னைத் திகைக்க வைக்க வேண்டும் என்று இருந்தேன். இந்தக் கதை, நீ அனுப்பிய கதையேதான். அமைப்பும் நடையும் கவரத்தக்க விதத்தில் இல்லாததால் நானே முழுவதையும் திருத்தியமைத்து எழுதினேன். உன்னிடம் காட்டிவிட்டு, உன் பெயரைப் போட்டு அனுப்பவேண்டும் என்றே திருக்குறள் குறிப்பேட்டில் வைத்தேன். அதில் எதுவும் இல்லை என்று நீ சொன்னதும், சரி எங்கேயோ தவறி விட்டது என்று எண்ணிக் கொண்டேன். கடைசியில் என்னை மறந்து நானே அதை அனுப்பிருக்கிறேன்!'' என்றார் ஆசிரியர்.



''இல்லை சார்'' என்று நடந்ததைச் கூறி மன்னிப்புக் கேட்டான் கோபி.

''எழுத்தாளனுக்குரிய எல்லாத் தகுதிகளும், திறமையும் உன்னிடம் இருக்கிறது கோபி. கொஞ்சம் மெருகூட்டினால் போதும். பள்ளி இறுதி வகுப்பை முடி. நிறையப் படி. என் வாழ்த்துகள்'' என்றார் ஆசிரியர்.

கேளுங்கள் சொல்லப்படும்!

சேரநம்பி

ஆஸ்கார் அவார்டு வாங்கிய குழந்தை நட்சத்திரங்கள் உண்டா?

★ ரப்பர் பந்தை மண் தரையில் எறிந்தால் எம்புகிறது. ஆனால் மணல் தரையில் எறிந்தால் அப்படியே உட்கார்ந்து விடுகிறதே! இது எப்படி? - மு. சின்ன ராஜா, முதுக்கூர்.

ரப்பர் பந்தை எறிந்ததும், மண் தரையின் கெட்டித் தன்மை அதை எதிர்த்துத் தள்ளுகிறது. பந்து எம்புவது இதனால்தான். மணல் தரையில் இந்த கெட்டித் தன்மை இல்லை. பந்து விழுந்ததும், எதிர்த்துத் தள்ளாமல், மணல் விலகி அதற்கு இடம் கொடுத்து விடுகிறது. இதுவே பந்து எம்பாது இருப்பதற்குக் காரணம். மணல் வெளியில் நடக்கும் போது நம் கால்கள் புதைந்து விடுவதற்கும் இதுவேதான் காரணம்.

★ நாய்களுக்குக் கூடப் பல் தேய்ப்பதற்கு "டூத் பிரஷ்" இருக்கிறதாமே! இது உண்மை தானா? - முக. அகமத் பாட்சா, திண்டிவனம்.

உண்மைதான். 1961 ல் இந்த டூத் பிரஷை உருவாக்கிய பெருமைக்கு உரியவர் Bird Eyer என்பவர். இவர் நாய்களிடம் அபிமானம் கொண்டவர். எத்தனையோ நாய் கண் காட்சிகளுக்கு இவர் நடுவராக இருந்த போது, நன்கு வளர்க்கப்படும் பல நாய்களுக்கு சுத்தமான பற்கள் இல்லாததை அறிந்து அவரே இதை உருவாக்கினார். நம்ம ஊரில் கூட இது கிடைக்கிறதே!

★ கழித்தல் குறியான (-) மைனசை யார் அறிமுகப்படுத்தினார்கள்? - மொகமைதீன், அதிராமப்பட்டணம்.

மைனஸ் குறியை அறிமுகப்படுத்திய பெருமைக்கு உரியவர்கள் இத்தாலியர்கள். 13 ஆம் நூற்றாண்டு முதலே இவர்கள் இதைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள்.

★ அதிக ஆண்டு வாழும் பறவை நீக் கோழிதானே? - முத்து. கணபதி, சேந்தமங்கலம்.

நீக்கோழியின் ஆயுள் 50 ஆண்டுகளே. ஆஸ்திரேலியக் கிளிகள் 61 ஆண்டுகள் வாழும்.

★ நிமிடம் காட்டும் கடிகாரத்தை யார் கண்டு பிடித்தார்கள்? - வே. பவானி, தாராசுரம்.

நிமிட முள் வைத்த கடிகாரத்தை முதலில் அமைத்த பெருமைக்கு உரியவர் பிரபல ஓவியரான லியனாடோ டாவின்ஸிதான். (1510)

★ முன்னேறிய நாடுகளின் வரிசையில் முன்னணியில் இருக்கும் ஜப்பானில் 'டாக்கி' என்ற பேசும் திரைப்படம் 1931 ல் தான் தயாரானதாமே? என்ன காரணம்? - வொ. பாலாஜி, கருங்கல் பாளையம்.

பேசும் திரைப்படம் தயாரானதுதான் ஜப்பானில் 1931 லேயே தவிர, இதற்கு முன்பே பேசாத படங்கள் திரையிடப்பட்டு விட்டன. இவை ஒவ்வொரு ஊரிலும் திரையில் ஓடும் போது, கிரிக்கெட் கமென்டரி போல் ஒருவர் கதைச் சுருக்கம், பாத்திரங்களின் பேச்சு, பாடல்கள் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டே வருவார். ஆண், பெண், ராஜா, ராணி, வில்லன் காமடியன் எல்லாம் இவரே! எல்லா நாடுகளிலும் இதே நிலைதான். ஆங்கிலத்தில் இவர்களை டெமான்ஸ்ட்ரேட்டர்

என்பார்கள். இவர்களுக்கு தியேட்டர்காரர் களே சம்பளம் கொடுத்து வந்தனர். இவர்கள் மனம் வைத்தால் ஒரு படத்தைப் படு தோல்வியடையச் செய்யலாம். இவ்வளவு சக்தி மிக்க இவர்கள் ஜப்பானின் திரைப்படத் தொழிலில் கொடி கட்டிப் பறந்தனர். பேசும் படம் என்ற 'டாக்கி' வந்தால் தங்கள் பிழைப் புப் போய்விடும் என்று இவர்கள் கிளர்ச்சி செய்தனர். இவர்களுக்கு மாற்று வேலைக் கான ஏற்பாடுகளைச் செய்த பிறகே பேசும் படத் தயாரிப்பில் ஜப்பான் இறங்கியது. தாம தத்துக்குக் காரணம் இதுவே.

★ இலங்கை என்பதும் மாவிலங்கை என் பதும் ஒன்று தானா? - சு. பரசுராமன், ஸ்ரீமுஷ்ணம்.

இல்லை. இலங்கை என்பது இராமா யணத்தில் இராவணன் ஆண்டதாகக் கூறப் படும் கடல் சூழ்ந்த தீவு நகரம். மாவிலங்கை என்பது சங்க இலக்கியமாகிய சிறு பாணாற் றுப்படையில் சிறப்பித்துக் கூறப்படும் நகர். இது தென்னார்காடு மாவட்டத்தின் திண்டி வனம் வட்டத்தில் இருந்தது. இதை ஆண்ட மன்னர்களுள் சிறப்பான இடத்தைப் பெற்ற நல்லியக் கோடன் என்பவர், இசையில் அள வில்லாத ஈடுபாடுடையவர். இவர் பழகிய இசைக்கருவிகளில் இருந்தே பின் நாளில் நாக சுரம் தோன்றியது என்ற ஒரு கருத்தும் நிலவி வருகிறது.


★ பெரிய திரைப்பட நட்சத்திரங்கள் எல் லாம் அரசியலில் பெரிய பதவிகளை வகிப்பது போல் குழந்தை நட்சத்திரங்களாக இருந்தவர் கள் பெரிய பதவிகளை வகித்திருக்கிறார் களா? - கு. தேவநாயகி, மஞ்சள் குப்பம்.

Shirley Temple என்ற அமெரிக்கக் குழந்தை நட்சத்திரம், கல்வி கற்று படிப்படி யாக உயர்ந்து கானாவில் அமெரிக்காவின் தூதராக இருந்திருக்கிறார்! அமெரிக்க அதி பரின் வெள்ளை மாளிகையில் Chief of Protocol என்ற உயர் பதவியையும் வகித்தார்.

★ செவ்வாய் கிரகத்திற்கு இரண்டு நிலாக் களாமே! அப்ப மற்ற கோள்களுக்கு எத்தனை நிலாக்கள்? - இரோ. பொரரைா, வாணியம் பாடி.

செவ்வாய்க்கு - 2 நிலவுகள். வியாழனுக்கு 15. சனிக்கு 20! யுரேனசுக்கு 10. நெப்டியூனுக்கு 2. ஆனால் புளூட்டோவுக்கு மட்டும் ஒன்று தான் நம்ம பூமியைப் போல்!

★ குரங்குகளும் குல்லாக்காரரும் என்ற கதை எதில் வருகிறது? பஞ்சதந்திரத்திலா? - கா.மா. மன்னுலால், ராணிப்பேட்டை.



பஞ்சதந்திரம் அல்ல. ஈசாப் கதைகளில் உருவானதே இது!

★ சிறுவர் இலக்கியம் படைக்க அவசியம் என்ன தேவை? - வெ. மணவாளன், சிவபுரி.

எந்த ஒரு நிகழ்ச்சியையும் சிறுவர் நோக்கில் கூர்ந்து பார்க்கும் கற்பனைத் திறன் வேண்டும்.

★ திரைப்படத் துறையில் Clares' அவார்டு என்பது என்ன? இது இப்பொழுது தரப்படுகிறதா? - மு. புனிதா, மு. அமுதா, பெருந்துறை.

இப்பொழுது வழங்கப்படும் 'பிலிம் பேர்' அவார்டுகள்தான் தொடக்கத்தில் [Clares Award' என்று வழங்கப்பட்டன. டைம்ஸ் ஆப் இந்தியா, (பிலிம் பேர் பத்திரிகையின் வெளியீட்டாளர்கள்) நிறுவனத்தில் இருந்த திரைப்படத் திறனாய்வாளரின் பெயர் "Clare Mendonca". இவரது பரிந்துரையின் பேரிலேயே இந்தப் பரிசுகள் தரப்பட்டதால் இவரது பெயராலேயே தொடக்க காலத்தில் இந்தப் பரிசுகள் தரப்பட்டன.



★ டிரிலியான் என்பது என்ன? - எம். வேத வல்லி, பெரிய காஞ்சிபுரம்.

இது மின்சாரத்தின் அழுத்தத்தை (வால்ட்) அளக்கும் குறியீடு. ஒரு டிரிலியான் என்பது ஒன்றும் அதற்குப்பின்னால் 18 பூஜ்யங்களும் கொண்ட வால்ட் ஆகும்.

★ ஆஸ்கார் அவார்டு வாங்கிய குழந்தை நட்சத்திரங்கள் இருக்கிறார்களா? - மு. பெரிய சாமி, வெட்டிப் பாறை.

ஸ்பெஷல் ஆஸ்கார் அவார்டு வாங்கிய குழந்தை நட்சத்திரங்கள்தான் இருக்கிறார்கள். Shirley Temple (வயது 6. அவார்டு கிடைத்தது 1934ல்). Margaret o' Brain (வயது 7, அவார்டு கிடைத்தது 1944 ல்.) Tatum o' Neal (வயது 10. அவார்டு கிடைத்தது 1973 ல்). மற்றவர்கள் 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

★ ஜீன்ஸ் பேண்ட்டைக் கண்டு பிடித்தவர் யார்? - வெ. பாக்கியநாதன், பாளையங் கோட்டை.

அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த Levi Strauss என்பவரே 1850 ல் இந்த ஜீன்ஸைத் தயாரித்தவர். முரட்டுப் பஞ்சில் இருந்து இது தயாரிக்கப்பட்டது. இந்த பேண்ட் பைகளின் விளிம்புகளுக்கு உலோகப் பட்டைகள் வைக்கப்பட்டன. ''ஜீன் என்றால் உறுதியானது'' என்பது பொருள்.



நமது பூமி


பேரிக் காயைப் போலவே
பூமி இருக்கிறது!
சூரிய வட்டம் சுற்றியே
தன்னையும் சுற்றுகிறது!

இருக்கும் அளவு நீருமே
எழுபத் தொன்றாகும்
இருபத் தொன்பது பூமியில்
இருக்கும் நிலமாகும்!

உயரே தெரியும் சூரியன்
உதவி செய்கிறது
உயிர்கள் வாழ வெப்பமும்,
ஒளியும் கொடுக்கிறது!

நீரும், வளியும், ஏற்றதாய்
நிலமும் பெற்றிடவே
பாரும் உயிர்கள் தோன்றிடும்
பெருமை பெற்றதுவே!

- புலேந்திரன்



அதெப்படி?

ஒரு பணக்காரரிடம் செருப்பும் குடையும் இருந்தன. எங்கே சென்றாலும் அவர் செருப்பை அணிந்து கொண்டு போவார். வெயில் மழையாக இருந்தால் குடையைப் பிடித்துக் கொண்டு போவார். வீட்டுக்கு வந்ததும், செருப்பை வாசல் நடையில் மூலையில் விட்டு விடுவார். குடையை மட்டும் மடக்கிக் கூடத்தில் ஒரு மூலையில் சாத்திவைப்பார்.

தன்னைப் பணக்காரர் கூடத்து மூலை வரை எடுத்துச் சென்று வைக்கிறார் என்று குடைக்கு கர்வமான கர்வம். அந்த கர்வத்தில் செருப்பைத் தாழ்வாக நினைத்தது.

''என்ன செருப்பு நண்பரே, இன்னிக்கு டி.வி.யில என்ன சினிமா தெரியுமா?'' என்று குடை செருப்பை வம்புக்கு இழுத்தது.

''எனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?'' என்று அடக்கமாகக்கூறியது செருப்பு.

''ஆமாம் ஆமாம். எனக்கு மறந்தே போச்சு. உன்னைத்தான் வாசல் நடை மூலையில் வைத்து விடுகிறார்களே! அந்த நடையைக் கடந்து நீங்கள் எங்கே உள்ளே வந்திருக்கிறீர்கள்? பாவம் உங்க நிலை அப்படி. கூடத்து மூலையில் இருந்து கொண்டு டிவியைப் பார்க்கிறேன். உலகக் கால்பந்துக் கோப்பைக் கான கால்பந்தாட்டம், கபில் தேவுக்கு நடந்த பாராட்டுக் கூட்டம் எல்லாம் நான் பார்த்தேன். எல்லாவற்றிற்கும் ஒரு கொடுப்பினை வேணும் நண்பரே'' என்று பெருமை பேசியது குடை.

''குடை நண்பரே, நீங்களும் நானும் மனிதர்களுக்கு உழைப்பதற்காக மனிதர்களால் உருவாக்கப்பட்டவர்கள். நான் காலில் இருந்து உழைக்கிறேன். நீங்கள் தலைக்கு மேல் இருந்து உழைக்கிறீர்கள். இதில் என்ன பெருமை?'' என்றது செருப்பு.

''அதெப்படி? வாசல் நடை மூலையில் ஒடுங்கி விடும் நீயும், கூடத்தில்



மூச்சடக்கி ஓடுதற்கு
முயற்சி வேண்டுமே
முன்னும் பின்னும் சாடுதற்குப்
பயிற்சி வேண்டுமே
பாய்ச்சலோடு பதனமாக
ஒதுங்க வேண்டுமே
பையப் பைய எதிரி கண்ணும்
பிதுங்க வேண்டுமே

சடுகு டென்றே இடைவிடாத
சப்தம் வேண்டுமே
தாமதத்தைத் தவிர்க்க வல்ல
சக்தி வேண்டுமே
விடுவி டென்றே எதிரி மேல்கை
வீச வேண்டுமே
வெற்றி மேலே வெற்றி சேர்க்க
ஆசை வேண்டுமே

எதிரி நம்மைத் தாக்கிடாமல்
இருக்க வேண்டுமே
எட்டி நின்று அவரைக் கொஞ்சம்
ஏய்க்க வேண்டுமே
உதிரி உதிரி யாக அவரை
ஒடுக்க வேண்டுமே
ஒன்று சேர விட்டிடாமல்
தடுக்க வேண்டுமே

சகல உறுப்பும் இயங்க வல்ல
சக்தி வேண்டுமே
சாத்துவத்தைக் கொண்ட வளர்ச்சி
தசைக்கு வேண்டுமே
தகுந்த மனமும் உடலும் நமக்குத்
தங்க வேண்டுமே
சடுகு டாட்டம் தமிழர் மண்ணில்
தழைக்க வேண்டுமே.

- பூவிழிவண்ணன்

இருந்து டி.வி. பார்க்கும் பெருமை பெற்றுள்ள நானும் ஒன்றாகி விடுவோமா? நம்ம இருவரில் நான்தான் பெருமைக்கு உரியவள்'' என்றது குடை.

''சரி, அப்படியே இருங்களேன். நான் மறுக்க வில்லையே?'' என்றது செருப்பு அப்பொழுதும் அடக்கமாக.

''அப்படி ஒப்புக் கொள்ளும். இனி மேல் என்னை நீங்கள் குடையாரே என்று வெறுமே அழைக்கக்கூடாது. திருவாளர் குடையாரே என்று அழைக்க வேண்டும்.''

''சரி திருவாளர் குடை அவர்களே!'' என்றது செருப்பு.

மழைக்காலம் முடிந்தது. வீட்டுக்கு வெள்ளை அடிக்க ஏற்பாடுகள் நடந்தன. வேண்டாத கண்டா முண்டா சாமான்களைத் தேடிப் பிடித்து அப்புறப்படுத்தி ஒழித்துக் கொண்டிருந்தார்கள்.

கூடத்து மூலையில் சாத்தியிருந்த குடையைப் பணக்காரரின் பெரிய பையன் கவனித்து விட்டான்.

''அப்பா இந்தக் குடையை என்ன செய்வது?''

''இதை உதறி, சுத்தி, கண்டா முண்டா சாமான் அறையில் வைத்து மூடிவிடு. இனிமே வெயில் காலம் வரும்போதுதானே இது வேண்டும்? குடையில்லாமல் தாட்டிவிடலாம். செருப்பு இல்லாமல் இருக்க முடியாது. எந்தக் காலத்திலும் மக்களுக்கு உதவுவது செருப்புத்தான். மனிதனுக்காக உழைத்து உழைத்து ஓடாகிப் போகும் உற்ற நண்பன்'' என்று கூறினார் பணக்காரர்.

பெரிய பையன் குடையை எடுத்து வாசலுக்குக் கொண்டு வந்து தட்டினான்.

''நண்பரே, வெயில் காலம் வரும் போது மீண்டும் சந்திப்போம். அது வரை கண்டா முண்டா சாமான் அறையில் பத்திரமாக இருங்கள் அதுவரை வணக்கம்'' என்றது செருப்பு.

கர்வம் அடங்கி குடை தலை கவிழ்ந்தது!

-ஆர். சத்தியமூர்த்தி




காந்தியும் வேப்ப மரமும்!

காந்திஜியும், சபர்மதி ஆசிரமத்தில் ஆசிரியராக இருந்த கலேல்கரும் ஏரவாடா சிறையில் ஒன்றாக அடைக்கப்பட்டனர். சிறையில் ஏராளமான வேப்ப மரங்கள் இருந்தன. கலேல்கர் காந்திஜியிடம், "தினமும் காலையில் உங்களுக்கு பல் துலக்க ஒரு வேப்பங்குச்சி ஒடித்துத் தருகிறேன்" என்றார். காந்திஜியும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். மறுநாள் தான் கூறியபடியே கலேல்கர் ஒரு நீளமான வேப்பங்குச்சியை ஒடித்து காந்திஜியிடம் கொடுத்தார். அக்குச்சியால் பல் துலக்கி முடித்த காந்திஜி அதனை நன்றாகக் கழுவி உபயோகித்த பகுதியை சிறிது உடைத்து விட்டு மீண்டும் அதே குச்சியை மறுநாள் உபயோகப்படுத்த எடுத்து வைத்தார். கலேல்கர், "பாபுஜி, சிறையில் வேப்பமரத்திற்குப் பஞ்சம் இல்லை! ஒரே குச்சியை ஏன் உடைத்து நாலைந்து நாட்களுக்குப் பயன்படுத்த வேண்டும்?" என்றார். அதற்கு காந்தி "நம்மைப் போல் மரமும் கூட ஒருவகை உயிர்தான். அதுவும் உணவு உண்கிறது. நீர் அருந்துகிறது. சுவாசிக்கிறது. நமக்கு அடிபட்டால் எப்படி வலிக்குமோ அதேபோல் மரத்தின் கிளைகளை உடைக்கும் போதும் மரத்திற்கும் வலியும் வேதனையும் ஏற்படும். நாமாவது வலி ஏற்பட்டால் வாய் விட்டுக் கதறுகிறோம். ஆனால் மரத்தால் தன் வேதனையைக் கூட வெளிப்படுத்த முடியாது. நமது தேவைக்காக ஒரு மரத்திற்கு வேதனை தரும் போதுகூட குறைந்தபட்ச வேதனையைத்தான் தர வேண்டும்," எனக் கண்கலங்கக் கூறினார்.

'காந்திஜியின் வாழ்வில் நடந்த சுவையான சம்பவங்கள்' நாலிலிருந்து
- சூர்யா, தேவனாங்குறிச்சி.





அறிவியல் போட்டி.

மேலிருந்து கீழ் :

1. மீனுக்காக ஒற்றைக் காலில் தவ மிருப்பது.
2. இதைப் பாடாத கவிஞர்களே கிடையாது. ஜோசியம் கூடப் பார்க்கும்.
3. இது, தான் பிடித்த மீன்களைத் தன் தொண்டைப் பைக்குள் வைத்துக் கொள்ளும். மீன் பிடிக்கவே இதைப் பயன்படுத்தினார்கள்.
4. ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டு. பகிர்ந்து உண்ணும்.
5. துருவப் பிரதேசம் என்றாலே இதுதான் நினைவுக்கு வரும்.
6. நமது தேசியப் பறவை.
7. இது நன்மையே செய்கிறது. இருந்தாலும் இது நல்ல சகுனம் அல்ல என்கிறார்கள்.
8. மிக உயரமான பறவை
9. திருமாலின் வாகனம்.

இடமிருந்து வலம் :

10. பறக்க இயலாத வெளி நாட்டுப் பறவை. மூக்கு நீண்டது.
11. பறவைகளின் அரசன். திருக் கழுக் குன்றத்தில் இவைகளைக் காணக் கூட்டம் வரும்.
12. அடைகாக்கத் தெரியாது. பாடும்.
13. அமைதியின் சின்னம்
14. தோகை உண்டு. கானமயி லாடக் கண்டிருந்த...
15. இது கொத்தாத மரமே இல்லை.
16. இது மீனைக் கொத்திப் பிடிக் கும்.
17. சிபி மன்னரைச் சோதிக்க வைத்தது இதுவே.
18. மிகவேகமாகப் பறக்கும் மிகச் சிறிய பறவை.

கூப்பனில்லாது வருபவை ஏற்கப் படமாட்டா.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. அயல்நாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள தங்கள் நண்பர் அல்லது உறவினர் முகவரியைத் தரவேண்டும்.

அறிவியல் போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

பின்கோடு .... முடிவு தேதி 31.7.94.

சுறாவுக்கு எத்தனை பற்கள்?

ரேவதி



பொன்னன் கட்டுமரத்தின் துடுப்பை வேகமாகப் போட்டான்.

"தம்பி இதுக்கு மேலே போக வேண்டாம். இனிமே வரதெல்லாம் சுறாமீன் சஞ்சாரப் பகுதி" என்று எச்சரிக்கை செய்தான் கொம்பன்.

கொம்பன் அந்தப் பகுதியில் கடல் அனுபவம் மிக்கவன். பொன்னன் கொம்பனின் நண்பன் மகன். கொச்சியில் இருந்து வந்திருந்தான்.

கட்டு மரத்தில் பனை ஓலைக் கூடையில் பிடித்த மீன்களெல்லாம் கொட்டி வைக்கப்பட்டிருந்தன.

"அண்ணே, நான் இது வரை சுறாமீனைப் புடிச்சதே இல்லை. இப்ப ஒன்றைப் புடிச்சுப் பார்க்கலாமா?" என்று ஆவலுடன் கேட்டான் பொன்னன்.

"சுறாமீனைப் புடிக்க ஆள்பலம் வேணும் தம்பி. அது வாலைச் சுழற்றி அடிக்கும் போது கவிழாத படகு தேவை. இன்னொரு நாள், விசைப்படகில், ஆள் கட்டோடு வரலாம். இப்ப வேணுமானா, சுறாவை வரவழைச்சுக் காட்டறேன்" என்றான் கொம்பன்.

பிடிக்கும்போது அடிபட்டு இரத்தம் கசிந்து கொண்டிருந்த ஒரு பெரிய மீனை, ஓலைக் கூடையில் இருந்து எடுத்த கொம்பன், அதைப் பலமாகக் கயிற்றில் கட்டி, நீரில் எறிந்தான்.

"தம்பி, சுறாக்களுக்கு மோப்ப சக்தி மிக அதிகம். நீரில் இரத்தக் கசிவு கலந்தால் பல மைல்களுக்கு அப்பால் இருந்தும் இவை கண்டு பிடித்துவிடும். பாரேன், இந்த மீனின் இரத்தக் கசிவைக் கண்டு பிடித்து எத்தனை சுறா ஓடி வருகிறது என்று!"

கொம்பன் கூறி முடிக்க

வில்லை, கயிற்றில் கட்டப் பட்டிருந்த மீனை நீருக்குள் சுறாமீன்கள் இழுப்பது தெரிந்தது. வாளால் சுழற்றி வீசப்பட்ட நீர், உயர்ந்த அலைகளாக எழும்பி கட்டு மரத்தை அலைக்கழித்தது. ஆங்கில 'யூ' எழுத்து வடிவாக வளைந்திருந்த சுறா கட்டு மரத்தையே தாக்கிக் கவிழ்த்துவிட முயன்றது. சண்டை போட்டுக் கொண்டே இரண்டு சுறாக்கள் வாயைப் பிளந்தபடி ஒன்றை ஒன்று தாக்க முயன்ற போது பயங்கரமாக இருந்தது.

''யெப்பா, முதலைக்குப் பல் வரிசை இருப்பது மாதிரி என்ன இதுகளுக்கும் இருக்கு!'' என்று வியந்தான் பொன்னன்.

''இனிமே இந்த இரத்தம் கசிந்த மீனை விடாம பிடிச்சிருக்க முடியாது. அது நமக்கே ஆபத்து'' என்று கயிற்றை விட்டான் கொம்பன்.

அந்த மீனுக்காக சுறாக்கள் மோதிக் கொண்ட போது, கட்டுமரம் படாத பாடு பட்டது. அரும்பாடு பட்டு, கட்டு மரத்தை அந்த இடத்தில் இருந்து விலக்கிக் கொண்டு போனார்கள்.

''தம்பி, முதலைகளுக்கு பல் ஒரு வரிசைதான். ஆனா சுறாக்களுக்குக் குறைஞ்சது நாலு வரிசைப் பல் இருக்கும். இரையைக் குத்திக் கிழிக்கிறது எல்லாமே முதல் வரிசைப் பற்கள்தான். இதுல ஒரு பல் உடைஞ்சு விழுந்துட்டா, பின் வரிசையிலிருந்து ஒரு பல் அந்த விழுந்த இடத்துக்கு நகர்ந்து வந்து விடும்! இல்லேன்னாக்கூட இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை சுறாக்களுக்குப் புதிய பல் முளைத்து விடுகிறது. புலிச்சுறான்னு ஒரு வகை. இதுக்கு மட்டும் பத்து வருஷத்திலே 24,000 பல் முளைக்கிறது!'' என்று விளக்கினான் கொம்பன்.

''சுறாவின் எந்த உறுப்பும் வீண் ஆவது இல்லை. பற்களால் மாலைகள், தோலால் பைகள் செருப்புகள், எலும்பால் மருந்துத்தூள், ஈரல் கொழுப்பில் இருந்து எண்ணெய், இறைச்சி என்று அதன் உடம்பின் எல்லா பாகங்களும் மனிதர்களுக்கு உதவுகின்றன. ஆங்கிலேயர்களுக்கு சுறா என்றால் கொள்ளை ஆசை. நம்ம நாட்டுல பிரிட்டிஷ் ஆட்சி நடந்துக் கிட்டிருக்கறப்போ, எங்க தாத்தா பத்து வருஷத்துல ஆயிரம் சுறா புடிச்சுக் கொடுத்தார்னு ஆங்கில துரை, ஆயிரம் சுறா புடிச்ச மாரிமுத்துன்னு எங்க தாத்தாவுக்குப் பட்டம் தந்தாராம்!'' என்று தொடர்ந்து கூறினான் கொம்பன்.


''இதன் உடம்பு ஸ்லேட் மாதிரி மொழுமொழுன்னு இருக்கே!''


''தலையில் இருந்து வால்பக்கம் தடவினால் அப்படித்தான் இருக்கும். ஆனால், வாலில் இருந்து தலைப் பக்கம் தடவினால் உப்புக் காகிதத்தைத் தொடுவதுபோல் சொரசொரப்பாக இருக்கும். பைலட் மீன், ரிமோரா என்று இரண்டு வகை சிறிய மீன்கள் இவைகளின் உடம்போடு ஒட்டிக் கொண்டிருக்கின்றன. சுறாக்கள் இவைகளைக் கண்டு கொள்வதில்லை. காரணம், இவை சுறாவின் பற்களையும், செதில்களையும் சுத்தப்படுத்துகின்றன. சுறாக்களால் வண்ணங்களைப் பிரித்து அறிய முடியாது. பார்வையும் கூர்மை கிடையாது. மந்தமான வெளிச்சத்தில்தான் இதற்குப் பார்வை தெளிவாகத் தெரியும்.''

''அதனால்தான் சுறாக்கள் பெரும்பாலும் மாலை நேரத்தில் மனிதர்களைத்

''அவரை வைச்சு ஆஸ்பத்திரி திறப்பு விழாவை நடத்தியது தப்பாயிடுச்சு! முதல் மாத்திரையைத்தான் தான் சாப்பிடுவேன்னு அடம்பிடிக்கிறார்!''

- எஸ். அருணா





தாக்குகிறதா?''

''சுறாக்களின் உடம்பில் இருப்பவை வலுவான எலும்புகள் அல்ல. நமது மூக்கின் நுனிப்பகுதி CARTILAGE என்ற மென்மையான எலும்பு போன்ற பொருளால் ஆனது. இதைப் போன்றே சுறாவின் உடல் எலும்புகள் எல்லாம் CARTILAGE ஆல் ஆனவை.''

''சுறாக்கள் மனிதர்களைக் கண்டால் விடாது என்கிறார்களே...?''

''இது முழுக்க உண்மை அல்ல. சுறாக்களில் சுமார் 300 வகை உண்டு. இதில் 30 வகைகளே மனிதர்களைத் தாக்குபவை. அதுவும்கூட சில நேரங்

களில்தான். சுறாக்களுக்குப் பசி வந்து விட்டால் எதிர்ப்பட்ட எல்லாவற்றையும் விழுங்கி வைக்கும். ஒரு சுறாவின் வயிற்றில் இருந்து ஒரு மண்ணெண்ணெய் டின், பிளாஸ்டிக் பொம்மை, கோணி எல்லாம் எடுத்திருக்கிறார்கள். சுறாக் குட்டிகளுக்குப் பிறக்கும்போதே பற்கள் இருக்கும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவை இரண்டு குட்டிகள் போடும். சில வகை சுறாக்கள் நூறு குட்டிகள் கூடப் போடும். குட்டிகளை அம்மா விட்டு விட்டுப் போய் விடும். இவைதானே இரைதேடிப் பிழைத்துக் கொள்ளும். பெரிய சுறாக்கள் குட்டிச் சுறாக்களைச் சாப்பிட்டு விடும். ஆனால், தாய் தன் குட்டிகளைச் சாப்பிடாது. மாதக் கணக்கில் இவை பட்டினி கிடக்கும். உடம்பு இளைக்காது. ஈரலில் சேமித்து வைக்கப்பட்டுள்ள கொழுப்பும் எண்ணெயும் இவைகளைப் பாது காக்கும்''


''சுறா கடலில் மட்டும்தான் இருக்குமா?''

''அப்படி இல்லை. நல்ல நீரில் நதிகளில் வசிக்கும் சுறாக்களும் உண்டு. பொதுவாக சுறாக்கள் ஆழமான பகுதிகளில்தான் வசிக்கும். 4000 மீட்டர் ஆழத்தில் வசிக்கும் சுறாக்கள்கூட இருக்கின்றன''

பொன்னன் துடுப்பை வேகமாகப் போட்டான்.

அறிவியல் உண்மைகள்

- சுறாக்கள் 350 மில்லியன் ஆண்டுகளாக உலகில் வாழ்பவை. அதிக உருமாற்றம் ஏதுமில்லை.
- குளிர் இரத்த வகை. 300 வகைகள். 30 வகைகளே மனிதர்களுக்கு சில நேரங்களில் எதிரிகள்.
- உடம்பில் இருப்பவை எலும்புகள் அல்ல. மெல்லிய CARTILAGE ஆல் ஆனவை.
- மங்கலான வெளிச்சத்தில்தான் பார்வை அதிகம்.
- குட்டிபோடும் இனம். தாய்தன் குட்டிகளைத் தின்னாது. மற்ற சுறாக்களின் குட்டிகளைத் தின்னும். எதையும் உண்ணும் இனம்.
- பற்கள் 4 வரிசைகள், அதற்கு மேலும் உண்டு. புதிய பற்கள் 2வாரங்களுக்கு ஒருமுறை முளைக்கும். BASKING SHARK க்குப் பற்களே கிடையாது!
- கொழுப்பும், எண்ணெயும் A வைட்டமின் நிரம்பியவை.
- சுறாக்கள் இல்லையெனில் கடலில் உள்ள சிறிய மீனினங்கள் பெருகி நீந்த இடமின்றித் தவித்து இறக்கும்.
- வேல் சுறா (WHALE-SHARK) 15 மீட்டர் நீளம் வரை வளரும். DWARF சுறாவின் நீளம் 5 அங்குலமே!



''உன் நாய்க்கு போட்டோ எடுக்கத் தெரியுமா? ஆச்சரியமாயிருக்கே?''

''போட்டோவைக் கீழே போட்டால் வாயால் கவ்வி எடுக்குமே...!''

- கிரு. சிவா


புயாவா பாவம்!

பழம் பெருமை மிக்க நாடுகளில் சீனாவுக்கு சிறப்பான இடம் உண்டு. சிங்கப்பூரில் சீனர்கள் தொகை குறிப்பிடத்தக்க அளவுக்கு இருப்பதால், சீன நாகரீகத்தின் சிறப்பை இங்கு கண்டு களிக்கலாம். சீனாவின் பழம் பெருமை, கலைவளத்தை அறிமுகப்படுத்தும் இடமாக, சிங்கப்பூரில் உள்ள ஹௌபர் வில்லா (HAWPAR VILLA) என்ற வேதாள உலகம் (DRAGON WORLD) அமைக்கப்பட்டிருக்கிறது. இதை ஒரு மினி சீனா என்றே கூறலாம்.

இந்த ஹௌபர் வில்லாவில் சீனாவின் வரலாற்றையும் (யுவான் சுவாங் உட்பட) தேவதைக் கதைகளையும் கண்களைக் கவரும் வகையில் பொம்மைக் காட்சிகளாகச் செய்து வைத்திருக்கிறார்கள். வேதாளங்களின் பல்வகைத் தோற்றங்கள் மயக்க வைக்கின்றன. தேவதைக் கதைகளுக்குக் கீழே விளக்கத்தையும் எழுதியிருக்கிறார்கள். அதனால் எளிதில் புரிந்து மகிழ முடிகிறது. குழந்தைகளுக்கு இதை விட்டுப் போகவே மனம் வராது.

சீனாவின் புராணப் பெருமை மிக்க வேதாளம் தன் மிகப் பெரிய வாயைத் திறந்து படுத்துக் கொண்டிருப்பது போல் ஒரு பிரும்மாண்டமான பொம்மையை வண்ண மயமாக்கி வைத்திருக்கிறார்கள். இதன் வாய்க்குள் அரிசி மூட்டை அடுக்கிய ஒரு லாரியே போகலாம் என்றால், இதன் அளவு எத்தனை பெரிதாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்! ஆசியாவிலேயே மிகப்பெரிய வேதாளச் சிலை என்ற பெருமையும் இதற்கும் உண்டு!

இது வெறும் சிலை மட்டுமல்ல, வாயைத் திறந்து நீருக்குள் படுத்துக் கிடக்கும் இதன் வாய்க்குள் ஒரு படகுப் போக்கு வரத்தே நடக்கிறது! ஒரு படகில் இருபதுபேர் போகலாம். புராதன வடிவில் படகு அமைக்கப்பட்டுள்ளது. வேதாளத்தின் வாய்க்குள் இருட்டு. இரு பக்கமும் சீன புராண எமலோகக் காட்சிகள் மின்சாரத்தால் இயங்குகின்றன. சாட்டையடி, எண்ணெய்க் கொப்பரை எல்லாம் உண்டு. ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கூறிக்





* சிரிக்கும் புத்தர்

கொண்டே வருகிறார்கள். தண்டனை அனுபவிப்பவர்கள் (நடிக்கும் பொம்மைகள்) போடும் கூக்குரலும் வேதனை அழுகுரலும் இளகிய மனமுடையவர்களைக் கண்டிப்பாகக் கலங்க வைக்கும்.

வேதாள சிலையைப் போலவே மிகப்பெரிய சிரிக்கும் புத்தர் சிலையும் இருக்கிறது. இதன் தொப்பையைத் தடவிக் கொடுத்தால் செல்வமும் அதிர்ஷ்டமும் பொங்குமாம்! வருபவர்கள் எல்லாம் தொப்பையைத் தடவிக் கொடுத்து புகைப்படமும் எடுத்துக் கொள்கிறார்கள்.


ஹௌபர் வில்லாவில் மூன்று அரங்குகள் இருக்கின்றன. ஒன்றில் சிங்க நடனம் நடக்கிறது. இருவர் சிங்கத்தின் உடலில் புகுந்து கொண்டு தாளம் தப்பாது ஆடி, ஓடி, உருண்டு, பாடி, பேசி அசத்துவார்கள். காட்சியைப் பார்க்க வருபவர்கள் விரும்பினால் அவர்களுக்கும் சிங்க உடை தந்து ஆட வைத்து மகிழ்விக்கிறார்கள்.

மற்றொரு அரங்கில் பொம்மலாட்டம். இதன் பாத்திரங்கள் எல்லாம் பொம்மைகளே. கைதேர்ந்த சீனக் கலைஞர்கள் இயக்குகிறார்கள். குழந்தைகளை அரும்பாடுபட்டுத்தான் வெளியே இழுத்து வரவேண்டும். உலகப் புகழ் பெற்ற காகமும் நரியும் கதை தினமும் நடத்தப்படுகிறது. பொம்மலாட்டத்திற்கான இசையே மனதை ஈர்க்கிறது. சீன, ஜப்பானிய தொடர்புள்ள இசை என்பதை நமக்கு அறிவுறுத்துகிறது.

மூன்றாவது அரங்கம் மினி திரையரங்கம். சீனாவின் வரலாற்றை விளக்கும் வண்ணப்படம். அரை மணிக்கு ஒரு காட்சி இருக்கிறது.

இந்த மூன்றையும் தவிர இன்னொரு திறந்த வெளி அரங்கமும் இருக்கிறது. இது சோலைகளுக்கு நடுவே, மரங்களின் நிழலில் அமைந்துள்ளது. இதில் சீனாவின் தேவதைக் கதைகளும், சாகசக் கதைகளும் நடித்துக் காட்டப்படுகின்றன. காட்சிக்கு வருபவர்களும் பங்கு கொள்ளலாம். பளபளக்கும் வண்ண உடைகள், பட்டுவண்ணக் கிரீடம், வாள் எல்லாவற்றையும் அவர்களே அணிவிக்கிறார்கள். கதையைக் கூறி, பாத்திரங்களின் சிறப்பையும் விளக்கி, பங்கு கொள்ள வைக்கிறார்கள். வெளிநாட்டினர்தான் இங்கு மொய்த்துக் கொள்கிறார்கள்.

ஹௌபர் வில்லாவின் முக்கிய சிறப்பு, அங்கு அமைக்கப்பட்டுள்ள நீர்



வழிப் படகுச் சவாரி. (FLUME RIDE) வளைந்தும், உயர்ந்தும், தாழ்ந்தும் நீளமான நீர்ப்பாதைகளை அமைத்திருக்கிறார்கள். இருபக்கமும் கைப்பிடிச் சுவர்களுக்கு இடையே நீண்ட சதுர வடிவில் வண்ணப் படகுகள். படகுக்குக் கீழே இரு பக்கமும் சக்கரங்கள் உள்ளன. இவை தாங்களாகவே இயங்கி படகை வேகமாக ஓடவும், மெதுவாக ஓடவும், உயரத்தில் ஏறவும், கீழே இறங்கவும் வைக்கின்றன. ஒரு படகில் நான்கு பேர். பிடித்துக் கொண்டு உட்கார பலமான கைப்பிடிகள் இருக்கின்றன. படகுகள் உயர்ந்தும், தாழ்ந்தும், வேகமாகவும், மெதுவாகவும் ஓடுகின்றன. ஒரு இடத்தில் பத்து மீட்டர் உயரத்தில் உயர்ந்து, உடனே தாழ்ந்து ஐந்து மீட்டர் ஆழத்தில் சரிகின்றன. பிறகு படிப்படியாக உயர்ந்து, ஐம்பது மீட்டர் உயர விளிம்பு வரை உயர்ந்து, அங்கிருந்து அப்படியே தொபீர்! கீழே ஆழமான நீருக்குள் சரிந்து ஆளுயரத்திற்கு நீர் வாரியடிக்கிறது. இரண்டு பக்கங்களிலும் விளிம்புகள் அமைக்கப்பட்ட இடைவெளிக்குள், மினி தண்டவாளத்தின்மேல், சக்கரங்களினாலேயே படகுகள் பாதுகாப்பாக இயக்கப் படுகின்றன. படகு விழுந்த அடுத்த கணமே அது அங்கிருந்து நகர்கிறது. அது நகர்ந்து போன அடுத்த நொடியில் பின்னாலேயே இன்னொரு படகு தொப்! மோதிக் கொண்டு விடுமோ என்று பயந்தாலும் அதற்கு வாய்ப்பு இல்லாதபடி நொடிக்கணக்கில், ஒவ்வொரு சிறு அசைவையும் திட்டமிட்டு இயக்குவது பிரம்மிப்பைத் தருகிறது!

ஹௌபர் வில்லாவில் உள்ள கடைகளில் சீனாவின் எல்லாப் பொருள்களும் கிடைக்கின்றன. ஊசியில் இருந்து பீங்கான், புத்தகங்கள், பட்டுத் துணிகள், காலணி, மாலைகள் வரை எல்லாம் கிடைக்கின்றன. சென்னை நண்பரோடு புயா ஹௌபர் வில்லாவுக்கு வந்திருந்தார். மற்ற நண்பர்களும் சேர்ந்து கொண்டனர். அவர்கள் எத்தனையோ முறை ஹௌபர் வில்லாவுக்கு வந்திருந்தாலும், புயாவுடன் போகும் அனுபவமே தனிதானே? எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து விட்டு கலைப் பொருள்கள் விற்பனைக் கடைக்கு எல்லோரும் வந்தனர்.





இருப்பாயே!

உதவி தேவைப் படுவோர்க்கு
உன்னால் முடிந்தால் செய்வாயே?
உதவி செய்யா திருந்தாலும்
ஊறு விளைக்கா திருப்பாயே!

வேலை கேட்டு வருவோர்க்கு
விருப்பம் இருந்தால் கொடுப்பாயே!
வேலை கொடுக்கா திருந்தாலும்
வேலையைக் கெடுக்கா திருப்பாயே!

உணவு கேட்டு வருவோர்க்கு
உண்பதில் கொஞ்சம் கொடுப்பாயே!
உணவைக் கொடுக்கா திருந்தாலும்
உண்பதைத் தடுக்கா திருப்பாயே!

நல்ல கருத்தை மக்களுக்கு
நாளும் உரைத்து வருவாயே!
நல்லதை உரைத்திடா திருந்தாலும்
நலங்கெட உரைத்திடா திருப்பாயே!

- ரன்

கண்கவர் செருப்பு வகைகள் சென்னை நண்பரைக் கவர்ந்தன. ஊரில் இருக்கும் பெண்ணுக்கு செருப்பு வாங்குவது என்று அவர் முடிவு செய்தார். அளவைக் குறித்துக் கொண்டு வந்திருந்த காகிதம் இருக்கிறதா என்பதைப் பார்க்க கைப் பைக்குள் தேடினார். மற்ற நண்பர்களும் உதவினர்.

''இதோ இதுதானே?'' என்று கேட்டார் ஒரு நண்பர். கேலண்டர் ஷீட்டின் பின்னால் பென்சிலால் வரையப்பட்ட வலதுகால் அளவு இருந்தது.


''ஆமாம். ஆனால் இது வலது கால் அளவுதானே? இடது கால் அளவு கிடைக்க வில்லையே?'' என்று வருந்தினார் சென்னை நண்பர்.

''இடது கால் அளவு கிடைக்காவிட்டால் வாங்க வேண்டாம்'' என்றார் புயா. நண்பர்கள் பெரிதாக நகைத்தனர். ''என்ன புயா! இத்தனை அறிபுத்திசாலியா இருக்கீங்க! இரண்டுகாலுக்கும் செருப்பு வாங்க ஒரு காலின் அளவு போதும் என்பது கூடவா உங்களுக்குத் தெரியாது?''

கடைக்காரருக்கு புயா ஏற்கனவே அறிமுகமானவர். புயாவின் பெருமையில் கொஞ்சம் எரிச்சலும் கூட அவருக்கு உள்ளூர உண்டு.

''என்னவோ புயா. உங்களைப் போய் அறிபுத்திசாலி என்று எல்லோரும் புகழ்கிறார்களே! பரவா இல்லை'' என்று சொல்லி ''இதைக் கொண்டாடுகிறேன். ஆளுக்கு ஒரு ஐஸ்கிரீம்'' என்று அவர் சிரித்தபோது, புயாவை மட்டம் தட்டிவிட்ட நிறைவும் மகிழ்ச்சியும் தெரிந்தது.

ஐஸ்கிரீம் வந்தது. எல்லோரும் சாப்பிட்டனர். கடைசி ஸ்பூனை வாய்க்குள் தள்ளிக் கொண்ட புயா, ''நண்பர்களே, நன்றி. இந்த சென்னை நண்பரின் பெண்ணுக்கு இடதுகாலில் ஆறுவிரல்கள். அதனால் வலது காலைவிட இடது கால் சற்றுப் பெரியதாக இருக்கும். இப்பொழுது என்ன கூறுகிறீர்கள்?'' என்றார். எல்லோர் முகத்திலும் குறிப்பாக, ஐஸ் கிரீம் வாங்கிக் கொடுத்து வெற்றி கொண்டாடிய கடைக்காரர் முகத்தில் அசடு வழிந்தது!




''எதுக்காக குழாயடியில் படுத்துக்கிட்டு தூங்கறே?''

''குழாயைத் திறந்ததும் நல்லா காத்து வருதே!''

- ரா. பாலாஜி

இன்று உலகெங்கும் பெருமளவில் ''ஆஸ்பெஸ்டாஸ்''தகடு, துணிகள், சீலைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆஸ்பெஸ்டாஸ் எதால் ஆனது? மரத்தில் விளைகிறதா? இல்லை, கம்பளி நூலைப் போல ஏதாவது விலங்கிலிருந்து எடுக்கப்படுகிறதா?

ஆஸ்பெஸ்டாஸ் பாறைகளிலிருந்து கிடைக்கும் ஒரு கனிமம். சுரங்கங்களிலிருந்து தங்கம், நிலக்கரி போன்றவற்றைத் தோண்டி எடுப்பதுப் போலத்தான் இதுவும் எடுக்கப்படுகிறது.



பிரான்ஸ் நாட்டில் சார்லஸ் ''தி கிரேட்'' என்ற மன்னன் (கி.பி.742-814) இருந்தான். இவன் ஆண்டபோது மன்னனின் மேஜைத் துணியில் ஏகக்கறை. அதைத் தீயில் போட்டபோது கறைகள் மறைந்து போயின. ஆனால் அந்தத் துணி மட்டும் எரியவில்லை! 'அது ஏதாவது மந்திரத் துணியோ!' என்று எல்லோரும் வியப்படைந்தனர்.


உண்மை என்னவென்றால் அந்தத் துணி ஆஸ்பெஸ்டாவால் ஆனது! ஆனால் இந்த ஆஸ்பெஸ்டாஸ் விளக்குத் திரிகள் செய்ய மட்டுமே அன்று பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பிணத்தைச் சுற்றி அந்தக் காலத்தில் போர்த்தப்பட்டு வந்த "SHROUD" என்ற துணியும் கூட இதனால் செய்யப்பட்டிருக்கிறது. பிணம் எரிந்த பின் விறகின் சாம்பல் உடலின் சாம்பலுடன் கலந்து விடாதபடி இது தடுத்திருக்கிறது.

தீயில் எரியாத இந்த ஆஸ்பெஸ்டாஸிடம் எந்த அமிலங்களின் ஜம்பமும் பலிக்காது. மின்சாரமும் இதைப் பெருமளவில் பாதிக்காது. கொழுந்து விட்டெரியும் தீக்குள் சென்று அதை அணைக்கும் பணியில் ஈடுபடும் தீயணைப்பு வீரர்கள் அணியும் சூட்டுகள், ஆஸ்பெஸ்டாவால் தான் உருவாக்கப்படுகின்றன.


நமக்குத் தெரிந்த அளவில் இந்த ஆஸ்பெஸ்டாஸ் என்ற ஒரே கனிமம் மட்டுமே நூலாய்த் திரித்து ஆடைகள் தயாரிக்கவோ, வீட்டுகளாய் நீட்டவோ உதவுகிறது.

ஆஸ்பெஸ்டாசால் இவ்வளவு நன்மைகள் இருக்கும் நேரத்தில் சில தீமைகளும் உண்டு. ஆஸ்பெஸ்டாசிஸ் என்ற நுரையீரல் நோயை இது ஏற்படுத்துகிறது. டி.பி.யிலோ (காசநோய்) புற்று நோயிலோ இது கொண்டு விட்டாலும் வீடுமாம்.

–தக்கோலன்




சிரி...
''பையனுக்கு சிங்கப்பல் முளைக்குதே, அதை எடுத்துட லாமா டாக்டர்?''
''சிங்கப்பல்னா வெட்னரி டாக்டர்கிட்ட தான் போகணும்!''
- சீர்காழி வி.ரேவதி
''இந்த நோட்ஸைப் படிச்சா குறைந்தபட்சம் 50% மார்க் வாங்கலாம் தம்பி...''
''அப்ப ரெண்டு புத்தகமாக் கொடுங்க!''
- சி.சிவா
''குழந்தைகள் பத்திரிகை ஒன்று ஆரம்பிச்சீங்களே, நல்லா நடக்குதா?''
''இப்பத்தான் தவழுது
- கி.சிவா.
''இதுதான் உங்க நாயா? நல்லா மோப்பம் பிடிக்குமா?''
''இதுக்கு ஆப்பம் தான் பிடிக்கும்!''
- கு.அருணாசலம், தென்காசி.
''மருந்து வாங்கிட்டுப் போறியே, உனக்கா?''
''இல்லை, வீட்டுக்கு...''
''வீட்டுக்குக் கூடவா ஜீரம் வரும்?''
- கி.சிவா


அனுமனை வென்ற கோவர்த்தனன்
கதை: ஆனந்தி
படம்:
சீதையை அசோகவனத்தில் ராவணன் சிறை வைத்திருப்பதைப் பார்த்து விட்டு வந்து சொன்னார் அனுமார். ராமர், சீதையைச் சிறை மீட்கப் புறப்பட்ட போது...
கடலைக் கடக்க முடியுமா?
சுக்ரீவன்...
கவலைப் படாதீர்கள் நளனும் நீலனும் அணை கட்டுவதில் வல்லவர்கள்.
நளன், நீலன் தலைமையில் வானர சேனை செயல்பட்டது.
மலைகளிலிருந்து பாறைகளைக் கொண்டு வருகிறோம்.
இன்னும் நிறைய தேவை ஊம்..ஊம்.. சீக்கிரம்.
பாறைகள் கடலில் மூழ்கியே விடுகிறதே...?
பார்த்தார் அனுமார்...
பாறைகள் போதாது. இன்று மலையையே பெயர்த்தெடுத்து வர வேண்டும்...


சுக்ரீவன் மகிழ்ந்து...
குன்றுகளையே கொண்டு வந்து குவிக்கும் ஆற்றல் ஆஞ்சனேயருக்குத்தான் உண்டு!
ஆனால் ஆஞ்சநேயருக்குக் கவலை...
ஒரே இடத்தில் உள்ள குன்றுகள், மலைகளைப் பெயர்த்தால் கானகங்கள் அழியும். மிருகங்களும் பறவைகளும் கஷ்டப்படும்...
இமய மலைச் சாரலுக்குச் செல்கிறேன். அங்கே ஏராள மலைகள்; குன்றுகள்...
இமயத்தின் ஒரு சிகரத்தில் இறங்கினார்...
ஆகா! என்ன குளுமை! எவ்வளவு அழகு!
ஒரு மலையைப் பெயர்க்க முயன்றார்...
அடேயப்பா! நம்மாலேயே அசைக்க முடியலையே!


மலையே, உன் சக்தியைப் பாராட்டுகிறேன். உன் பெயர் என்ன?
கோவர்த்தனன் என்று என்னை அழைப்பார்கள். உங்களுடன் வர நான் தயார். ஆனால்...
...தொப்பென்று கடலில் என்னைப் போட்டுவிடக் கூடாது. முதலில் ராமபிரான் என் மீது இளைப்பாற வேண்டும். என்னிடம் உள்ள கனிகளை அவருக்கு நான் அளிக்க வேண்டும்.
கோவர்த்தனா! உனக்கு வாக்குறுதி தருகிறேன். என் கையில் வந்து உட்கார்ந்து கொள்!
கோவர்த்தன கிரியுடன் விண்ணில் பறந்தார்...
புயல் வீசுகிறது, ஜாக்கிரதை!
அவசரமாக என் தந்தை வாயு, என்னிடம் ஏதோ சொல்ல வருகிறார்!
வாயு கூறிய செய்தி...
அணை கட்டி முடிந்தது. எல்லா வானர வீரர்களும் பாறைகளை அங்கங்கே போட்டுவிட்டு விரைந்து வரவேண்டும் என்பது ராமபிரான் கட்டளை.


அனுமார் யமுனா நதிக்கரையில் ஓரிடத்தில் கோவர்த்தன கிரியை இறக்கினார்...
என்னை ஏமாற்றி விட்டாய்!
மன்னித்து விடு! என்னால் ராமரின் கட்டளையை மீற முடியாது.
தெற்கே கடற்கரையில்...
எல்லோரும் கடல் கடக்கத் தயாராகிறார்கள். அனுமன் மட்டும் ஏன் சோகமாக...
ராமர் அன்புடன் கேட்க, அனுமார் விவரம் சொன்னார்...
...வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது.
துவாபர யுகத்தில் நான் மீண்டும் அவதாரம் செய்வேன். கோவர்த்தன மலையோடு விளையாடுவேன். பொறுமையாகக் காத்திருக்கச் சொல்லு!
செய்தி கூறிவிட்டு நொடியில் திரும்பி வருவேன்!


அனுமார் கோவர்த்தனனிடம் பறந்து போய் செய்தி கூற...
பரந்தாமன் என் மீது பாதம் பதித்து உலாவ எத்தனை யுகம் வேணுமா-னாலும் காத்திருப்பேன்.
துவாபர யுகத்தில் கண்ணன் பிறந்து பிருந்தாவனத்தில் வளர்ந்தான்.
கோவர்த்தன கிரி மீது மாடு ஓட்டிச் செல்கிறேன்...
கோவர்த்தன மலை மகிழ்ச்சியால் பூத்துக் குலுங்கியது...
ஆஹா, என்னை விடப் பாக்கியசாலி யார்?
பிருந்தாவனத்தில் ஒரு நாள்...
எதற்கு அலங்காரம்?
இந்திர விழா வருகிறது! பெரிய யாகம் நடக்கப் போகிறது.



நந்தகோபரிடம் கண்ணன்...
யாகம் நடத்தப் போகிறீர்களாமே யாருக்கு? எதற்கு?
இந்திரனுக்குத்தான்...
...நமக்கு உணவும் உயிரும் பொருளும் தருவன, மழை பொழியும் மேகங்கள். வருணனின் அதிபதி தேவேந்திரன். அதனால்தான்.
இந்திர விழா நடத்தா விட்டால் நாட்டில் பஞ்சம் வந்துவிடும்!
எனக்கும் புரியலை...
... மழையும் மேகமும் இயற்கை அன்னையின் கொடை. மழை பொய்க்காமல் இருக்கிறது என்றால் கோவர்த்தன கிரிதான் காரணம்...
...அதன் பசுமை மேகங்களை ஈர்க்கிறது. அதன் சிகரங்கள் மேகங்களைத் தடுக்கின்றன. அதனால் மழை பெய்கிறது...



... ஆக, கோவர்த்தன கிரியைத் தான் நாம் பூஜிக்க வேண்டும்.
ஆனால் இந்திர விழா காலம் காலமாக நடந்து வருகிறதே?
நாம் மாடு மேய்த்து மலையடி வாரத்தில் வாழ்கிறோம். நமக்குத் தண்ணீரும், பசுக்களுக்குப் புல்லும் தரும் மலையைத் தான் வணங்க வேண்டும்.
நந்தகோபர் ஊர்ப்பெரியவர்களைக் கலந்தாலோசிக்க ...
கண்ணன் சிறுவனானாலும் நியாயத்தையே கூறினான்.
பாலகனுக்கு எவ்வளவு அறிவு!
கோவர்த்தன பூஜை நடத்துவோம்.
நந்தகோபர் மட்டும் கவலைப் பட்டார் ...
ம்ம்ம்... விபரீதம் ஏதாவது நடக்காமல் இருக்க வேண்டுமே!


மலை அரசனைப் பொங்கலிட்டுப் பூஜித்தார்கள்...
ஹோமம் செய்தார்கள்...
விருந்துண்டு மகிழ்ந்து ஆடிப் பாடினார்கள்...
இந்திரனுக்குச் செய்தி எட்டியது...
என்னை மதிக்காமல், வெறும் ஒரு மலைக்குப் பூஜையா! பாடம் கற்பிக்கிறேன்!
மழை மேகங்களே! ஆயர்பாடி இருந்த இடம் தெரியாமல் வெள்ளத்தில் மூழ்க வேண்டும்! நிற்காமல் மழை பொழிந்து, வெள்ளமாகப் பெருகி, வீடு வாசல், மக்கள், கால்நடை எல்லாவற்றையும் அடித்துச் செல்லுங்கள்!


ஆயர்பாடியில் விடாமல் மழை பெய்து
வெள்ளப் பெருக்கெடுக்க...
ம்மா...
கண்ணா! காப்பாற்று!
ஸம்வர்த்தகம் என்ற மேகத்தை
இந்திரன் அழைத்து...
உன் பரிவாரங்களுடன் போய் கை வரிசையைக் காட்டு...
இன்னுமா சோதனை?
ஹூம்! பிருந்தாவனமே இருந்த இடம் தெரியாமல் போகவேண்டும்! கன மழை பொழியுங்கள்!
கண்ணன் கோவர்த்தன கிரியைத்
தூக்கினான்...
எல்லாரும் இந்த மலைக்கு அடியில் வந்து விடுங்கள். மழைக்கு அடைக்கலம் தரும்.
ஏழு நாட்களுக்கு ஸப்த மேகங்களைத்
தடுத்து கிருஷ்ணன் மலையைத்
தாங்கினான்...
கோவர்த்தனகிரிதாரி!
கோகுல பாலகன்!



தேவேந்திரன் சபையில்...
எங்களால் முடிந்தவரை மழை பொழிந்தோம். சோர்ந்து போனோம்.
கண்ணன் சுண்டு விரலால் எல்லோரையும் காப்பாற்றிவிட்டான்!
ஆயர்பாடியில்...
மழை நின்று விட்டது... வெள்ளம் வடிந்து விட்டது. அவரவரும் வீடு திரும்புங்கள்.
சேதமடைந்த வீடுகளைச் செப்பனிட்டனர்...
என்ன அதிசயம்! யானை, தாமரை பறிப்பது போல் மலையைத் தூக்கினானே!
கண்ணன் மலையை இறக்க...
கண்ணா என் தவம் வீணாகவில்லை. முன்பு அனுமனாலும் முடியாததை நீ இன்று சாதித்தாய்! எனக்குப் பெருமை சேர்த்தாய்!
நந்தகோபர் வீட்டில்...
உன் மகன் அற்புதப் பிறவி.
பூதனையின் உயிர் குடித்தான்...
சகடாசுரனை உதைத்தான்...


'காளியன் மீது நடனமாடினான். இப்போது கோவர்த்தனகிரியை குடை பிடித்தான்!'
எப்படி சாத்தியமாகிறது?
கர்க முனிவர் என்னிடம் சொன்னதைக் கூறுகிறேன். 'இந்தக் குழந்தை பகவான் நாராயணனின் அவதாரம்' என்றார்.
நந்தகோபர் கூறியதைக் கேட்டு...
ஆஹா! அது உண்மை தான்!
நாம் பாக்கியசாலிகள்!
ஆனால் அற்புதங்கள் நிகழ்த்திய நேரம் தவிர மற்ற சமயங்களில் அவர்களுக்குக் கண்ணனின் தெய்வத்தன்மை மறந்துவிடும்!
இந்தா வெண்ணெய்...
கானகத்தில் கண்ணனைக் காண இந்திரனே வந்தான்...
கண்ணா! நீங்கள் யாரென்று தெரிந்தும் கோபத்தால் உங்களைத் தண்டிக்க நினைத்தேன். என் கர்வம் அடங்கியது.


இருந்தாலும் அப்பாவி ஆயர்களை இந்தப்பாடு படுத்தியிருக்க வேண்டாம்..
என் கர்வத்தினாலும் ஒரு நன்மை! உங்கள் மகிமையை உலகோர் உணர முடிந்தது!
அப்போது காமதேனு வந்து...
கண்ணா! என் குலத்தைக் காப்பாற்றினாய். நீதான் எங்கள் இந்திரன்.
தேவராஜனுக்கு மறுபடி ஜம்பம் வந்து விடப் போகிறது!
பிரும்மதேவரின் அனுமதியுடன் வந்திருக்கிறேன்! எங்கள் அரசனாக உனக்கு முடி சூட்டப் போகிறோம்.
இந்திரன் தன் கையாலேயே கங்கை நீர் பொழிந்து அபிஷேகம் செய்தான்.
ஜய விஜயீபவ!
கண்ணன் சாது போல் வீடு திரும்ப...
எவ்வளவு நேரமா உன்னைத் தேடறது? போக்கிரி!
உரல்ல கட்டிப் போட்டுடுவியா, அம்மா!
ஆதாரம்: சுவாமி கமலாத்மானந்தா தொகுத்த பக்திக் கதைகள்.

அபிராமியின் அட்டிகை

கூத்தபிரான்



13 பகை தீர்ந்தது!

வரவேற்பு அறையில் பொன்னுசாமி மல்லாந்து விழுந்து கிடந்தார். மார்பில் கை அழுந்தியிருந்தது.

''ஐயா, ஐயா'' என்று உரக்கக் கத்தி ஜன்னலைத் தட்டினாள் அபிராமி. அவர் மிகவும் மெதுவாக அவள் பக்கம் பார்வையைத் திருப்பினார். இடது கை வீட்டின் உட்பகுதியைச் சுட்டிக் காட்டியது.

அபிராமி வீட்டைச் சுற்றிக் கொண்டு பின்பக்கம் ஓடினாள். அருகே இருந்த கொய்யா மரத்தில் ஏறி, கூரைக்குத் தாவினாள். மூன்றாவது கட்டு மட்டும் பழைய நாள் ஓட்டுக் கட்டடமாக இருந்தது சௌகரியமாக இருந்தது. கூரையில் விடுவிடுவென்று இறங்கி முற்றத்தில் குதித்து உள்ளே விரைந்தாள். கீழே விழுந்து கிடந்த பொன்னுசாமியின் தலையை மெல்ல எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள்.

''ஐயா, என்ன செய்கிறது? நான் செய்யக் கூடியது என்ன? மார்பு வலிக்கிறதா?''

பொன்னுசாமியின் கை மெல்ல உயர்ந்தது. அருகே இருந்த அலமாரியை அது சுட்டிக் காட்டியது.

அபிராமி எழுந்து மின்னலாகச் செயல் பட்டாள். பொன்னுசாமி சுட்டிக் காட்டிய இடத்தில் ஒரு 'கிளிப்' போட்ட துண்டு அட்டை. அதில் ''பொன்னுசாமி இதய நோயாளி. அவர் மார்வலி தாங்காது விழுந்து விட்டால், இந்தக் கண்ணாடி புட்டியில் இருக்கும் மாத்திரையைக் கொடுத்து உடனே தூங்க வைக்கவும். நான்கு மணிநேரம் தூங்கிக் கண் விழிப்பார். அதற்குப் பிறகும் மார்வலி

இருந்தால் உடனே அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்து விடவும். எனக்கும் தெரிவிக்கவும்'' என்று ஆங்கிலத்தில் தட்டச்சு (டைப்) செய்யப்பட்டிருந்தது. அதிலேயே டாக்டரின் முகவரியும், தொலைபேசி எண்ணும் தரப்பட்டிருந்தது.

அபிராமி, மாத்திரையை எடுத்து வந்து, அவரைப் போட்டுக்க வைத்து, விழுங்க சிறிது நீரும் கொடுத்தாள். தலையணையைக் கொண்டு வந்து அங்கேயே அவரைத் தூங்க வைத்தாள். ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்து விட்டு, மின்விசிறியையும் போட்டாள். பூஜை அறையில் விளக்கேற்றி வைத்து விட்டு, விபூதியையும், குங்குமத்தையும் கொண்டு வந்து அவருக்கு இட்டாள்.

''தாயே அத்தியூர் அற்புத நாயகி, பொன்னுசாமி ஐயா நல்லபடியா எழுந்திருக்கத் துணைபுரியம்மா. அவர் என்பது அனாதைப் பிள்ளைகளுக்கு அப்பா அம்மா. அந்தப் பிள்ளைகளுக்காகவாவது மனமிரங்கி அருள் செய்'' என்று அவள் வேண்டிக் கண்ணீர் விட்ட காட்சி, படுத்துக்கிடந்த பொன்னுசாமியின் கண்களைக் குளமாக்கியது.

மாத்திரை வேலை செய்யத் தொடங்கிவிட்டது என்பதை அபிராமியால் உணர முடிந்தது. பொன்னுசாமி தூங்க ஆரம்பித்து விட்டார். இனி அவர் கண் விழிக்கக் குறைந்தது மூன்றரை மணி நேரமாவது பிடிக்கும் என்பதை உறுதிப் படுத்திக் கொண்ட அபிராமி, பூட்டைத் தேடி எடுத்து கதவை வெளியே பூட்டினாள். அவர் வீட்டிலேயே இருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு அன்பு இல்லத்திற்கு விரைந்தாள்.

சக்கரவர்த்தியை அழைத்துக் கொண்டு அபிராமி அரை மணியில் திரும்பி வந்து விட்டாள். இருவருமாகத் தேடி கல்யாணப் பத்திரிகையைக் கண்டு பிடித்தார்கள். நல்லவேளை. திருமணம் நடக்கும் சத்திரத்தின் தொலை பேசி எண் தரப்பட்டிருந்தது. சக்ரவர்த்தி எஸ்.டி.டி.போட்டுப் பேசினார். நல்ல காலம் பொன்னுசாமியின் மனைவியே போனை எடுத்தாள். பக்குவமாக விஷயத்தை விளக்கிய சக்ரவர்த்தி, ''கவலைப்பட எதுவும் இல்லை. நன்றாகத் தூங்குகிறார். டாக்டருக்கும் தகவல் அனுப்பியிருக்கிறேன். ஐயாவை எதிர் பார்க்காது திருமணத்தை முடித்து விட்டு நீங்கள் வாருங்கள். கவலைப் பட வேண்டாம்'' என்று கூறினார்.

''அபிராமி, நல்ல வேளை. இவருக்கு நெஞ்சுவலி வந்த போது நீயாவது இருந்தியே. நீ தெருவைத் தாண்டிப் போன பிறகு பொன்னுசாமிக்கு வலி வந்திருந்தால் எல்லாமே விபரீதமாகப் போயிருக்கும்,'' என்றார் சக்ரவர்த்தி.

அபிராமி, தன் வீட்டில் இருந்த அதே கொள்ளுத் தாத்தா பாட்டியின் படம் அந்த வரவேற்பு அறையிலும் இருப்பதை அவரிடம் சுட்டிக் காட்டி வியந்தாள்.


''பொன்னுசாமி உன்னை வெறுப்பதற்கும் இந்த உறவு முறைக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது. அது என்ன என்பதைக் கண்டு பிடித்தால் எல்லாம் விளங்கி விடும்,'' என்றார் சக்ரவர்த்தி.


இதற்குள் டாக்டர் வந்து விட்டார். பொன்னுசாமியைப் பரிசோதித்து விட்டு, ''சரியான நேரத்திற்கு மாத்திரையைக் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் சிறிது தாமதித்திருந்தால்கூட எல்லாம்

''இந்தக் குதிரை இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கே, ஏன்?''

''அதுக்கு 'கொள்ளு'ப் பேரன் பிறந்திருக்கே, அதனாலதான்!''

– சீர்காழி வி. ரேவதி





விபரீதமாகப் போயிருக்கும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை இப்படி நெஞ்சுவலி வந்தது. அப்போ வைத்தியம் செய்து, நான்தான் எச்சரிக்கை அறிவிப்புச் சீட்டையும் டைப் செய்து இங்கே அலமாரியில் 'கிளிப் பில்' மாட்டி வைக்கச் சொன்னேன். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அது இப்பொழுது பயன்பட்டு, இவரைக் காப்பாற்றியிருக்கிறது!'' என்று வியந்து சொன்னார். ஒரு ஊசி மருந்தை எழுதிக் கொடுத்து வாங்கி வரும்படி கூறினார்.

இதற்குள் குயிலும் அரவிந்தனும் வந்து விட்டார்கள். அரவிந்தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு மருந்து வாங்கக் கிளம்பினான்.

பொன்னுசாமி அமைதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தார்.

''டாக்டர், உங்களுக்கு இதுவேதான் சொந்த ஊரா?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

''எனக்குச் சொந்த ஊர் அத்தியூர். பொன்னுசாமிக்குக்கூட அதே ஊர்தான். இன்னும் சொல்லப் போனால் இந்தப் பொன்னுசாமி குடும்பத்துக்கு, எங்க குடும்பம்தான் மூன்று தலை முறையா வைத்தியம். எங்க அப்பா, தாத்தா எல்லாரும் டாக்டர்கள்''

டாக்டர் ஏதவாது புதிய செய்தியைக் கூற மாட்டாரா என்ற ஆவலில் அபிராமியும் சக்ரவர்த்தியும் அவரையே பார்த்தனர்.

''அத்தியூர் அற்புத நாயகி எத்தனையோ குடும்பங்களுக்குக் கண் கண்ட தெய்வம். அந்த ஊரில் வசதியான பணக்காரக் குடும்பம் முருகபூபதி - வள்ளியம்மை குடும்பம். சொல்ல முடியாத அளவுக்குத் தரும சிந்தனை. தெய்வ பக்தி. அவர் காலத்தில்தான் மிகவும் தடபுடலா குடமுழுக்கு நடந்தது. அவர்களுக்குத்தான் முதல் மரியாதை. திருவிழா திட்டமெல்லாம் அவங்க ஏற்படுத்தினதுதான். வாகனங்கள் கூட எல்லாம் அவங்க நன்கொடைதான். அவங்களுக்கு இரண்டு பிள்ளைங்க. மூத்தவர் ரத்ன சபாபதி. இளையவர் கனக சபாபதி. முருகபூபதி வள்ளியம்மை மறைவுக்குப் பிறகு, சொத்துகளைப் பிரித்துக் கொள்வதில் அண்ணனுக்கும் தம்பிக்கும் தகராறு ஏற்பட்டது. குறிப்பாகக் குடும்ப நகைகளைப் பிரித்துக் கொள்வதில் இருவருக்கும் பயங்கரமான சண்டை. விஷயம் பஞ்சாயத்துக்கு வந்தது. அவங்களே நகைகளைப் பங்கு வைச்சு சமமாப் பிரிச்சாங்க. அதிலே அழகான ஒரு நவரத்தின அட்டிகை. அதை யார் வைத்துக் கொள்வது என்பதில் மறுபடி சிக்கல். இருவரும் அது தனக்கே வேண்

டும் என்று கேட்டனர். கடைசியில் அற்புத நாயகி சன்னதியில் திருவுளச் சீட்டு போட்டு முடிவு பண்ணுவது என்று தீர்மானித்தார்கள். இருவருக்கும் அதில் சிறிதும் இஷ்டம் இல்லை.

''தம்பி, நான் மூத்தவன். என்னிடம் அது இருப்பதுதான் முறை. நீ விட்டுக் கொடு'' என்று கேட்டார் அண்ணன். ''அதெப்படி? நான் சின்னவன். பெரியவர்கள் சின்னவர்களுக்கு விட்டுக் கொடுப்பதுதான் உலக வழக்கு'' என்றார் சின்னவர்.

அற்புத நாயகியின் முன்னால் திருவுளச்சீட்டு போட்டார்கள். தம்பிக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்தது. அண்ணனுக்கு ஆத்திரமான ஆத்திரம். ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் ஜென்மப் பகைவர்களானார்கள். ஆடி மாதத்தில் அண்ணன் திருவிழா நடத்தினார். தை மாதத்தில் தம்பி பொறுப்பேற்று நடத்தினர். ஊர் இரண்டு கட்சியானது. இதில் ஆதாயம் கண்டவர்கள் பகைத் தீக்கு விசிறி விட்டார்கள். அண்ணனுக்கு மணிவிழா நடந்தது. அதை ஒட்டி அம்மனுக்கு அபிஷேகம், மஞ்சள் காப்பு சாத்தினார்கள். இந்த மகிழ்ச்சியான நிகழ்ச்சியில், அம்மனுக்கு அலங்காரம் செய்ய, ஒரு நாள் அட்டிகையை இரவல் தரும்படி தம்பிக்கு அண்ணன் தூது விட்டுக் கேட்டார்.

''கொடுக்காதீங்க. இதே போல் இன்னொரு போலி அட்டிகை தயார் பண்ணியிருக்காங்களாம். இது போனதும், இந்த சாக்கை வைத்துக் கொண்டு, போலி அட்டிகையை நம்மிடம் தள்ளி ஏமாற்றத் திட்டம். இந்த சூதுக்கு ஏமாறாதே'' என்றனர் நண்பர்களும் உறவினர்களும்.

தம்பி அட்டிகையைத் தர மறுத்தார். தனக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரிய அவமானமாக அண்ணன் அதைக் கருதினார். தம்பியின் வீட்டுக்கு அன்று இரவே தீ வைக்கப்பட்டது. தம்பி குடும்பத்துடன் தப்பி ஓடிவிட்டார். ''இனி, அந்த நவரத்தின அட்டிகையை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாருமே நமது பகைவர்கள். மறந்து போய்க்கூட அவங்களுக்கு உதவக் கூடாது'' என்று தங்கள் வாரிசுகளுக்குக் கூறி சத்தியம் வாங்கிப் பகையை வளர்த்து வருகிறார்கள். அண்ணன் ரத்தின சபாபதியின் பேரன் தான் இந்த பொன்னுசாமி. பரம்பரையாகப் பகை வளர்க்கும் அதிசயக் குடும்பம்!'' என்று முடித்தார் டாக்டர்.

அரவிந்தன் ஊசி மருந்தை வாங்கிக் கொண்டு வந்தான். டாக்டர் அதை எடுத்து, பொன்னுசாமிக்குப் போட்டார். ''பயமேதும் இல்லை'' என்று கூறி விட்டுச் சென்றார்.

''ஐயா, எங்க தாத்தா பெயர் தான் கனகசபாபதி'' என்றாள் அபிராமி சக்கரவர்த்தியிடம்..

''அப்படித்தான் இருக்கணும்னு நான் ஊகித்தேன். நீபன் கொண்டு வந்து கொடுத்த அட்டிகையைப் பார்த்ததும் நீ யார் என்பதைப் பொன்னுசாமி அறிந்து கொண்டு விட்டார். தனது தந்தைக்குச் செய்து கொடுத்த வாக்கின்படி அவர் உன்னை வெறுக்கத் தொடங்கியிருக்கிறார். இப்பொழுதுதான் எல்லாம் புரிகிறது'' என்றார் சக்ரவர்த்தி திகைப்புடன்.

''மூன்று தலைமுறைகளுக்கு முன்பு விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மையில்லாத பெரியவர்களால் தொடங்கப்பட்ட ஒரு ஜென்மப் பகை, அர்த்தமில்லாது இன்னமும் தொடரப்படத்தான் வேண்டுமா?'' என்றாள் அபிராமி.

பதினோரு மணி சுமாருக்குப் பொன்னுசாமிக்கு விழிப்பு வந்தது. அவர் அபிராமியைப் பார்த்த பார்வையில் பழைய பகை உணர்வு காணப்படவில்லை.

''பொன்னுசாமி ஐயா, இல்லை இல்லை பொன்னுசாமி அண்ணா, நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன். உங்களுக்கு விழிப்பு வரவேண்டும் என்றே இத்தனை நேரமும் காத்திருந்தேன். நீங்கள் போட்ட சாப்பாட்டை, நானும் சில காலம் சாப்பிட்டு இருக்கிறேன். அதற்காக, என்னாலும் உங்களுக்கு உதவ முடிந்திருப்பதை எண்ணிப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். என் அண்ணனாகிய நீங்கள் என்னிடம் வன்மம்



பாராட்டி, ஜென்மப்பகையை வளர்க்க உறுதி பூண்டாலும், என் அண்ணன் அவர் அனாதைக் குழந்தைகளுக்கு சரணாலயமாக விளங்குகிறார் என்பதை எண்ணி நான் பெருமைப் படுகிறேன்'' என்று வணங்கினாள் அபிராமி.

பொன்னுசாமி அபிராமியை அருகே அழைத்தார். அவள் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

''நான் உன்னை வெறுத்து விரட்டு வதற்கான காரணத்தை நீயே அறிந்து கொண்டு விட்டாய். பகையை வளர்க்க, என் தந்தைக்கு நான் செய்து கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டியது என் கடமையல்லவா? நீ என் சித்தப்பா பேத்தி; என் தங்கை என்பதை அறிந்து கொண்டதும் எனக்கு எத்தனை மகிழ்ச்சியாக இருந்தது தெரியுமா? அதே சமயம், அட்டிகையைப் பார்த்ததும் நான் பொறி கலங்கிப் போனேன். சித்தப்பாவையும் சித்தியையும் அவர்களது எண்ணற்ற சொத்துகளையும் கவர்ந்து கொண்ட பஞ்சாப் தீவிரவாதிகள், எதற்காக இந்த அட்டிகையை மட்டும் அழிக்காது விட்டு வைத்தார்கள்; இங்கே அனுப்பி வைத்தார்கள் என்று நான் கலங்கி, எத்தனை நாட்கள் இரவில் தூக்கம் இன்றி எனக்குள்ளேயே புலம்பியிருக்கிறேன் தெரியுமா? ஆனாலும், எங்கப்பாவுக்குக்கொடுத்த வாக்குறுதியை நான் காப்பாற்றியாக வேண்டுமல்லவா? அதற்காகத்தான் காரணத்தைக் கூறாது உன்னை விரட்ட வேண்டும் என்பதில் இத்தனை பிடிவாதமாக இருந்தேன்'' என்று அழுதார் பொன்னுசாமி.

''அழாதீங்க அண்ணா. பெரியப்பாவுக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத் தான் என்னை விரட்ட முடிவெடுத்தீர்கள் என்பதை அறிந்த பிறகு, எனக்கு நிம்மதியாகி விட்டது. நீங்கள் மனதார என்னை வெறுக்கவில்லை என்ற உண்மை எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.'' என்று அவரைத் தேற்றினாள் அபிராமி.

''இத்தனை நடந்த பிறகும், எனக்கு ஆபத்து என்றதும் ஓடோடி வந்து உதவி என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாயே அபிராமி!''

''அது மனிதனுக்கு மனிதன் செய்ய வேண்டிய கடமை அண்ணா. இத்தனை அனாதைகளைப் பசியால் வாடவிடாது காப்பாற்றி வருகிறீர்களே... அந்தப் புண்ணியம் தான் என் உருவில் உங்களுக்கு உதவ சமயத்திற்கு வந்திருக்கிறது. எனக்கு விடை கொடுங்கள்'' என்று பெட்டியைத் தூக்கி கொண்டாள் அபிராமி.

''அபிராமி...நீ புத்தசாலி. நீ மட்டும் மனம் வைத்தால், என் சத்தியத்தைக் காக்கவும் நீ தொடர்ந்து என்னிடம் இங்கேயே தங்கவும் உன்னால் ஒரு வழி கண்டு பிடிக்க முடியும்?''

அபிராமி யோசித்தாள்.

''அண்ணா... அட்டிகையை வைத்திருப்பவர்களைத்தானே ஜென்மப் பகைவர்களாகக் கருத வாக்குக் கொடுத்தீர்கள்? அந்த அட்டிகை இனிமேல் என்னிடம் இருக்க வேண்டாம். நம் குல தெய்வம் அத்தியூர் அற்புத நாயகிக்கே அதைக் காணிக்கையாக்கிவிடுகிறேன்''

''அபிராமி, என் வாக்கையும் காப்பாற்றி விட்டாய். உன் பிரச்சனையும் தீர்ந்தது. நம் ஜென்மப் பகையை அந்த அற்புத நாயகியே அழித்து விட்டாள்'' என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தார் பொன்னுசாமி.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்பு இல்லத்தில் மகிழ்ச்சியோடும் மன அமைதியோடும் தூங்கினாள் அபிராமி.


நிறைந்தது.



''ராமனோட மனைவி பெயர் கூட உனக்குத் தெரியலையே! உம் பேர் என்னடா?''

''சீதாராமன் சார்!''

- எம். அசோக்ராஜா





குட்டி ஸூப்பர் ஸ்டார்!

புதுடில்லி ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் ஏராளமான குடிசைகள். எல்லாம் ஒற்றை அறைவீடுகள். அவற்றில் சுமார் 5000க்கும் அதிகமான ஏழைக் குடும்பங்கள் வசிக்கின்றன.

அவற்றில் ஒன்று 'ஜயலால்' என்பவருடையது. அவருக்கு 11 குழந்தைகள். ஆறு ஆண்; ஐந்து பெண். கடைசிக் குழந்தையின் பெயர் ராஜூ ஸதேஷ்ரா. நான்கு பெண்களுக்குத் திருமணம் ஆகிவிட்டது. கூட்டுக் குடும்பம்தான்.

வீட்டில் நண்பகல் உணவு தயாரிப்பவர் ஜயலாலின் மனைவிதான். வெறும் சப்பாத்தி மட்டுமே! தொட்டுக் கொள்ளப் பச்சை வெங்காயமும் ஊறுகாயும் தான். வேறு காய்கறிக் கூட்டு தயாரிக்க வருமானம் போதாதநிலை. ஆனால் எப்படியும் இரண்டு வேளை சப்பாத்திக்கு வரும்படி வந்து விடும்.

வீட்டில் மின் இணைப்புக் கிடையாது. சிம்னி விளக்குதான். அதேபோல் தட்டு-தம்ளர் என்று எந்தப் பொருளும் கிடையாது. விருந்தினர் உபயோகத்துக்கு மட்டும் என்று நான்கே நான்கு டீகிளாஸ்.

அக்குடிசை வாசிகளின் வாழ்வு வறுமை நிறைந்ததுதான். எனினும் அதில் ஒரு செம்மை உண்டு. மாதம் ஓரிரு முறை பல குடும்பத்தினர் சேர்ந்து பணம் வசூலித்து 'வீடியோ - டெக்' வாடகைக்கு எடுத்து இரவு முழுதும் மூன்று ஹிந்தி படம் பார்த்து மகிழ்வார்கள். அது ஒன்றுதான் அவர்களின் பொழுதுபோக்கு!

ராஜூவின் குடும்பத்தினருக்குப் படியளப்பது 'ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸ்'-ல் பொம்மை செய்வதுதான். டில்லி மாநகரின் பல்வேறு பகுதிகளில், உல்லாசப் பயணிகளிடம் அவற்றை விற்றுப்

ஜானகி மணாளன்

பிழைத்தனர். பயணிகளின் வருகை குறையும்போது பக்கத்தில் உள்ள ஆக்ரா, ஜய்ப்பூர் போன்ற இடங்களுக்குச் செல்வார்கள்.

ராஜுவுக்குப் பத்து வயது. பள்ளி - படிப்பு என்று எதுவும் கிடையாது. டில்லி மாநகரச் சாலையோரம் அமர்ந்து, போவோர் வருவோரின் கால்களைப் பிடித்து, அவர்களின் செருப்பு - பூட்சுகளுக்குப் பாலிஷ் போடுவதுதான் அவனுடைய தொழில்! அவனது வாடிக்கையாளர்களில் பெரும் போலோர் வெளிநாட்டினர். அதில் இரண்டு நன்மைகள். ஒன்று பாலிஷ் போட வசதியாக நல்ல பூட்சுகள் இருக்கும். அடுத்தது, அவர்கள் நிறைய கூலி தருவார்கள்.

ராஜு ஒரு நாள் கன்னாட் ப்ளேசில் சாலை ஓரம் அமர்ந்து பூட் பாலிஷிங்கில் ஈடுபட்டிருக்கும் போது, திடீரென்று அவனுக்கு ஓர் அதிர்ஷ்டம் அடித்தது!

சுரேஷ் வர்மா என்று ஒருவர். அவர் அந்த வழியே போனார். அவரது பூட்டுகள் ரொம்ப அழுக்காக இருந்தன. ராஜு அதைக் கவனித்து விட்டான். உடனே உரத்த குரலில் அவரிடம், ''சார்! பூட் பாலிஷ்! உங்கள் பூட்சைப் பாருங் கள்... எத்தனை புழுதி...!'' என்றான்.

வர்மா அக்குரலைக் கேட்டு அவனைத் திரும்பிப் பார்த்தார். சட்டென்று அவர் மனத்தில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது. உடனே அவனிடம் போனார்.

''தம்பி... என்னுடன் கொஞ்ச தூரம் வர முடியுமா?''

''எதுக்கு சார்?''

''வாயேன் சொல்கிறேன்...''


அவர் ராஜுவை அழைத்துக் கொண்டு, அருகில் இருந்த ஓர் ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குப் போனார். அங்கு தங்கியிருந்த ஒருவர் முன் அவனைக் கொண்டுபோய் நிறுத்தினார்.

''இதோ இவனைப் பாருங்கள்... நீங்கள் தேடும் சிறுவன் ஏன் இவனாக இருக்கக் கூடாது...?'' என்றார் வர்மா.

அறையிலிருந்த அந்த நபரின் பெயர் பர்னார்டோ பர்தோலூசி. அவர் ஒரு பிரபல ஹாலிவுட் திரைப்படத் தயாரிப்பாளர். பல வெற்றிப்படங்களைத் தயாரித்தவர். அவரது 'லாஸ்ட் எம்பரர்' என்ற படம் மட்டும் எட்டு 'ஆஸ்கார்' விருதுகளைப் பெற்றது. புத்தமதக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட அவர் அவற்றின் அடிப்படையில் ஒரு ஹாலிவுட் திரைப்படத்தைத் தயாரிக்க திட்டமிட்டிருந்தார். அதற்கு 'லிட்டில் புத்தர்' என்று பெயர். மறுபிறப்பு எடுக்கும் ஒரு லாமா சிறுவனைப் பற்றிய கதை. அப்பாத்திரத்தை ஏற்று நடிக்கக் கூடிய ஒரு சிறுவனை அவர் தேடிக் கொண்டிருந்தார். பல நகரங்களுக்குச் சென்று தேடினார். பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்துப் பார்த்தார். பல சிறுவர்களை ஸ்கிரீன் டெஸ்ட் எடுத்துப் பார்த்தார். அவர் மனதுக்குத் திருப்தியளிக்கும் சிறுவனாக யாரும் கிடைக்கவில்லை. சோர்ந்து போய், நேபாளம் சென்று தேடத் திட்டமிட்டு டில்லியில் ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில் அறையெடுத்துத் தங்கினார்.

இன்னும் சில மணி நேரங்களில் நேபாளத்துக்கு விமானம் ஏற வேண்டும். அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் போதுதான், சுரேஷ் வர்மா

“அந்தப் பழத்தைத்
தின்னா நல்லா
நாவல் எழுத வரும்டா!''
“எந்தப் பழத்தையடா?''
“ 'நாவல்' பழத்தை!''
- எஸ். சந்திரா, வேதாரண்யம்.



ராஜுவை அவர் முன் கொண்டு வந்து நிறுத்தினார். சுரேஷ் வர்மா பர்தோலூசியின் தயாரிப்புக்கு உதவியாளர்.

பர்தோலூசி ராஜுவை வசனம் பேச் சொன்னார். நடித்துக் காட்டச் சொன்னார். அவனது பேச்சிலும் அங்க அசைவுகளிலும் அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இறுதியில் அவனைத் தன் படத்தின் நட்சத்திரமாகத் தேர்ந்தெடுத்து விட்டார். ராஜு 'குட்டி புத்தர்' ஆகிவிட்டான்.

பர்தோலூசியின் திரைப்படக் குழுவினருடன் ராஜு இந்தியா, நேபாளம் மற்றும் பூட்டானின் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் செய்தான். படப்பிடிப்பு நடந்தது. ராஜுவுக்குத் துவக்கத்தில் ஆங்கிலம் தெரியாது. ஆனால், அவன் அண்ணன் மண்ட்டு நன்றாகப் பேசுவான். அவனும் ராஜுவுடன் கூடச் சென்றான். ராஜு தாய்மொழியில் கூறுவதை அவன் இயக்குநருக்கு ஆங்கிலத்தில் புரிய வைப்பான். அதேபோல் இயக்குனரின் கருத்தை ராஜுவுக்கு எடுத்துச் சொல்வான்.

குழுவினருடன் ராஜு எங்கு சென்றாலும் ஐந்து நட்சத்திர ஓட்டல் வாசம் தான். ராஜமரியாதை. அவன் குடிக்கத் தண்ணீர் கேட்டால் கூட, பழ ஜூஸ் தான் வரும்!

ஓராண்டு காலத்தில் ஷூட்டிங் முடிந்து விட்டது. ராஜு மீண்டும் வீடு திரும்பிவிட்டான். பர்தோலூசி அவனுடைய நடிப்புக்குச் சம்பளமாக 15 ஆயிரம் டாலர் வழங்கினார். அத்தொகையை அவன் பெயரில் நிரந்தர வைப்பாக வங்கியில் போட்டார். மாதா மாதம் 5,500 ரூபாய் வட்டி வருமானம் கிடைக்கிறது. அதைக் கொண்டு ராஜுவின் குடும்பம் கொஞ்சம் வசதியாக வாழ்கிறது.

இப்போது ராஜு 'பூட் பாலிஷ்' பண்ணப் போவதில்லை. வீட்டில் நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடுகிறான். நிறைய ஆங்கிலத் திரைப்படம் பார்க்கிறான். குடும்பத்தினரும் தமது பொம்மைத் தொழிலுக்குப் போவதில்லை. இதுபற்றி ராஜுவின் தந்தைக்கு மனவருத்தம்தான். ஏன் தெரியுமா? பணம் வந்ததும் அவர்கள் தங்கள் உழைப்பைக் கைவிட்டு விட்டனரே!

ஆனால், இதெல்லாம் தற்காலிக நிலை தான். 'லிட்டில் புத்தர்' திரைப்படம் வெளியாகி விட்டால், அவர்களின் நிலை மேலும் உயர்ந்து விடும். அதற்கு ஏற்ப வேறு வகையில் அவர்கள் உழைக்கத் தொடங்கி விடுவார்கள். ராஜுவும் சர்வ தேசப் புகழ் பெற்ற ஹாலிவுட் நட்சத்திரம் ஆகிவிடுவான்.

இதற்கிடையில் சுரேஷ் வர்மா ராஜுவை வைத்து ஒரு ஹிந்திப் படம் தயாரித்து வருகிறார். இந்தியாவிலிருந்து நியூயார்க் சென்று அவ்விடத்துக் கலாசாரத்தில் மூழ்கிவிடும் ஒரு சிறுவனைப் பற்றிய கதை. ராஜு தான் அந்தச் சிறுவன். அது வெளியாகி விட்டால், அவன் ஹிந்தியில் ஒரு சூப்பர் ஸ்டார்.

ஆனால், ராஜு விரும்புவது, 'லிட்டில் புத்தர்' வெளியாகித் தான் ஒரு 'ஹாலிவுட் சூப்பர் ஸ்டாராக' வேண்டும்; அமெரிக்கா சென்று செட்டிலாகி உலகப் புகழ் பெற வேண்டும் என்பது தான்.



"புலியாருக்கு என்ன வருத்தம்?"
"அவரு தலையை 15 காசு போஸ்ட் கார்டில் போட்டு அவமானப்படுத்திட்டாங்களாம்!"
- எஸ். முத்துக்குமார், புதுக்கோட்டை - 1.

சுவிஸ் பாங்கின் சிறப்பு என்ன?



தலைவர்களின் பேச்சிலும், செய்தித்தாள்களிலும் அடிக்கடி 'சுவிஸ் பாங்க்' என்ற பெயர் அடிபடுவதைக் கவனித்திருப்பீர்கள். இந்த சுவிஸ் வங்கி என்பது என்ன? மற்ற வங்கிகளுக்கு இல்லாத சிறப்பு இந்த வங்கிகளுக்கு இருக்கிறதா?

மற்ற வங்கிகளுக்கு இல்லாத சில தனிச்சிறப்புகள் இந்த சுவிஸ் வங்கிகளுக்கு இருக்கின்றன. ஒருவரது கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறது என்ற தகவலை இவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளியிடவே மாட்டார்கள். பணத்தைப் பாதுகாப்பதுடன், நாம் உத்திரவிடும் வகைகளில் அதை அவர்கள் முதலீடு செய்து இலாபம் ஈட்டித் தருகிறார்கள். இதற்கான ஏற்பாட்டை உலகம் முழுவதும் உள்ள இவர்களது நம்பகமான ஏஜெண்டுகள் இரகசியமாகச் செய்து தருகிறார்கள். ஏதாவது அவசியம் என்றால் நம் கணக்கில் உள்ள பணத்தை நாம் கூறும் நபர்கள் பேரில் மாற்றி அவர்களுக்கும் புதுக்கணக்கு வைத்துத் தருகிறார்கள்.

நம் கணக்கில் உள்ள பணம் எவ்வளவு என்பது நமக்கும் வங்கி அதிகாரிகளுக்கும் மட்டுமே தெரியும். தப்பித் தவறி ஏதாவது ஓர் அதிகாரி மூலம், நமது கணக்கில் உள்ள பணத்தின் விவரம் வெளியே தெரிவிக்கப்படுமானால், வங்கி அதிகாரிகளுக்கு ஆறுமாதச் சிறைத் தண்டனை உடனே விதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, கூடவே ஐம்பதினாயிரம் சுவிஸ் ஃபிராங்குகள் தண்டனைப் பணமாகக் கட்ட வேண்டும். இப்படி ஒரு கடுமையான சட்டம் இருப்பதால்தான், சுவிஸ் வங்கிக் கணக்குகள் மிகவும் இரகசியமாகப் பாதுகாக்கப்படுகின்றன.


சுவிஸ் வங்கிகளில் இரண்டு விதமான கணக்குகள் உண்டு. ஒன்று சாதாரண பெயர்க் கணக்கு. இத்தகைய கணக்குகளுக்குசுவிஸ் வங்கியே மாதா மாதம் மற்ற வங்கிகளைப் போல் வட்டிப்பணம் தருகின்றது. மற்றது நம்பர் கணக்கு. இதில் நமது பெயர் இருக்காது. பதிலாக ஒரு நம்பரைத் தருவார்கள். நமது பெயர், நமக்குத் தரப்பட்டிருக்கும் நெம்பர் போன்ற விவரங்கள் எல்லாம் ஒரு சில அதிகாரிகளுக்கே தெரியும்.

இந்த நம்பர் கணக்கைத் துவக்கக் குறைந்தது இருபது இலட்ச ரூபாய் பணத்தைப் போட வேண்டும். அப்பொழுதுதான் கணக்கைத் துவக்குவார்கள். இதற்கு சர்வீஸ் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு மூன்று சதவீதம் அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். தங்கள் கணக்குக்கு வட்டி கட்டிமாளாமல், போட்ட பணத்தை இழந்தவர்கள் எண்ணிக்கை இந்த வங்கியில் கணக்கில் அடங்கா!

நெம்பர் கொடுத்த கணக்குகளுக்கு, பணத்தைப் போடும் போதும் எடுக்

கும் போதும். இதற்கான பாரத்தில் நெம்பரையே போட்டுப் பூர்த்தி பண்ண வேண்டும். எக்காரணத்தைக் கொண் டும் பெயரை எழுதக் கூடாது. நம்பரை மறந்து விட்டால் அவ்வளவு தான். போட்டிருக்கும் பணம் நம் முடையது இல்லை! இப்படி நம்பரை மறந்த காரணத்தால், எடுப் பார் இன்றி இந்த சுவிஸ் பாங்கிகளில் தேங்கிக் கிடக்கும் பணம் பலகோடி கள்!

இங்குள்ள கணக்குகளை நாமே



ஆப ரேட் பண்ண வேண்டும் என்ற அவ சியம் இல்லை. இதற்கென சுவிஸ் நாட்டிலேயே நாணயத்திற்குப் பேர் போன வக்கீல்களும், ஆடிட்டர்களும் இருக்கிறார்கள்.

நம் கணக்கை ஆபரேட் பண்ணும் உரிமையை அவர்களுக்கு வாங்கிக் கொடுத்து விட்டால், நம் விருப்பப் படி நாம் வேண்டிய போது பணத்தை எடுத்து அனுப்புவார்கள். பணத்தைப் போடுவார்கள். உலகெங்கும் உள்ள கம்பெனிகளில் நமக்காகப் பங்குகளை வாங்குவார்கள்; விற்பார்கள்.

நமக்குப் பிறகு, நமது வாரிசுகள் என்று நாம் யாரைக் குறிப்பிட்டிருக் கிறோமோ அவர்களைக் கண்டு பிடித்து வங்கியே பணத்தை ஒப் படைத்து விடும்.

இருப்பினும் சுவிஸ் வங்கிகளால் முன் போல் சுதந்திரமாகச் செயல்பட முடிய வில்லை. கள்ளப் பணம் வைத் திருப்போர், போதைப் பொருள் குபேரர்கள் ஆகியவர்கள் இங்கு கணக் குத் தொடங்குவது அதிகரித்து வரு கிறது. அதனால், உலக நாடுகளின் அமைப்பு களிடமிருந்து இந்த வங்கி களுக்குக் கெடுபிடிகள் வருகின்றன. உலக நன்மைக்காக சில தகவல்களை வெளியிடும் கட்டாய நிலை ஏற்படு கிறது. இதன் காரணமாக வாடிக்கை யாளர்களிடம் கெட்ட பெயர் ஏற்பட்டு வருகிறது. அதோடு கூட சுவிஸ் வங்கி கள் தரும் பத்திரமான பாதுகாப்பு, வரு மானத்தை விட அதிக அளவு தரும் போட்டி வங்கிகள், பனாமா-பகாமாஸ் - ஆஸ்திரியா போன்ற நாடுகளில் ஏற்பட்டு வருகின்றன. இதன் காரண மாகவும் சுவிஸ் வங்கிகளின் பெருமை குறைந்து வருகிறது.

சுவிஸ், இரண்டு உலகப் போர் களிலும் யாருடனும் சேராது நடுநிலை வகித்தது. இதன் காரணமாக உலகெங் கும் உள்ள செல்வாக்கு மிக்க குபேரர் கள் இந்த சுவிஸ் வங்கிகளில் நம் பிக்கை யோடு பணம் போடுகிறார்கள். இந்த வங்கியின் 'இரகசியம் காக்கும் முறை' ஒழிக்கப்பட்டு விட்டால் பெரும் சரிவு ஏற்படும். ஏனெனில், இப்படி வெளி நாட்டவர்கள் கணக்குத் தொடங் கும் மூலதனத்தை வைத்துக் கொண்டு தான் சுவிஸ் அரசு இயங்கு கிறது. இரகசிய முறைதான் இதன் முது கெலும்பு. இதற்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் சுவிஸ் நாட்டின் பொருளா தாரமே அவ்வளவுதான்!

– ஏ. ஹரிகிருஷ்ணன்

உழைத்துக் கொடு!

கடைவீதியில் அவனைக் கண்டாலே எல்லோருக்கும் பயம். அவன் வருவதற்கு முன்பே கடைக்காரர்கள் இரண்டு ரூபாயை எடுத்துத் தயாராக வைத்துக் கொள்வார்கள். அவன் வந்ததும் மரியாதையாகப் பணத்தைக் கொடுப்பார்கள். பணத்தை வாங்கிக் கொண்டு அவன், சில சமயம் கடையில் இருக்கும் பொருள்கள் மீதும் கை வைப்பது உண்டு.

'என்னய்யா? பழம் எப்படி இருக்கும்?' என்று அவன் கேட்பதற்கு முன், 'எடுத்துக்குங்க. உங்களுக்கு இல்லாததா?' என்று எடுத்துக் கொடுத்து விடுவார்கள். இல்லை என்றால் அந்தக் கடை சூறையாடப்படும்.

அவனைப் பற்றிக் காவல் நிலையத்தில் புகார் கூறியும் பயனில்லை. எதற்கும் துணிந்தவன். அடாவடி, அக்கிரமம் அவனது வாடிக்கை. அவனுக்கு எதிராக சாட்சி சொல்லி, அவன் தண்டிக்கப் பட்டால், சிறையிலிருந்து வந்ததும் நிச்சயம் கலாட்டா செய்வான். எதற்கு வம்பு? பேசாமல் தினம் இரண்டு ரூபாயைக் கொடுத்து விட்டு நிம்மதியாக இருப்பதை விட்டு, வழக்கு விசாரணை என்று வியாபாரத்தை விட்டு யார் தான் அலைவார்கள்?

கடைவீதியில் உள்ள அரச மரத்தடி மேடையில் ஒரு சிறிய பிள்ளையார் இருந்தார். வியாபாரிகளும், பொது மக்களும் போகும்போதும், வரும்போதும் கும்பிடு போட்டு விட்டுச் செல்வார்கள்.

அன்று, அந்த அரச மரத்தடி மேடையில் சாமியார் ஒருவர் எங்கிருந்தோ வந்து உட்கார்ந்தார். அவர், இவன் வசூல் செய்வதையும் கடைகளில் உரிமையுடன் பழங்களை எடுத்துத் தின்பதையும் கவனித்து அவன் எப்படிப்பட்டவன் என்பதை அறிந்து கொண்டார்.

''என்னசாமி, அப்படிப் பாக்கரே? ஊருக்கு புதுசு மாதிரி தெரியுதே? சாமிக்கு எந்த ஊரு?'' என்று கேட்டான் அவன் அதிகாரமாக.

''யாதும் ஊரே... யாவரும் கேளிர்'' என்றார் சாமியார்.

''இந்த வசனம் எல்லாம் கூட சாமி பேசுதே!'' என்று வியந்த அவன் ''இந்தா சாமி ரெண்டு பழம் சாப்பிடுங்க'' என்று கையில் வைத்திருந்த வாழைப் பழச் சீப்பிலிருந்து இரண்டு பழங்களைப் பிய்த்து சாமியாரிடம் கொடுத்தான்.

''வேண்டாம் தம்பி, நீயே வைத்துக் கொள். ''

''ஏன் சாமி! சாமிக்குப் பசிக்காதா?''

''பசியாத வயிறு இருந்து விட்டால், உலகில் பிரச்னையே இல்லையேப்பா. இது காசு தந்து வாங்கிய பழமாக இருந்தால், நான் வாங்கிக் கொள்வேன். இது நல்ல வழியில் வந்த பழம் இல்லையே?''

''ஓகோ! இப்படி ஒரு கொள்கையா? சாமி, ஊர்லே ஒவ்வொருத்தன் எப்படி எப்படியோ கொள்ளை அடிக்கிறான். பெரிய மனுஷன் வேஷம் போட்டுப் பொழைக்கிறான். பேசறது ஒண்ணு

பொன்மலை பரிமளம்



செய்யுறது ஒண்ணுமா இருக்கு.. நீங்க என்னான்னா...?''

''அவன் செய்யுறான்.. இவன் செய்யுறான் என்று சொல்லி உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாய். நீ நல்லவனாக நடந்தால் ஊரில் உள்ளவனும் நல்லவனாக இருப்பான். எவன் ஒருவன் தவறான வழியில் செல்கிறானோ, அவனுக்கு நிச்சயம் தண்டனை உண்டு. நாம் பார்ப்பதற்கு அவன் சுகமாக இருப்பது போல் தெரியும். ஆனால், அவன் மனம் படாத பாடுபடும். அந்தத் தண்டனையே பெரிய தண்டனை. எவன் ஒருவன் நிம்மதியாக இருக்கிறானோ, அவன்தான் சந்தோஷமான மனிதன். நீ, தீய வழியில் பணம் சம்பாதிப்பவன். உன்னைவிட பெரிய ரௌடி வந்து விட்டால், நீ அவதிக்குள்ளாவது நிச்சயம்.''

''சாமி! ஒரேடியா பிரசங்கம் செய்யுறீங்களே! நான் என்ன செய்யணும்னு சொல்றே சாமி?''

''நீ ஒன்றும் செய்ய வேண்டாம். அதோ பார், அந்த வயதான ஆயா பழக் கூடையைச் சுமந்து கொண்டு வருவதை''

''ஆமாம். அந்த ஆயா இனிமேதான் கடை போடப் போகுது.''

''அந்த ஆயாவுக்கு நீ உதவலாமே? ஆயா ஏதாவது பணம் கொடுப்பாள் அல்லவா?''

''சரிதான் போங்க சாமி!. என்னைப் போய்க் கூலி வேலை செய்யச் சொல்றீங்களே?''

''அதில் ஒன்றும் அகௌரவம் இல்லை. அதுதான் உழைப்பு. சுமை தூக்குவதும், வண்டி இழுப்பதும் கண்ணுக்குத் தெரியும் கடின உழைப்பு. அது கேவலமில்லை.''

''சாமி, நீங்க சொல்றது நமக்கு ஒத்து வராது. இந்தப் பழம் உங்களுக்கு வேண்டுமா, வேண்டாமா?''

''நீ உழைக்கும் பணத்தில் வாங்கிக் கொடு. கண்டிப்பா வாங்கிக்கிறேன்.''

''சரி, சாமிக்காக, அந்த ஆயா சுமக்குற கூடையை வாங்கி நான் சுமக்குறேன். அவுங்க தரும் துட்டுலே சாமிக்கு பழம் வாங்கிட்டு வர்றேன்'' என்று கிளம்பினான்.

ஆயாவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. பேட்டை ரௌடி-போக்கிரி என்று பெயர் பெற்றவனா இப்படிச் சுமையைத் தூக்கி வருகிறான்?

''இதுதான் என் கடை. இங்கே வச்சிடுப்பா கூடையை'' என்ற ஆயா அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவன் கையில் ஐம்பது காசுகளைக் கொடுத்தாள்.

''ரொம்ப சந்தோஷம் ஆயா. இன்னைக்கு உழைச்சி அம்பது காசு சம்பாதிச்சிட்டேன். பாவம்.. அந்த சாமியாருக்குப் பழம் வாங்கணும். இந்தா இந்த அம்பது காசுக்கும் பழம் கொடு'' என்றான். ஆயா, இரண்டு வாழைப் பழங்களைக் கொடுத்தாள்.


கட்டெறும்பு பாரம்மா!

கட்டெறும்பு பாரம்மா - அதன்
கண்கள் ரெண்டு பளிங்கம்மா
சுட்டெரிக்கும் வெயிலில் கூட
சோர்வே கொஞ்சமும் இல்லையம்மா!

விரைந்து செல்வதைப் பாரம்மா - அதன்
வேகம் பார்க்க அழகம்மா!
நிறைய நிறைய வாழ்ந்தாலும்
நெஞ்சில் கபடம் இல்லையம்மா!

ஒற்றுமைக்குப் பாடம்தான்-! அதன்
உயர்ந்த கொள்கை படிப்புதான்!
என்றும் நாமும் அவ்வழியில்
சென்றே உயர்ந்திடுவோமம்மா!

- தேனி முருகேசன்



''இந்தா சாமி வாழைப் பழம். நீ கேட்டபடியே உழைச்ச காசுலே வாங்கினது'' என்று சாமியாரிடம் கொடுத்தான். மகிழ்ச்சியுடன் அதை வாங்கிய சாமியார், ''நீ நன்றாக இருப்பாய் மகனே. விரைவில் நீ உழைத்து முன்னுக்கு வருவாய். தரும வழியில் செல்வந்தன் ஆவாய். உன்னை எல்லோரும் மதிப்பார்கள்'' என்று வாழ்த்தினார்.

தன்னைத் தன் காதுபட ஏசியவர்களையே ஏராளமாகக் கண்டிருந்த அவனுக்கு சாமியாரின் ஆசி நிறைந்த பாராட்டுகள் புதுமையாகத் தோன்றியது. அவனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி. சாமியாரின் வாழ்த்துக்கள் அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தன. புதிய நம்பிக்கை அலைகள் அவன் உள்ளத்தில் எழுந்தன.

மறுநாள் முதல் அவன் வழக்கம் போல் கடைக்குக் கடை தண்டல் வசூல் செய்யவில்லை. சுமைதூக்குவதும்,கை வண்டி தள்ளுபவனுக்கு உதவுவதுமாகப் பல விதமான கூலி வேலைகளைச் செய்தான். ஒரு நாளைக்குப் பத்து ரூபாய்தான் கிடைத்தது. உழைக்காமல் மிரட்டியபோது நூறு ரூபாய்க்கு மேல் வருமானம் பெற்றவனுக்கு இப்பொழுது வெறும் பத்து ரூபாய் கிடைத்தும் செலவுக்குப் போதவில்லை. திண்டாடினான். இருந்தாலும் சாமியார் உழைத்துச் சாப்பிட வேண்டும் என்று சொன்னது அவன் மனதில் ஆழப் பதிந்து விட்டதால் சிறிய வருமானமும் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அவன் கூலி வேலை செய்வதைக் கண்ட கடை வீதிக்காரர்கள் அவனைத் திட்டுவதும், குறைந்த கூலி கொடுப்பதுமாக மாறினார்கள். எல்லாவற்றிற்கும் அவன் பொறுமையாக இருந்தான். 'பொறுமை கடலினும் பெரிது' என்றும் சாமியார் சொல்லியிருக்கிறாரே?

ஒரு மாதம் கழிந்து அங்கு வந்த சாமியார், அவனைப் பார்த்தார். அவன்

மெலிந்து சோர்ந்து இருந்தான். ரௌடிக்களை இல்லை. முகத்தில் கருணை நிரம்பியிருந்தது. ஆனால் மகிழ்ச்சி நிறைந்தவனாகக் காணப்பட்டான்.

''என்ன தம்பி இப்படி மெலிந்து விட்டாய்?'' என்று கேட்டார் சாமியார்.

''உழைப்புக்கு ஏற்ற கூலி கிடைக்க மாட்டேங்குது சாமி. அடாவடித்தனமா முன்பு எங்ககிட்டே பணம் வாங்கினாய் அல்லவா? அதற்கு இந்தக் கூலி போதும் போடா' என்று எல்லாரும் விரட்டுகிறார்கள். கெட்டவனாக இருந்தவன் நல்லவனாகவே கூடாது போலிருக்கிறதே சாமி?' என்று வருந்தினான் அவன்.

''தம்பி, எல்லாமே நன்மைக்குத்தான்'' என்றார் சாமியார். அப்பொழுது அங்குள்ள கடைக்காரர்கள் எல்லோரும் சாமியாரைத் தரிசிக்க வந்தார்கள். ஒரு பெரிய ரௌடி, சாமியாரால்தான் சாதுவாக மாறிவிட்டான் என்பதை அறிந்து சாமியாருக்குக் காணிக்கையாகப் பணம் கொடுத்தார்கள். காலில் விழுந்து வணங்கினார்கள். எல்லோரையும் ஆசிர்வதித்த சாமியார், அவர்கள் கொடுத்த காணிக்கைப் பணத்தைத் திரட்டி அவனையே எடுத்து எண்ணச் சொன்னார். ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தது!

''தம்பி, இந்தப் பணத்தை நீயே வைத்துக் கொள். இனி கூலி வேலை செய்ய வேண்டாம். இங்கேயே ஒரு பழக் கடை வைத்து வியாபாரம் செய். மனிதத் தன்மையோடு இரு. செல்வம் உன்னைச் தேடி வரும்'' என்று வாழ்த்தி பணத்தை அவனிடம் கொடுத்தார் சாமியார்.

நாட்கள் சென்றன. அந்த ரௌடி இப்பொழுது வியாபாரியாக மாறிவிட்டான். காலையில் எழுந்ததும் பெரிய மார்க்கெட் செல்வதும், அங்கிருந்து பழங்களை மொத்தமாக வாங்கி வந்து விற்பதுமாக இருந்தான்.

ஒரு வருடம் சென்றது. சாமியார் அங்கு வந்தார்.

''சாமி, என்னைத் தெரியவில்லை? நான்தாங்க. நீங்க ஆசிர்வாதம் பண்ணிக் கொடுத்த பணத்துலே பழக் கடை வச்சி பெரிய மனுஷனாயிட்டேன். இன்னைக்கு நான் லட்சாதிபதி. சொந்தமா கடை இருக்கு. பெண்டாட்டி, பிள்ளைகள் எல்லாரும் இருக்காங்க. அடுத்த மாசம் சொந்த வீடு வாங்கப் போறேன். சாமி, நீங்க என் கடைக்கு வரணும்!'' என்று மரியாதையுடன் அழைத்தான்.

சாமியார் அவன் பழக் கடைக்கு வந்தார். 'உழைப்பும், நாணயமும் தான் உன்னை இந்த அளவுக்கு உயர்த்தி இருக்கிறது. உழைப்பே உயர்வு தரும். தெரிந்து கொள்'' என்று அவனை அளவில்லாத மகிழ்ச்சியுடனும் அன்புடனும் ஆசிர்வதித்தார் சாமியார்.

'' 'எலி இனத்தை வாழ விடுங்க'ன்னு நீங்க பிரசாரம் செய்யறதா கேள்விப்படறோம். எங்க வளர்ச்சியிலே உங்களுக்கு என்ன இவ்வளவு அக்கறை பூனையாரே...?''

''எல்லாம் என் வயிற்றுப் பிழைப்புக்குத்தான்...!''

– ச. காணிக்கைராஜ்



குடல்புண் ஏன் வருகிறது?

✱ ஆர்.திருமலை, கச்சனம். ரெ.இராமா தேசிகன், காமரசவல்லிமாத்தூர்.

?குடல்புண் எதனால் வருகிறது? இதற்கு மருத்துவம் என்ன? இதனைத் தவிர்க்க என்ன வழி டாக்டர்?

! 'குடல்புண்' என்று பேச்சுவழக்கில் சொல்லப்படுவது இரைப்பைப் புண் (GASTRIC ULCER) ணைக் குறிக்கும். வேளை தவறிய உணவு, காரம் மற்றும் மசாலா நிறைந்த உணவு, மது அருந்துதல், பரம்பரை, மனக்கவலை, வைட்டமின் சத்துக் குன்றவு போன்ற பல காரணங்களால் குடல்புண் (இரைப்பைப் புண்) வருகிறது. இன்றைய நவீன மருத்துவத்தில் குடல்புண்ணை வெகு விரைவில் ஆற்றக் கூடிய அமில எதிர்ப்பு மருந்துகள், மாத்திரைகள், ஊசிகள் பல உள்ளன. நோயின் ஆரம்ப நிலையில் உரிய மருத்துவம் பெற்றால் உடனடியாக முழு நிவாரணம் கிடைக்கும். அத்துடன் கீழ்க்காணும் வழி முறைகளைப் பின்பற்றினால் குடல் புண் மீண்டும் வராமல் தவிர்க்காலம்:

1) நேரத்தோடு உணவு உண்ண வேண்டும். 2) காரம், மசாலா, புளிப்பு உணவுகளை அளவோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். 3) மதுவை ஒதுக்க வேண்டும். 4) ஆஸ்பிரின், அனால்ஜின் மாத்திரைகளை அடிக்கடி உபயோகிக்கக் கூடாது. 5) பால், மோர், இளநீர், பழங்கள், காய்கறிகள், கீரைகள் போன்றவற்றைத் தாராளமாக சேர்த்துக் கொள்ள வேண்டும். 6) மனக் கவலையை மறக்க வேண்டும்.

✱ ஆர்.வெங்கடேஷ், இரும்புலியூர்.

? நம் உடலில் உள்ள மொத்த எலும்புகளின் எண்ணிக்கை எவ்வளவு, டாக்டர்?

! 206.


✱ எஸ்.நாகராஜன், மேலப்பாதி.

? பிறக்கும் போதே சில குழந்தைகள் மஞ்சள் காமாலையுடன் பிறப்பது எப்படி?

! நல்ல கேள்வி. மஞ்சள் காமாலையில் பல வகை உண்டு. அசுத்தமான தண்ணீர் மூலம் வருகிற மஞ்சள்காமாலையை

டாக்டர் கு.கணேசன்

அநேகம் பேர் அறிந்திருப்பார்கள். அசுத்த ரத்தத்தை உடம்பில் ஏற்றிக் கொள்வதால் ஒரு வகைக் காமாலை வருவதுண்டு. வெகு அபூர்வமாக பிறக்கும் குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை வருவது இயல்பு. அதற்கான காரணங்கள் இவை: 1) பிறக்கும் போது கல்லீரல் முழு வளர்ச்சி அடையாமல் (IMMATURE LIVER) இருப்பது. 2) இரத்தத்தில் Rh பொருந்தாத நிலை Rh INCOMPATIBILITY அதாவது தந்தையின் இரத்தம் Rh பாசிட்டிவ், தாயின் இரத்தம் Rh நெகடிவ், குழந்தையின் ரத்தம் Rh பாசிடிவ் என்று இருக்கும் நிலை. 3) சிவப்பு இரத்த அணுக்களின் அமைப்பில் மாறுதல் 4) சில முக்கிய



நொதிகள் (ENZYMES) பிறவியிலேயே குறைவாக இருப்பது. 5) பரம்பரையாக வருவது. 6) பித்த நாளங்கள் (BILE DUCTS) சரியாக வளராமல் அடைத்துக் கொள்வது. 7) தைராய்டு சுரப்பியின் செயல்திறன் குறைபாடு.

✱ ரமேஷ் என்ற நீலையப்பன், சேலம்!

? கொசுக்கள், மூட்டைப்பூச்சிகள் மனிதனைக் கடித்தால் எய்ட்ஸ் நோய் வருமா?

! பயப்பட வேண்டாம், ரமேஷ்! கொசு, மூட்டைப்பூச்சி இவை கடித்தால் எய்ட்ஸ் (AIDS) நோய் வராது.

ஜி.ஜி.கிருஷ்ணன், விசலூர்.

? மனித உடம்பின் நிறத்தை மருந்து, மாத்திரைகள் மூலம் மாற்ற முடியுமா, டாக்டர்? கறுப்பு நிறத்தை சிவப்பு நிறமாக மாற்ற முடியும் என சில விளம்பரங்களைப் படித்தேன்

! மனித உடம்பின் இயற்கை நிறத்தை மருந்து, மாத்திரைகளால் மாற்ற முடியாது. போலி விளம்பரங்களை நம்பி ஏமாந்து விடாதீர்கள்.

✱ எஸ்.கிருஷ்ணகுமார், மாத்தூர். கே. ஜெயேந்திர குமார், நத்தம்.

? சொறிசிரங்கு எதனால் வருகிறது? அதை எப்படிப் போக்குவது?

! சார்கோப்டிஸ் ஸ்கேபி (SARCOPTES SCABIEI) என்ற ஒட்டுண்ணிக் கிருமிகளால் சொறி சிரங்கு வருகிறது. சொறி சிரங்கைப் போக்க இவை உதவும்: 1) காலை, மாலை இரண்டு நேரங்களிலும் வெந்நீரில் குளியுங்கள். 2) SCABOMA என்ற மருந்தை கழுத்துக்குக் கீழ் உடம்பு முழுவதும் தடவுங்கள். 3) இந்தச் சிகிச்சையைக் குறைந்தது இரண்டு வாரங்களுக்குத் தொடர்ந்து செய்யுங்கள். 4) சிரங்குகளில் சீழ் பிடித்திருந்தால் மருத்துவர் பரிந்துரைப்படி நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை (ANTI-BIOTIC) உட் கொள்ளுங்கள். 5) குடும்பத்தில் அனைவரும் ஒரே சமயத்தில் சிகிச்சை பெற்றால் சொறிசிரங்கு மீண்டும் வருவதைத் தவிர்க்கலாம்.

✱ என். ராஜலட்சுமி, மேலப்பாதி.

? பற்களின் மேல் வரிசையில் உள்ள பல்லைப் பிடுங்கினால் மூளை நரம்பு பாதிக்கப்படுமா?

! பாதிக்காது.

சின்னச் சின்ன சிறுவரின் பெரிய பெரிய சாதனை

திருக்குறள் கண்மணி

செங்கல்பட்டு செயிண்ட் மேரிஸ் பள்ளியில் முதல் வகுப்பு மாணவி ஆறுவயதுச் சிறுமி கண்மணி. கண்மணி நூறு குறள்களை ராகம் போட்டு ஒப்பிக்கிறாள். இவள் எல்.கே.ஜி.யில் படிக்கும் போதே நாற்பது குறள்களை மனப் பாடம் செய்து இசையுடன் பாடி சான்றோர் பலரது பாராட்டுகளையும் பெற்றவள். இலக்கிய வீதி இலக்கிய அமைப்பின் சார்பில் நடைபெற்ற விழாவில் டாக்டர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் கண்மணிக்கு பொன்னாடை போர்த்தி சிறப்புச் செய்துள்ளார். கண்மணியின் தந்தை திருநாவுக்கரசு, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அம்மா, மஞ்சுளா தேவி. தினமும் இவர்கள் கண்மணியை ஒரு புதுக் குறளையாவது மனப்பாடம் செய்யத் தூண்டுகிறார்கள். நான்காம் வகுப்பை முடிப்பதற்குள் திருக்குறள் முழுமையையும், பாரதியார் பாடல்கள் முழுமையையும் மனப் பாடம் பண்ணி விடுவதுதான் கண்மணியின் இலட்சியமாம். கண்மணியின் பெரியப்பா கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான கவிஞர் தளவை இளங்குமரன். முயன்றால் முடியாதது ஏதுமில்லை என்பதற்கு கண்மணியே ஒரு முன் உதாரணம். வளர்க கண்மணியின் திறமை.



14 வயதில் பட்டம்

ராணிப்பேட்டை D..A..V. நடர பள்ளியில் ஏழாம் வகுப்பில் படித்து வருபவன் பதினான்கு வயது கூட நிரம்பாத மாஸ்டர் வெங்கட்ராமன். இவன் 93ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி பிரவின் உத்திராத் தேர்வில் பாஸ் பண்ணியிருக்கிறான். இதை இந்தி பி.ஏ.என்று கூறலாம். மற்றவர்களுக்கு இந்தி சொல்லித் தரும் தகுதியையும் இதன்மூலம் சிறுவன் வெங்கட்ராமன் பெறுகிறான். பதினான்கு வயதிலேயே இந்தச் சாதனையைப் புரிந்துள்ள வெங்கட்ராமன் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு.

அசத்தும் அஸ்வின் குமார்!

சென்னை தியாகராய நகரில் உள்ள வேளாங்கண்ணி பள்ளியில் முதல் வகுப்பில் படித்துவரும் ஆறுவயது

● சிவனேஷ்




* அஸ்வின் குமார்

இளங்குருத்து அஸ்வின் குமார். ஆண்டையும் மாதம் தேதியையும் கொடுத்தால் கிழமையைக் கூறுகிறான். ''1989ஆம் ஆண்டில் ஜுன் மாதம் எந்தெந்த தேதிகளில் வியாழக் கிழமை வரும்?'' என்று கேட்டால் டக்கென்று பதில் கூறுகிறான். 1988ல், எந்தெந்த தேதிகளில் பௌர்ணமி, அமாவாசை, என்றால்கிடுகிடுவென்று உடனே பதில் வருகிறது! 12.ஆம் வகுப்புக்கு உரிய லாகர்தம் டேபிளை இவன் அப்படியே ஒப்பிக்கிறான்! அதில் என்ன கேட்டாலும் 'டக்டக்'கென்று பதில் வருகிறது!

திடீரென்று ஒரு நாள், 'ஏதாவது ஒரு வருஷம், மாதம், தேதியைச் சொல்லி, கிழமையைக் கேளேன்?' என்று அஸ்வின் குமார் என்னைத் தொந்தரவு பண்ணினான். எனக்கு ஒரே அலுப்பு. போடா அப்புறம் மாகட்டும்னு சொல்லி விட்டேன். ஆனால், அவங்க அப்பா அவனது விருப்பத் தைப் பூர்த்தி பண்ணி கேள்விகள் கேட்டு, பதில்களால் அசந்து, எனக்கும் விளக்கி அயரவைத்தார். பிறகுதான் நாங்கள் அவன் திறமையை உணர்ந் தோம். இப்போ, திட்டம் போட்டு அவனுடைய திறமையை வளர்த்து வருகிறோம்'' என்கிறார் அஸ்வின் குமாரின் அம்மா பிருந்தா. அப்பா நாராயணனும் மகனுக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்து வருகிறார். அஸ்வின் குமார் எதிர்காலத்தில் ராமானுஜமாகவோ, சகுந்தலாதேவியாகவோ வந்து அசத்தலாம்!

பொது அறிவுப் பெட்டகம்!

கோவை வேங்கடலட்சுமி மெட்ரிக்குலேஷன் பள்ளியில் எல்.கே.ஜி. பயிலும் மாணவன் சிறுவன் சிவனேஷ். உலகப்படத்தில், உலக நாடுகள் 179 ஐயும் இவன் சரியாகக் காட்டுகிறான். ஏதாவது ஒரு நாட்டின் தலை நகரைக் கூறினால், உரிய நாட்டின் பெயரை அவனே கூறி, வரைபடத்திலும் காட்டுகிறான். அதோடு அந்தந்த



* [illegible]



* [illegible]

நாடுகளுக்கு உரிய ''கரென்சி'யையும் கூறுகிறான். இவைதவிர தயார் செய்யப் பட்ட சுமார் 500 பொது அறிவுக் கேள்விகளுக்கு இவன் எப்படிக் கேட்டாலும் தக்கவாறு பதில் கூறுகிறான்! வானொலி, பத்திரிகைகள் இவனது சாதனைகளை வெளியிட்டுள்ளன. 'லயன்ஸ் கிளப்' போன்ற அமைப்புகளும் சிறுவனை நிகழ்ச்சி நடத்த வைத்துப் பாராட்டிப் பரிசு வழங்கியுள்ளன. சிறுவனின் சாதனைகளுக்குக் காரணம் விரிவுரையாளரான இவனது தந்தை எஸ்.ராமதாசின் பயிற்சியே. பொது அறிவுப் பெட்டகமாக எதிர் காலத்தில் விளங்க உள்ள சிவனேஷை நாமும் வாழ்த்துவோம்.

முட்டாள்!

கம்ப்யூட்டர் செயல் முறைப் பயிற்சி வகுப்பு. திவாகர் "புரோக்ராம்" செய்யத் தயாரானான். அதற்கு முன்பாக அதற்குரிய "பிராம்ட்" வரவில்லை. அதுதான் கம்ப்யூட்டரின் ரெடி சிக்னல். அது இல்லாமல் எதையுமே தொடங்க முடியாது.

பயிற்சி வகுப்பு ஆசிரியர் பேசினார்.

"முதலில், நான் ஏற்கனவே உங்களுக்கு என அறிவித்திருந்த எண்ணை டைப் செய்யுங்கள். அப்பொழுதுதான் "பிராம்ட்" வரும். பயிற்சியைத் தொடங்க முடியும்."

திவாகர் தடுமாறினான். காரணம் அவன் ஒரு புத்தகப் புழு என்பதுடன் வகுப்பில் பாடத்தைக் கவனிக்காதவன். தேர்வு சமயத்தில் கடம் போட்டு மனப்பாடம் பண்ணி எப்படியும் முதல் ஐந்து ரேங்குக்குள் வந்து விடுவான்! அவனுடைய பட்டப் பெயரே 'கடம் திவாகர்' தான்! ஆசிரியர் பிராம்ட்டுக்கு உரிய எண்ணை அறிவித்தபோது அவன் வழக்கப்படி கவனிக்கவில்லை. கோட்டை விட்டு விட்டான். அதன் விளைவை இப்பொழுது அனுபவிக்கிறான்!

"சனியன், ஒரு நொடி கவனிக்கலேன்னாகூட இது காலை வாரி விட்டுடும்போல இருக்கே!" என்று அலுத்துக் கொண்டு, "வினு எந்த எண் தரதுடா?" என்று பக்கத்தில் இருந்த வின்சென்ட்டிடம் கேட்டான்.

"நான் உன் ரூட்டு இல்லைடா. எங்களுக்கு வேற எண்" என்று காலை வாரினான் வின்சென்ட்.

திவாகர் கைக்கு வந்த எண்ணை டைப் செய்தான்.

"முட்டாள். சரியான எண்ணைக் குறிப்பிடு" என்று திரையில் திட்டியது கம்ப்யூட்டர்.

பறக்கப் பறக்க வேறு எண்ணை அடித்தான்.

"மக்கு" என்று திரை வாயிலாகக் கம்ப்யூட்டர் மறுபடி திட்டியது.

மேற்கொண்டு என்ன செய்வது என்பது தோன்றாமல் 'திருதிரு' வென்று விழித்தான் திவாகர். அவனைப் போலவே இன்னும் சில 'திருத்திரு' மாணவர்களும் இருந்தனர். ஆசிரியர் அவர்களையெல்லாம் அழைத்தார்.

"நீங்களெல்லாம் வகுப்பில் பாடம் நடத்தும்போது தூங்கிக் கொண்டிருந்திருக்கிறீர்கள். கம்ப்யூட்டர் வகுப்புக்கு வருவதற்குப் பதிலாக மாடுமேய்க்கப் போயிருக்கலாம் என்று கடிந்து கொண்ட ஆசிரியர் "திவாகர், நெட்டுருப் போட்டு மார்க் வாங்கின காலம் எல்லாம் மலையேறிக் கொண்டிருக்கிறது. கம்ப்யூட்டர் வகுப்பில் ஒவ்வொரு அறிவிப்பும் ஒரு சட்டைப் பொத்தான் மாதிரி. சரியாகக் கவனித்து படிப்படியாக ஒவ்வொன்றையும் செய்து கொண்டே வர வேண்டும். குறியீடுகள் மிக முக்கியமானவை. எந்தப் பாடம் ஆனாலும்சரி, வகுப்பில் நடப்பதை கவனம் பிசகாது கவனிக்க வேண்டும். கம்ப்யூட்டருக்கு இது மிக மிக முக்கியம். உங்களைப்

போன்ற மாண வனாக இருக்கும் போது, கவனக் குறை வாக இருந்து நானும் இப்படி ஆசிரியரிடம் சிக்கி கொண்டிருக்கிறேன்.''

எ ல் லா ரு ம் ஆசிரியர் கூறப் போவ தைக் கேட்க ஆவலாக இருந்தனர்.

''ஒ ரு மு றை ஆசிரியர் ஒரு மாண வனை அ னு ப் பி அழுக்கு நீரை ஒரு கிண்ணத்திலும் நல்ல நீரை ஒரு கிண்ணத் திலும் கொண்டுவரச் செய்தார். இந்த இரண்டு நீரின் சுவை களையும் பற்றிக் கட் டுரை எழுதவேண்டும் என்று கட்டளையிட டார். அழுக்கு நீரை சுவைப்பதா என்று நான் உட்பட எல்லா மாணவர்களும் முகம் சுளித்தனர். அதைக் கவனித்த ஆசிரியர், ''இது பெரிய காரியம் அல்ல. இதோ நான் செய்து காட்டுகிறேன் பாருங்கள்'' என்று ஒரு விரலை அந்த அழுக்கு நீரில் நனைத்து நாக்கில் தொட்டுக் காட்டினார். ஆசிரியரே சுவைத்துக் காட்டிவிட்ட பிறகு, நாம் தயங்குவது சரி யல்ல என்று நானும் மற்ற மாணவர்களும் விரலால் அந்த அழுக்கு நீரைத் தொட்டு நாக்கில் வைத்துச் சுவைத்து, கட்டுரை எழுத ஆரம்பித்தோம்.''

ஆசிரியர் நிறுத்தி விட்டு மீ ண் டு ம் தொடர்ந்தார்.



''உங்களைப்போல் மடையர்கள் யாருமே இல்லை. நீங்கள் சரியாக எதை யும் கவனிக்கவில்லை. நான் அழுக்கு நீரில் நனைத்தது என் சுட்டுவிரலை. நாக்கில் வைத்துக் கொண்டது என் நடு விரலை. எதையும் ஈடுபாடுடன் ஊன்றிக் கவனிக்கவிலை என்றால் இழப்பு நமக்குதான் என்று திட்டினார் என் ஆசிரியர். அதற்குப் பிறகு நான் என்றுமே கவனக் குறைவாக இருந்தது கிடையாது'' என்றார் ஆசிரியர்.

இப்பொழுதெல்லாம் திவாகர் வகுப் பை ஊன்றிக் கவனிக்கிறான். கம்ப் யூட்டரிடம் 'மடையா' என்று திட்டு வாங்குவதில்லை.

- கே.பி.சாந்தி.

யாருக்குப் பாட்டு?



படைக்கும் கடவுள் பிரும்மாவுக்கு முன்பாக எறும்பு, ஈ, கொசு மூன்றும் பணிவாக நின்று கொண்டிருந்தன.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று எறும்பிடம் கேட்டார் பிரும்மா.

"எனக்கு அழகாகப் பாடக் கூடிய சக்தியைத்தர வேண்டும். இதுதான் எங்கள் எறும்பு இனத்தின் சார்பில் நான் உங்களிடம் கேட்கும் வரம்" என்று பணிவாகக் கூறியது எறும்பு.

"சற்றுப் பொறு" என்று கூறிய பிரும்மா, "நீ எதற்கு வந்திருக்கிறாய்?" என்று ஈயிடம் கனிவாகக் கேட்டார்.

"எங்கள் ஈ இனத்தின் சார்பில் நான் வந்திருக்கிறேன். எங்கள் இனத்திற்குப் பாடக் கூடிய திறமையைத் தாங்கள் அருள வேண்டும். இதுதான் எங்கள் கோரிக்கை" என்று வேண்டிக் கொண்டது ஈ.

"சரி, நீயும் சற்றுப் பொறுத்திரு" என்று கனிவாகக் கூறிய பிரம்மன், "உன் கோரிக்கை என்ன?" என்று கொசுவைப் பார்த்துக் கேட்டார்.

"நானும் கூட எங்கள் இனத்தின் சார்பில்தான் ஒரு வேண்டுகோளுடன் வந்திருக்கிறேன். இசைக்கு எத்தனை மகத்தான சக்தி இருக்கிறது என்பதை, இசைக் கலைக்கு தேவதையாகிய கலைமகளையே மனைவியாகக் கொண்டுள்ள தங்களுக்கு நான் கூற வேண்டியது இல்லை. எங்களுக்கு இசை வேண்டும். எங்கள் இனத்தார் பாட வேண்டும். இதற்குத் தாங்கள் வரமளிக்க வேண்டும்" என்று பணிந்து வேண்டிக் கொண்டது கொசு.

பிரமன் சிறிது நேரம் யோசித்தார். பிறகு, "உங்கள் மூன்று இனத்தார்களுள் யாராவது ஒருவருக்குப் பாடும் வரத்தை நான் தருகிறேன். அதை யாருக்குத் தரலாம் என்பதை நீங்கள் மூவருமே பேசி முடிவு செய்து கொண்டு, எனக்குத் தெரிவியுங்கள். நான் உள்ளே போய்விட்டு வருகிறேன்" என்று எழுந்து போனார் பிரமன்.

முதலில் எறும்பு பேசியது, "நண்பர்களே, நான் இல்லாத இடமே இல்லை, புராண காலந் தொட்டு எங்கள் இனம் இருந்து வருகிறது நான் கடித்தவுடன் அந்த இடம் சிவந்து விடும்" என்றது எறும்பு.

"இந்தப் பெருமை எங்களுக்கும் உண்டு. உன் தனித் திறமை என்ன? அதைச் சொல்லு" என்றது ஈ.

"ஆமாம். எங்கள் இருவரை விட உனக்கு என்ன சிறப்பு இருக்கிறது? அதைச் சொல் முதலில்" என்றது எறும்பு ஈயிடம்.

"இது பெரிய சிறப்பா? நான் எந்த உணவாக இருந்தாலும் அதை மனிதர்கள் அறியாது அசுத்தப்படுத்தி வருவேன். என் மூலம் எண்ணூறுக்கு மேற்பட்ட நோய்கள் பரவுகின்றன" என்றது ஈ.

"இது கூடப் பெரிய சிறப்பு இல்லை. நம்மையெல்லாம் ஆட்டிப் படைக்கும் மனிதனையே நான் அவனறியாது கடித்து, அவன் இரத்தத்தைக் குடித்து வருகிறேன். இது பெரிய செயல் அல்லவா?" என்று கேட்டது கொசு.

எறும்பும், ஈயும் தலை கவிழ்ந்தன. "நம் மூவரில், தனிச் சிறப்பு மிக்கவன் நீதான்" என்று ஒப்புக் கொண்டன.

பிரம்மன் வந்தார். "இறைவா, எங்கள் மூவருள் கொசுவே தனிச்சிறப்பு மிக்கது. பாடும் வரத்தைத் தாங்கள் கொசுவுக்கே தாருங்கள்" என்றன ஈயும், எறும்பும்.

கொசுவைப் பார்த்து பிரமன் ஆசி வழங்கினார். பாடும் வரத்தைத் தந்தார். கொசு பாடுவதைக் கேட்காதவர்கள் இருக்க முடியாதே!


– எம்.கே.வேங்கவேல்.

நாய்

சில தகவல்கள்


ஆழி

ஓநாய், நரி ஆகியவற்றிலிருந்து உண்டானதுதான் நாய் என்று கருதப்படுகிறது.




ஓநாய்

ஆஸ்திரேலியாவில் உள்ள 'டிங்கோ' என்பதும் நாயின் இனத்தைச் சேர்ந்ததுதான்.



மனிதனுக்கு ஆதிகாலம் முதலே தோழனாக இருந்து வந்தவை நாய்களே. சுமார் 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட குகை ஓவியங்கள் மூலம் இதை உறுதிப்படுத்துகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.



சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே, நாயில் பல வகைகள் உண்டாகிவிட்டன. இப்போது சுமார் 225 வகைகள் இருக்கின்றன. அளவு, வடிவம், ரோமத்தின் நிறம், இயல்பு ஆகியவற்றைக் கொண்டு நாயினப் பிரிவுகளை நிர்ணயிக்கிறார்கள். விநோதமான சில நாய்கள்:



கிரேஹவுண்ட்



புல் டாக்

டால்மேஷியன்





பூடில்



டாக்ஷ்ண்ட்




நாயின் கர்ப்ப காலம் 3 மாதங்கள். 4 முதல் 22 குட்டிகள்கூட போடும். நாயின் ஆயுள் சுமார் 20 ஆண்டுகள். நாய்க்கு 42 பற்கள். புலால் உணவும் உண்ணும், தாவர உணவும் உண்ணும். ஆனால் சீனாவில் வளர்க்கப்படும் ஒரு வகை நாய் தாவர உணவு மட்டுமே உண்ணுகிறது!


நாயின் தோலில் வியர்வைச் சுரப்பிகள் இல்லை. வியர்வைக்குப் பதிலாக, அந்தக் கழிவு அதன் நாக்கிலிருந்து உமிழ் நீராக வெளியேறும். அதனால்தான், நாய் எப்போதும் நாக்கைத் தொங்கப் போட்டு, உடலின் வெப்ப நிலையைச் சமப் படுத்திக் கொள்ளுகிறது. அதன் பாதங்களின் வழியாகவும் சிறிது வேர்வை வெளியேறும்.



நாயின் கண்களுக்குக் காட்சிகள் எல்லாம் கறுப்பும் வெளுப்புமாகத் தான் தெரியும். வண்ணங்க ளாகத் தெரியாது.



உலகிலேயே மிகவும் குட்டையான நாய் இம்பீரியல் சீ'யன். இதன் உயரம் சுமார் 10 செ.மீ.தான்.



நாய்களில் மிகவும் உயரமானது ஐரிஷ் வுல்ஃப்ஹவுண்டு. சுமார் ஒரு மீட்டர் உயரம் வளரும்!



அதிக எடையுள்ள நாய் இனம் செயின்ட் பெர்னார்டு. இதன் எடை சுமார் 140 கிலோ.



மிகவும் இலேசான நாய் சிவ்ஹுஹீ. இதன் எடை சுமார் 2 கிலோ.

அதிக உரோமம் உள்ள நாய் 'கிளைடெஸ்டேல் டெரியர்'. உரோமத்தின் நீளம் 30 செ.மீ.




உடலில் உரோமங்களே இல்லாத நாய் மெக்ஸிகோவில் உள்ள 'ஹாட் டாக்'. இது உலகில் உள்ள பாலூட்டி இனங்களில் அதிக வெப்ப நிலை கொண்டது. இதன் உடலின் வெப்ப நிலை 104° பாரன்ஹீட்!





வேட்டை விலங்குகளை மடக்குவது, பார்வையற்றவர்களை வழி நடத்திச் செல்வது, போர்க்காலங்களில் ரகசியத் தபால்களைக் கொண்டுபோவது முதலிய வேலைகளையும் நாய்கள் செய்கின்றன. துருவப் பிரதேசங்களில் நாய்கள் வண்டிகளை இழுத்துச் செல்லுகின்றன.

உலக மக்களால், செல்லப்பிராணியாக அதிகமாக வளர்க்கப்படுவது நாய்தான். அதிலும், அதிகமாக விரும்பி வளர்க்கப்படும் நாய் இந்த 'பாமரேனியன்'தான்.






ஜப்பானில், டோக்கியோவில், நாய் வளர்க்கிறவர்கள், நாய் குரைப்பது மற்றவர்களுக்கு இடையூறாக இருப்பதால், அதன் குரல்வளையில் ஆபரேஷன் செய்து, குரைக்க முடியாமல் ஆக்கிவிடுகிறார்கள்!

1931-இல், தபால் வண்டியை இழுக்க நாய்கள் பயன்பட்டன. அயர்லாந்து தீவிரவாதிகளை ஒடுக்க எலிஸபெத் I மகாராணியின் சிப்பாய்கள், நாய்களைப் பயன்படுத்தினர். ஜெர்மனி ராணுவம் 20,000 நாய்களைப் போர்க்களத்தில் பயன்படுத்தியது. 'காஸ்' கசிவைக் கண்டுபிடிக்கவும், கஞ்சா போன்ற போதைப் பொருட்களைக் கடத்து வதைக் கண்டுபிடிக்கவும் நாய்கள் உதவுகின்றன.




அல்சேஷன், பின்ஸ்சர், டாபர்மான், ரிட்ரீவர், லாப்ரடார் போன்ற நாய் இனங்களே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் போலீஸ் துறையின் பயன் படுத்தப் படுகின்றன. இந்தியாவில் 80 சதவீத மோப்ப நாய்களுக்கு ஆங்கிலத்தில்தான் பயிற்சியளிக்கப் படுகிறது. வட இந்தியாவில் சில இடங்களில் இந்தியில் பயிற்சியளிக்கப்படுகிறது.







போலீஸ் துறையில் சேர்க்கப்படும் நாய், ஆறு மாத குட்டியாக இருக்கும்போதே பயிற்சி தொடங்கிவிடுகிறது. மோப்பம் பிடித்தல், பொருள்களைக் கண்டுபிடித்தல், பொருள்களைப் பாது காத்தல், பிறர் கொடுக்கும் உணவுப் பொருள்களை மறுத்தல், உயரப் பாய்ச்சல், தாண்டுதல், தீப்பந்த வளையங்களூடே பாய்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கிறார்கள்.



நன்கு பயிற்சிபெற்ற மோப்ப நாய்கள், மணிக்கு 48 முதல் 56 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக்கூடியவை. சாதாரண மனிதன் தாண்டும் உயரத்தைவிட ½ மீட்டர் உயரம் அதிகம் தாண்டக்கூடியவை பயிற்சி பெற்ற நாய்கள்.



ரஷ்யாவில், 1957 அக்டோபர் 4-இல், முதன்முதல் ராக்கெட்டில் வைத்து விண்வெளியில் அனுப்பப் பட்ட உயிரினம் இந்தநாய்தான்.
இதன் பெயர் 'லைகா.'



நாயின் மூச்சுக்காற்று, உமிழ்நீர், புண்கள் மூலம், பலவித நோய்கள் மனிதனுக்குப் பரவுகின்றன. கண்களைப் பாதிக்கும் டாக்ஸோ பிளாஸ் மோஸிஸ் என்னும் நோய் நாயின் மூலம் பரவுகிறது. நாயின் ஒட்டுண்ணிகளால் நரம்புக் கோளாறுகள் உண்டாகின்றன. 'ராபிஸ்' என்னும் வைரஸ், நாயின் உமிழ் நீரின் மூலம் பரவி, வெறியை உண்டாக்குகிறது. பொதுவாக, நாயை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சுவதைத் தவிர்க்க வேண்டும்.



நாய்க்கடியினால் வரும் வெறிநோய்க்கு மருத்துவம் கண்டவர் 'லூயி பாஸ்டர்' என்னும் பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி.

பாடல்கள் கொஞ்சுகின்றன!

தமிழ் மன்னர் கதைகள், மு.அண்ணாமலை, பக். 92, ரூ. 11.50, D.S.புத்தக மாளிகை, 6, ஜெயசங்கர் தெரு, மே. மாம்பலம், சென்னை - 600 033.

பழந்தமிழ் இலக்கியங்கள் சிறப்பித்துக் கூறும் சேரமான் கணைக்கால் இரும்பொறை, தலையலங்காணத்து நெடுஞ்செழியன், குலோத்துங்கன், நட்புக்கு இலக்கணம் வகுத்த பிசிராந்தையார் - கோப்பெருஞ்சோழன், மன்னனது தவறை இடித்துரைத்த வெள்ளைக்குடி நாகனார், பாண்டவ கௌரவர்களுக்கு உணவளித்த உதியஞ்சேரல், புலவர்களை ஆதரிக்க மறுத்து மகனை இழந்த சோழ மன்னன் திதியன் ஆகிய தமிழ் மன்னர் எழுவரைப் பற்றிய வரலாற்றுக் கதைகள் இதில் உள்ளன. கதைகளை சுவை படக் கூறுவதில் தமக்குள்ள திறமையை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளனர். பயன் மிக்க படைப்பு. படிப்பவர்கள், இலக்கியங்களை விரிவாகப் படிக்க விரும்பு வார்கள் என்பது உறுதி.


ஆவணத்தின் கதை, ஜெ. எத்திராஜன், பக்.84, ரூ. 16/- குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணா நகர், மூவரசம்பட்டு அருகில், சென்னை-600 091.

எத்தனையோ எழுத்தாளர்கள் உருவாகக் காரணமான ஆசிரியரின் அருமையான படைப்பு. ஆவணங்களின் கதை (ARCHIVALSCIENCE) ஆவணங்களின் முக்கியத்துவம், மக்களுக்குப் பயன்படும்விதம், குலோத்துங்க சோழன் காலத்தில் இருந்து ஆவணங்களைக் காக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இன்று வளர்ந்தோங்கிய நிலையில் ஆவணங்கள் ஆற்றி வரும் பணிகள், அவைகளைப் பாதுகாக்க எடுக்கப் படும் நடவடிக்கைகள் போன்ற முழுமையான தகவல்களை நூல் சுவைபடத் தருகிறது. ஆசிரியரின் உழைப்பை நூல் முழுக்கக் காண முடிகிறது. இத்துறையில் இதுவே தமிழில் வெளிவரும் முதல் நூல் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறுவர் இலக்கியத்தில், அறிவியல் பிரிவுக்குப் பெருமை சேர்க்கும் அரிய படைப்பு.

இணைந்திடுவோம் வாருங்கள் (இரு தொகுதிகள்), மதிஒளி, படங்கள் மணியம் செல்வன், பக் 32, (ஒவ்வொன்றும்.), ரூ.12/- (ஒவ்வொன்றும்), விற்பனை உரிமை பாரி நிலையம், 184 பிராட்வே, சென்னை-108.

திறமை மிக்க கவிஞரும், ஆற்றல் மிக்க ஓவியரும் ஒத்துழைத்தால் எத்தகைய அற்புதத்தை சாதிக்க முடியும் என்பதற்கு இந்த இரண்டு சிறுவர் பாடல் தொகுதிகளும் சான்று கூறுகின்றன. வலது பக்கம் முழுக்க நெஞ்சை அள்ளும் பாடல்கள். இடது பக்கம் முழுவதும் வண்ணப் படங்கள். பாடல்கள் கொஞ்சுகின்றன. படங்களும் போட்டி போட்டுக் கொண்டு சொக்க வைக்கின்றன. இதோ ஒன்று மாதிரிக்கு;

எத்தனை மதங்கள் ஒன்று
சேர்ந்தது எங்கள் பாரதம்
எத்தனை எண்ணங்கள் ஒன்று
சேர்ந்தது எங்கள் பாரதம்
எத்தனை உண்மைகள் ஒன்று
சேர்ந்தது எங்கள் பாரதம்
எத்தனை உறவுகள் ஒன்று
சேர்ந்தது எங்கள் பாரதம்



கோடை விடுமுறைப் போட்டி I முடிவு

கோடை விடுமுறைப் போட்டியை அறிவிக்கும் போதே வழக்கமான தில்லுடன்தான் அறிவித்தோம். எதிர் பார்த்தபடியே ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டு, ஆசிரியரை உண்டு இல்லை என்று தீர்த்துக் கட்ட முயன்றிருக்கிறார்கள்! மூட்டை மூட்டையாக போட்டிக்கான விடைகளைத் தூக்கிக் கொண்டு அஞ்சலகத்தில் இருந்து பணியாளர்கள் வந்தபோது திணறிப் போனோம். பெரும்பாலானவர்கள் சரியான விடையையே ஒட்டி அனுப்பியிருந் தார்கள்.

சரியான விடை

1. அன்பின் சின்னம் - தாஜ்மஹால்
2. தொண்டின் சின்னம் - அன்னை தெரசா
3. வீரத்தின் சின்னம் - சத்ரபதி சிவாஜி.
4. தியாகத்தின் சின்னம் - அன்னை கஸ்தூரிபாய்.
5. சேமிப்பின் சின்னம் - தேனீ.
6. அமைதியின் சின்னம் - புறா
7. சத்தியத்தின் சின்னம் - காந்தி.
8. சுதந்திரத்தின் சின்னம்- சுதந்திர தேவியின் சிலை.
9. மது ஒழிப்பின் சின்னம்- இராஜாஜி
10. பொறுமையின் சின்னம்- கழுதை
11. ஒற்றுமையின் சின்னம்- காகம்.
12. விடா முயற்சியின் சின்னம்- ராபர்ட் புரூஸ்
13. கருணையின் சின்னம்- சிபி
14. பக்தியின் சின்னம் - கண்ணப்ப நாயனார்.
15. சம நீதியின் சின்னம்- ஆராய்ச்சி மணி.
16. தந்திரத்தின் சின்னம் - நரி.
17. நல்வாழ்வின் சின்னம் - வாழையடி வாழை
18. புரட்சியின் சின்னம் - லெனின்
19. கொடையின் சின்னம் - கர்ணன்
20. அடக்கத்தின் சின்னம் - தலை சாய்ந்த கதிர்கள்.
21. நன்றியின் சின்னம் - நாய்
22. உழைப்பின் சின்னம் - உழைப்பாளர் சிலை
23. எளிமையின் சின்னம்-வினோபா பாவே
24. அடிமை ஒழிப்பின் சின்னம் - அப்ரகாம் லிங்கன்

குலுக்கல் முறையில் சரியான விடை எழுதியவர்களையும், இரு தவறு செய்தவர்களையும் தேர்ந்தெடுத்தோம். ரூபாய் இருபது முதல் பரிசாகப் பெறுவோர்: (எல்லாம் சரியாக எழுதிய வர்கள்.)

1.ஜெ.இளஞ்செழியன், திருச்சி-14. 2. கே. கே.ராஜராஜேஸ்வரி, கோவை-4. 3. எஸ். கதிரன், மண்ணிப் பள்ளம் P.O. 4. இ.எழிலரசி, புதுவை-10. 5.க.தஞ்முதீன், குருவிக்கரம்பை.

ஆறுதல் பரிசு. (இரு தவறு செய்தோர்) ரூபாய் பத்து பெறுவோர்:

1.டி.ஸ்வாதிப் பிரியா, சேலம்-5. 2. மு.ப.கௌதம் பாரதி, தேவ கோட்டை. 3. அ.வீனா செல்லமேரி, கல்கத்தா-13 . 4.எஸ்.எச்.சையது கரீம், சத்தியமங் கலம். 5.ஜி.கார்த்திக், கல்கத்தா-40.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு அசரவைத்தவர்களுக்கு நன்றி!

சத்தியம் சாந்தி சக்தி சேர்ந்தது எங்கள் பாரதம்

புத்தியில் உயர்ந்த புனிதம் சேர்ந்தது எங்கள் பாரதம்.

என்சிஆர்டிஈ, தகுதிமிக்க ஒரு படைப்புக்குப் பரிசு வழங்கி இருப்பதை எண்ணிப் பெருமைப் படலாம். மேல் நாட்டுப் புத்தகங்களைப் போல் மனத்தை மயக்கும் தயாரிப்பு. பரிசளிக்க முற்றிலும் ஏற்றது.


ரோஜாப்பூ பரிசு, புவனை கலைச் செழியன், பக்.80, ரூ.15/- குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணா நகர், (மூவரசம்பட்டு அருகில்), சென்னை–600 091.


நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறுவர் இலக்கியம் படைத்துவரும் ஆசிரியரின் மணியான சிறுகதைத் தொகுப்பு. கோகுலத்தில் வெளி வந்தவையும் இருக்கின்றன. கதைகள் ஒவ்வொன்றும் ஒரு வித்தியாசமான கதைக் களம். தெளிவான நடையில் ஆசிரியரின் முதிர்ந்த அனுபவம் பளிச்சிடுகிறது. சிறுவர் இலக்கியத்தின் கதைப் பிரிவில் சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

கொன்றை வேந்தன் கூறும் கதைகள். பூவை அமுதன், பக் 78, ரூ.11.25, வசந்தா பிரசுரம், 6.ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033.

கொன்றை வேந்தன் சுட்டிக் காட்டும் நல்லுரைகளில் இருந்து மணியான ஆறு கருத்துகளைத் தலைப்பாக வைத்து சிறுகதைத் தொகுப்பாகத் தந்திருக்கிறார் ஆசிரியர். 'வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை', குறும்புத் தனம் மிக்க சிறுவர்கள் கொள்ள வேண்டிய பண்புகளை மிக அழகாக வலியுறுத்துகிறது. ஆசிரியர், கோகுலம் வாசகர்களுக்குப் புதியவர் அல்ல. படிக்க வேண்டிய படைப்பு.

குட்டிக் காரி அம்மாக் காரியிடம் எப்படிப் போகும்?





கலைப் பொருள் செய்வோம்!

கடந்த ஆண்டு ஆகஸ்ட் கோகுலத்தில் "விரல்கள் அசைய, மலர்கள் சிரிக்கும்" என்ற கட்டுரை வெளியாகியிருந்தது. மிகக் குறைந்த கட்டணத்தில், சிறுவரின் பொழுது போக்கு ஆர்வத்திற்கு ஊக்கமளிக்க பயனுள்ள கலைப் பொருள்களைச் செய்யக் கற்றுக் கொடுத்து மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றி வரும் "ஜவகர் பால பவனின்" பணிகளை அதில் வெளியிட்டிருந்தோம். இவற்றில் ஒன்றிரண்டையாவது கோகுலத்தில் வெளியிட்டால் வெளியூரில் உள்ள வாசகர்களும் பயனடையலாமே என்று கேட்டு ஏராளமான பெற்றோரும் வாசகர்களும் கடிதம் எழுதியிருந்தனர். அதன் விளைவே இந்தக் கட்டுரை. இதை வழங்கியிருப்பவர் உங்களைப் போன்ற ஆயிரக்கணக்கான சிறுவர்க்கு ஆண்டு தோறும் இத்துறையில் பயிற்சி அளித்து வரும் சென்னை ஜவகர் பால பவனின் பயிற்சியாளர் திரு கே. குப்புராஜ்.

இந்த அழகான சுவர் மாட்டியைப் பாருங்கள். இதே போன்ற அழகுமிக்க ஒன்றை நீங்களே செய்யலாம்.

தேவையானவை :

1. இங்கே வெளியாகியுள்ள படத்தின் ஏ, பி, சி, டி ஆகிய 4 பாகங்களையும் ஒட்டி, வெட்டிக் கொள்ளத் தேவைப்படும் அளவுக்கு இலேசான வேஸ்ட் (Waste) அட்டைத் துண்டுகள். பழைய நோட்டின் பைண்டு அட்டை கூடப் போதும்.

2. 15½ அங்குல நீளம், 10½ அங்குல அகலம் கொண்ட வேஸ்ட் அட்டை அல்லது பிளைவுட் அல்லது மெல்லிய மூங்கில் தட்டி. இதுதான் பொம்மையை ஒட்ட வேண்டிய Base.

3. தையல் கடையில் வெட்டி வீணாகும் கலர்த் துணி பிட்டுகள்.

4. பழைய ஸ்பாஞ்ச் பிட்டுகள். அல்லது பழைய வேஸ்ட் பஞ்சு.


5. பழைய வண்ண உல்லன் நூல்கள், ஜரிகைத் துண்டுகள், பார்டர்கள், வண்ண நூல்கள்.

6. பெவிகால் அல்லது கோந்து.


7. ஊசி, பிளேடு, கத்தரிக்கோல்.


தலைசிறந்த பிரில்® தயாரிப்புகள் !
• இங்க் (INK) • கம் (GUM)
• பேஸ்ட் (PASTE)
• ஜியாமெட்டரி பாக்ஸ் (GEOMETRY BOX)
• கலர் கிரேயான்கள் (COLOUR CRAYONS)
• பால் பென்கள் (BALL PENS) • ரீ-பில்கள் (REFILLS)
• பென்கள் (PENS) • பென்சில் ஷார்ப்பெனர் (PENCIL SHARPENER)
• கலர் ஸ்கெட்ச் பென்கள் (COLOUR SKETCH PENS)
இண்டஸ்டிரியல்
ரிஸர்ச்
கார்ப்பொரேஷன்
பெங்களூர்-560 055
போன்: 3341567
சென்னை-600 041
போன்: 411166
ADWAVE/IRC/4727/TAM


A



B



C



8. வாட்டர் கலர் அல்லது இங்க்


9. ஏதாவது வண்ண ரிப்பன் அல்லது வண்ணக் காகிதம்.

10. 6 அங்குல மெல்லிய நூல் கயறு.

செய்கின்ற முறை :

1. A B C D நான்கு பாகங்களையும் மெல்லிய அட்டையில் ஒட்டி வெட்டி வைத்துக் கொள்ளவும். இந்தப் பக்கத்தையே Xerox செய்தும் பயன் படுத்தலாம்.

2. நம் உடம்பில் சதைப் பற்று இருப்பது போல் பொம்மையின் 4 பாகங்களுக்கும் (ABCD) சதைப் பற்று உண்டாக்க வேண்டும். இதற்கு, ஸ்பாஞ்ச் அல்லது பஞ்சுத் துண்டுகளை இந்த நான்கு பாகங்களுக்கும் ஒட்ட வேண்டும். முதலில் கோந்தைத் தடவி விட்டு, பிறகு பஞ்சை சிறு சிறு துண்டுகளாக்கி வைத்தால் ஒட்டிக் கொள்ளும். பிறகு வண்ணத் துணி பிட்டுகளை அதன் மேல் வைத்து மூடி பின்பக்கம் மடக்கி ஒட்டி விடவும். இது நன்றாக அமைந் தால்தான் பொம்மையின் வடிவம் நன்றாக இருக்கும்.



இதற்குமேல், பொம்மைக்கு உடையை ஒட்டவும். சுருக்கங்கள், டிசைன் எல்லாம் உங்கள் கற்பனையைப் பொருத்தது.

3. தலைப் பகுதிக்கு மட்டும் கறுப்பு உல்லன் நூலைக் கொண்டு வளைத்து வளைத்து சுற்றவும். உல்லன் நூல் கிடைக்காவிட்டால் கறுப்பு நூலை கன மாகச் சுற்றவும். சுற்றிய பிறகு, பின்னால், ஒரு காகிதத் துண்டை வைத்து ஒட்டி விடவும். இது நூல் பிரியாமல் இருக்க.

4. புருவங்கள், கண்கள், மூக்கு, வாயை அழகாக வரைந்து கொள்ளவும். வரையத் தெரியாதவர்கள் இதற்கென இங்கே உள்ள முகத்தின் படத்தை வெட்டி ஒட்டி விடவும்.

5. இப்பொழுது பொம்மையின் 4 பகுதிகளும் ஒட்டத் தயாராகி விட்டன. இனி இவைகளை ஒட்ட வேண்டிய Base தயாராக வேண்டும். இப்பொழுது 15½ அங்குலம் X 10½ அங்குல அளவுள்ள அட்டையை அல்லது பிளைவுட்டை அல்லது மெல்லிய மூங்கில் தட்டியை எடுங்கள். 6 அங்குல வண்ண நூல்



கயிறை இதன் மேல் பக்கத்தில் (தலைப் பக்கத்தில்) துளையிட்டு முடி போட்டு, முடி உள்பக்கம் வரும்படி பண்ணி விடவும். (இது சுவரில் ஆணியில் மாட்ட) இந்த அட்டை அல்லது பிளைவுட்டின் மேல் அழகான வண்ணக் காகிதம், அல்லது துணியைக் கோந்து தடவி, பின் னால் மடக்கி ஒட்டி விடவும். சுருக்கம் விழாது கவனித்துக் கொள்ளவும்.

6. இந்த Base-ன் கீழ்ப்பாகத்தைக் கூம்பு வடிவில் அமைத்தால் மிக அழகாக இருக்கும்.

7. இதன் கீழ்ப்பகுதியில், வண்ண ரிப்பனைச் சுருக்கி, தைத்து, பிறகு அப் படியே ஒட்டி விடவும். இதற்கு அழகான ஜரிகை பார்டர்களைக் கூடப் பயன் படுத்தலாம். காற்றாடிக்கு குங்கு (குஞ்சம்) வைப்பது போல் வண்ண நூலில் செய்தும் தைத்து விடலாம். அட்டை (Base)-ன் கீழ்ப்பகுதி மொட்டையாக இருக்கக் கூடாது.

9. இந்த Base-ன் மேல், பொம்மையின் 4 பாகங்களையும் நடுவில் வரும்படி வைத்துப் பார்க்கவும். தேவையானால் நகர்த்தி வைத்து சென்டர் செய்க.

10. முதலில் இடுப்புக்குக் கீழே உள்ள பாகம், இடுப்பு ஒட்டியாண பாகம், மார் பும் கைகளும் கழுத்தும், கழுத்துக்கு மேல் தலை முகம். இதுதான் ஆர்டர்.

11. தலைப் பாகத்தை மட்டும் ஒட் டாது மற்ற மூன்று பாகங்களையும், பின் னால் கோந்து தடவி Base-ல் ஒட்டி விடவும்.

12. கறுப்பு நூலைக் கொண்டு பின் னல் தயாரிக்கவும். ஒரு நுனியை தலைக் குக் கீழே வைத்து ஒட்டி, மற்றொரு நுனியை ஒயிலாக வளைத்து வெளியே ட்டி விடவும். இனிமேல், தலைப் தியை ஒட்டவும்.

13. இப்பொழுது பொம்மை, Base-ல் உட்கார்ந்து விட்டது. இனி அலங்காரம். தலைக்கு வகிடு, சுட்டி (ஜரிகை நூலைக் கொண்டு குறுக்கே வைக்கவும்). காது களுக்கு மாட்டல் (ஜரிகை நூல்), கை களுக்கு வளை (வண்ண நூல்), விரல் களுக்கு மருதாணி (வண்ண இங்க் அல்லது கலர்), சட்டையின் கைகளுக்கு பார்டர் (ஜரிகை), கழுத்துக்குக் காசு மாலை (ஜரிகை) இடுப்புக்கு பட்டை (ஜரிகை) கால்களுக்கு மருதாணி (சிவப்பு வண்ணம்) தரவும்.

உடைகளுக்கான துணிகளைத் தேர்ந் தெடுக்கும் போது கூடுமானவரை, Base லைட் கலராக இருந்தால், பளிச் கலரைத் தேர்ந்தெடுங்கள். உடைகளணியாத பாகங்களான இரண்டு கைகள் (முழங் கைக்குக் கீழே) முகம், பாதங்கள் இவை மட்டும் உடம்பின் கலரோடு ஒட்டி வரும் சந்தனக் கலர், Flesh கலர், வெளிர் ரோஸ் கலராக இருப்பது அவசியம். உடைகளுக்கு சுருக்கம் வரும்படி அமைக்கும் போது இயற்கையாக அமையும்படி பெரியவர்களைக் கேட்டு ஒட்டவும். சுருக்கம் அவசியம் இருக்க வேண்டும்.

இப்பொழுது நீங்களே தயாரித்த சுவர் மாட்டி தயார். முதல் தடவை பண்ணும் போதே மிக நன்றாக வர வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. உங்களுக்குப் பிடித்த எந்த பொம்மையை வேண்டு மானாலும் நீங்கள் இப்படிச் செய்யலாம்.


இப்படி நாலைந்து பொம்மைகளைச் செய்து பார்த்தால், எங்கே குறை இருக் கிறது என்பது உங்களுக்கே தெரியும். அடுத்த முறை இதைச் சரிசெய்து கொள்ளலாம்.

எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்க்கலாம்!

"நம்ம கடையிலே ஒரு மாசம் முந்தி நீதானே ரேடியோ வாங்கினாய்? எல்லா ஸ்டேஷனும் எடுக்குதா?"

"அது என்னமோங்க போலீஸ் ஸ்டேஷன், ரயில்வே ஸ்டேஷன் மட்டும் எடுக்கலேங்க!"

- ஏ. ஹரிகிருஷ்ணன்





திருடத் தெரியா முகமூடி!

ஏதாவது ஒரு காரணத்திற்காக முகத்தை மறைத்துக் கொள்ளப் பயன் படுவதுதான் முகமூடி. இது வேடிக்கை காட்டுவதற்காக இருக்கலாம். ஒரு நாட்டின் கலாசாரப் பெருமைகளை விளக்குவதாக இருக்கலாம். அணிந்து கொண்டு நடிப்பதற்காக இருக்க லாம். வெப்பத் தாக்குதலில் இருந்து காத்துக் கொள்வதற்காக இருக்கலாம்.

உலக நாடுகள் எல்லாவற்றிலும் முக மூடிகளைப் பயன்படுத்தும் வழக்கம் பல நூறு ஆண்டு களாக இருந்து வருகின் றது. எகிப்திய மன்னர் களும், அரசிகளும் தங்கத்தால் ஆன கலைப் பொலிவு மிக்க முகமூடிகளை அணிந்து அரசவை யில் காட்சி தந்தார்கள். இவைகளில் விலை மதிப்பு மிக்க இரத்தினக் கற்கள் பதித்து இருக்கும்.

ரோமானியர்கள் போரிடும்போது இரும்பாலும், கனத்த தோலாலும் ஆன முகமூடிகளை அணிந்திருந்தார்கள். கிரேக்க மன்னர்களும், பிரபுக்களும் மரங்களால் ஆன முகமூடிகளை பண் டிகை, திருவிழா நாட்களில் பயன்படுத்தினர். இவை வண்ணச் செறிவோடு, கலைநயத்தோடு இருந்தன.

நம்முடைய நாட்டில் முகமூடி அணியும் வழக்கம் இராமாயண காலத்தில் இருந்தே இருந்து வந்துள்ளது. செய்திகளைக் கொண்டு செல்லும் வீரர்கள், முகமூடி அணிந்திருந்தார்கள்.

பொதுவாக எல்லா நாடுகளிலுமே புராண நாடகங்களை நடிக்கும்போது அந்தப் பாத்திரங்களுக்கு ஏற்றபடி முகமூடி அணிந்து நடித்திருக்கிறார்கள். இந்திய கிராமங்களில் தெருக்கூத்துகளில் இராவணன் வேடத்தை நடிப்பவர் முகமூடி அணிந்தே நடிப்பது எத்தனையோ நூற்றாண்டுகளாக இருந்து வரும் வழக்கம். இவை அந்தந்த வட்டாரங்களில் எளிதில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே தயாரிக்கப்பட்டு அவ்வப்பொழுது மெருகூட்டப்பட்டவை.

இவை தவிர, காஸ் வெல்டிங் செய்பவர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், கடலுக்குள் மூழ்கி முத்துக் குளிப்பவர்கள் இதற்கென்று உள்ள தனி வகை முகமூடிகளை அணிகிறார்கள்.


புலிக்குப் பிடித்தமான இரை மயில். புலியைப் பார்த்தால் மயில் அசைவற்று நின்றுவிடும். இதைப் பயன்படுத்தி, மயில் வேட்டைக்காரர்கள், புலி முகமூடி அணிந்து காட்டுக்குப் போவார்கள். ராஜஸ்தானில் இதைப் பற்றி நிறையக் கதைகள் உண்டு.

ஆனால் 'முகமூடி' என்றதும் நம்முடைய நினைவுக்கு வருவது முகமூடித் திருடர்களின் நினைப்பே! தங்களுடைய உண்மையான முகம் தெரியக் கூடாது என்ற எண்ணத்தோடு முகத்தைக் கறுப்புத் துணியால் மறைத்துக் கொண்டு, இவர்கள் கொள்ளையிடுகிறார்கள். இது உலகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

பிளாஸ்டிக் வருவதற்கு முன், குழந்தைகளை மகிழ்விக்க, காகிதத்தில் ஆன வண்ண வண்ண முகமூடிகள் வந்தன. இவை முகத்தை மறைக்கும் வகையில் வட்டமாக இருக்கும். இவற்றின் காதுப் பக்கங்களில் சிறு ஓட்டை இருக்கும். இதில் நூலைக் கட்டி, தலைக்குப் பின்னால் முடி போட்டு முகத்தில் அணிந்து விளையாடுவார்கள். பிளாஸ்டிக் வந்த பிறகு எல்லா விலங்குகளுமே முகமூடி வடிவத்தில் கண்களைக் கவரும் வகையில் வந்துவிட்டன. இவைகளை அணிவதும் எளிது. இவை இலேசாகவும் இருக்கும். அழுக்கானால் எளிதில் சோப்புப் போட்டு 'பளிச்' சென்று வைத்துக் கொள்ளலாம். வால்ட் டிஸ்னியின் மிக்கி மௌசும், டக்கும்தான் ஏராளமாக விற்பனை ஆகின்றன. எல்லாக் குழந்தைகளையும் இவை மகிழ்விக்கக் கூடியவை.

அட்டையில்: என்.நிரஞ்சனா, ஆர்.பிரசன்னா
வண்ணப்படம் : யோகா

புகைப்படக் கலையின் துவக்கம்



''புகைப்படக்கலையின் வளர்ச்சிக்குக் காரணமானவர் இவர்தான்'' என்று குறிப்பிட்டு எவரையும் கூற முடியாது. புகைப்படக் கலையின் இன்றைய வளர்ச்சிக்கு வழி வகுத்தவர்கள் பலர்

பதினோராம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை, ''கேமரா அப்ஸ்கியூரா'' என்ற கருவியின் உதவியைக் கொண்டு ஒரு பொருளின் பிம்பத்தை ஒரு வெள்ளைத் தாளில் விழச் செய்து, அதனையே சித்திரமாகத் தீட்டினார்கள். சொல்லப் போனால், அது சித்திரம் தானேயொழிய, புகைப்படம் அல்ல.

1568 ல் ''டானில்லோ பார்பரோ'' என்பவர், கேமர் அப்ஸ்கியூரா என்ற கருவியில் ஒரு லென்ஸ்ஸைப் பொருத்தி பேப்பரில் விழும் பிம்பத்தைத் துல்லியமாக்கினார்.

1802 ல் ''தாமஸ் வெட்க்வுட்'' என்பவரும், ''சர் ஹம்ரி டேவி'' என்பவும்; இணைந்து ரசாயனப் பொருட்கள் தடவப்பட்ட காகிதத்தில் பிம்பத்தைத் தற்காலிகமாக விழச் செய்தார்கள். 1816 ல் ''ஜோஸப் நீப்ஸ்'' என்பவர் மைக்கிராஸ் கோப் லென்ஸ்ஸைப் பயன்படுத்தி நெகடிவ் கிடைக்கச் செய்தார். ஆனால் இவர்களில் யாருமேபோட்டோ பிரிண்ட்டை உருவாக்கவில்லை.


1839 ல் ''லூயிஸ் டாகுரே'' என்பவர்தான், நெகடிவிலிருந்து, முழுமையாக ஒரு புகைப்படப் பிரதியை எடுத்துச் சாதனை புரிந்தார்.

இறுதியில் 1888 ல் ஈஸ்ட்மென் டிரைபிளேட் அண்டு ஃபிலிம் கம்பெனி என்கிற நிறுவனம் ஒரு பாக்ஸ் கேமராவை உருவாக்கியது. கேமராவில் நூறு புகைப்படங்கள் எடுப்பதற்குத் தேவையான பிலிம்ரோலைப் பொருத்தி, ஈஸ்ட்மென் கம்பெனி, கேமராவை விற்பனை செய்தது.

நூறு புகைப்படங்களையும் எடுத்த பின் கேமராவை, கம்பெனியிலேயே கொடுத்தால், அவர்கள் பிலிமைக் கழற்றிக் கழுவி, பிரிண்ட் போட்டுக் கொடுப்பார்கள். கூடவே கேமராவிலும் இன்னும் நூறு புகைப்படங்கள் எடுக்கத் தேவையான பிலிமையும் பொருத்தித் தருவார்கள்.

இதுவே நவீன போட்டோ கிராபி கலையின் துவக்கம்.

- தக்கோலம் அ. முஸ்தபா.



சார் தபால்

கவனமாக இருங்கள்!

• ஜூன் மாதத் தலையங்கம் நல்ல வழிகாட்டி. குறிப்பாக, 'மனித நேயமில்லாத பக்தியும், பண்பாடுகளை வளர்க்க இயலாத கல்வியும் பயனற்றவை' என்கிற தேசத்தந்தையின் பொன் மொழிகளை ஒவ்வொருவரும் கடைப்பிடித்தாக வேண்டும். - அரக்கோணம், எல். கோபாலகிருஷ்ணன்.

• "விடுமுறையில்" - கதை அருமை. கோடை விடுமுறையில் படித்தவர்கள் படிக்காதவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பதை விட சந்தோஷம் வேறு எதிலும் கிடைக்காது என்பதை அழகாக உணர்த்தியது - கெட்டி செவியூர், கே. பழனிச்சாமி; ஏரிப்பட்டரை, இ.எஸ். லலிதா; கோட்டக்கரை இ. இராமசாமி; சிதம்பரம் ராஜமாதங்கன், மற்றும் பலர்.

• "முத்து முத்தான முல்லா கதைகளி"ன் கருத்துகள் யோசிக்க வைத்தன. மிகவும் அருமை. - விருதுநகர், மு. முத்து லட்சுமி; விசலூர், ஜி.ஜி. கிருஷ்ணன்; மேலப்பாதி, நாகராஜன் மற்றும் பலர்.

• 'அறிவொளி இயக்கம்' அனல் பறக்க சூடு பிடித்திருக்கும் வேளையில் "விடுமுறையில்.." சிறுகதை சரியான சமயத்தில் 'புயலாய்' அடித்து 'அறிவொளி இயக்கத்தை' கொழுந்து விட்டு எரியும் நெருப்பாய் மிளிரச் செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை! - புலியூர், ராஜாபாதர்.

• வண்ண லேபிள்கள் அனைத்தும் கண்களைக் கவர்ந்தன. - சங்கராபுரம், ஆ. முருகன்.

• 'கோகுலம்' லேபிள்களை என் தங்கை, அண்ணன் மகள், மகனுக்கு அனித்து 'நல்ல அண்ணன் - நல்ல சித்தப்பா' பட்டங்களைப் புகழாரம் பெற்றேன். தாங்க்ஸ் டூ எடிட்டர். - எழுகினறு, பாலாஜி.

• 'கேட்கட்டுமா டாக்டர்?' பகுதியில் வாசகர்களின் ஒவ்வொரு கேள்விக்கும் டாக்டர் கணேசன் அவர்கள் கூறும் பதில் என்னைப் போல் டாக்டராக விரும்பும் அனைவருக்கும் உற்சாக டானிக்! - கோட்டக்கரை, இ. இராமசாமி மற்றும் பலர்.

• 'காலப் பெட்டகம்' கட்டுரை கால காலத்துக்கும் பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய பெட்டகம்! எவ்வளவு தகவல்கள்! - அரக்கோணம், ஜி. புவனேஸ்வரி.

• 'ஹலோ டாக்!' ஒவ்வொன்றும் சூப்பர் கிப் இட் அப்! - கோட்டக்கரை இ. இராமசாமி.

• அபிராமி பிரியப்போகிறாள் என்பதை நினைக்கும் போது, ஏதோ எங்கள் குடும்ப உறுப்பினர் எங்களை விட்டுப் பிரியப் போவது போன்ற வருத்தம் ஏற்பட்டு விட்டது! - பாண்டி முத்து கிருஷ்ணன் மற்றும் பலர்.

• உண்மை எப்போதும் செத்து விடுவதில்லை, அது உறங்குவது போல் இருந்தாலும் ஆபத்து வரும் போது விழித்துக் கொள்ளும் என்ற பாடத்தை உணர்த்தியது 'இருட்டுப் பழி" கதை. - மேலப்பாதி, என். இராஜலெட்சுமி.

• "உப்பில்லா பண்டம் குப்பையிலே , உப்புள்ள பண்டம் தொப்பையிலே என்ற சிரிப்பு ஏற்கெனவே வெளி வந்த ஜோக். இனிமேலாவது கவனமாக எச்சரிக்கையாக இருங்கள் சார். - குன்றக்குடி, எஸ். பாலசுப்பிரமணியன், எஸ். முத்துக்குமார், ஆர். ரெங்கசாமி, ஆர். சிவசங்கரகுமார், கே.வி. மருது பாண்டியன், எம். நாகராஜன்.

• பாடத் தெரியாத பாட்டி சிறுகதை இறுதி வரை சுவையாக; சஸ்பென்ஸாக இருந்தது. - திருப்புறம்பியம் கே.பி. சரவணன்; அணைக்கல்மேடு சி. மாதேஸ்வரன் மற்றும் பலர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.

வென்றிடும் ப்ரைம்



அறிமுகமாகிறது ப்ரைம் ஜீனியஸ் மற்றும் ப்ரைம் மெரிட். உயர்ந்த தரம்வாய்ந்த காம்பாஸ் பாக்ஸ்கள்–விசேடமாக துல்லியமான உன்னத கணிப்பிற்காக உருவாக்கப்பட்டது.

உங்கள் சின்னஞ்சிறுவர்களுக்கு ப்ரைம் அனுகூலத்தை வழங்குங்கள்.

PIDILITE
PRIME GENIUS
PRIME MERIT
MATHEMATICAL DRAWING INSTRUMENTS

A PIDILITE PRODUCT

PID 8 94 TM

REGISTERED NO. TN MS (5) 281
Registered as Newspaper in Srilanka

